உ

தேவிசகாயம்.

# ANUBOGAVYTHIA

## BRAMAH RAHASIAM

# அநுபோகவயித்திய

## பிரம்மரகசியம்.

ஏழாம்பாகம்.

இஃது,

ஜெகந்நாதஸ்தலம்

## கோஷாயிசுவாமிகள்

அநுக்கிரகத்தின்படி

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-புரசை.

1914

Registered Copyright.

உ

தேவிசகாயம்.

# முகவுரை.

இந்த அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்த காரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இங்ஙனம் முகவுரையெனப்பெயர்வகித்து சுருக்கமாக் எழுதிமுடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகன்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயிசுவாமிகளால் நெடு வருடங்களாக காசிமுதலான திவ்யக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்குஉபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும், இன்னும் சிலகைமுறைகளேயும்சேர்த்து யின்னூலுக்கு போதுமானபொருளேச்சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-ள-ள-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமி முதலியார், அநுமதியின்றி இன்னூலே பிறர் எவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர் காப்பி ரயிட் செய்திருக்கிறது.

{ அநுபோகவயித்திய பிரம்மரகசியம் 8-காண்டங்களும் தயாராயிருக்கிறது. }

| | | | |
|---|---|---|---|
| காண்டம் 1-க்கு விலே அணா | 0 | 8 | 0 |
| ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம் | 1 | 8 | 0 |
| ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம் | 3 | 0 | 0 |

**V. P.** போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

10-புத்தகம் மொத்தமாய்வாங்கிஞல் - 1 - புத்தகம் கமிஷன் கொடுக்கப்படும்.

ரிப்ளே கார்ட்யெழுதிஞல் பதில்சங்கதிகிடைக்கும்.

---

☞ பூ. சு. குப்புசாமி முதலியார்,
ஸ்ரீசுந்தரவிலாசம் பிரஸ்.
பிரம்பூர் பாறக்ஸ் போஸ்ட் மதராஸ்.

தேவிசகாயம்.

# அவுஷதங்களின் அகராதி.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| முகவுரை | 9 |
| சப்ததாதுக்கள் | 10 |
| சப்ததாதுக்களின்சுத்தி | 11 |
| சொர்னபரிக்ஷை | 0 |
| சொர்னமாரணம் | 0 |
| சொர்னபஸ்மத்தின்குண | 12 |
| அபக்குவசொர்ன பஸ்மத்தாலுண்டாகும் தோ | 13 |
| சொர்னபஸ்ம அனுபானம் | 0 |
| வெள்ளிபரிக்ஷை | 14 |
| வெள்ளிபஸ்மம் | 0 |
| வெள்ளிபஸ்மத்தின்குணம் | 15 |
| அபக்குவமான வெள்ளி பஸ்மத்தாலுண்டாகும் | 0 |
| வெள்ளிபஸ்மஅனுமானம் | 0 |
| தாமிரபரிக்ஷை அல்லது செம்புபரிக்ஷை | 16 |
| தாமிரதோஷம் | 0 |
| செம்புசுத்தி | 0 |
| செம்புபஸ்மம் | 17 |
| செம்புபஸ்மகுணம் | 18 |
| அபக்குவமான செம்புபஸ்மத்தாலுண்டாகுந் | 0 |
| செம்புபஸ்ம அனுமானம் | 19 |
| நாகசுத்தி | 0 |
| நாகபஸ்மம் | 0 |
| நாகேஸ்வரஞ்செய்யுமுறை | 20 |
| காரியபஸ்மகுணம | 21 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| அபக்வநாக பஸ்மத்தாலுண்டாகும் தோஷம் | 21 |
| நாகபஸ்ம அனுபானம் | 0 |
| நாகேஸ்வர அனுபானம் | 0 |
| வங்கபரிட்சை | 22 |
| வங்கபஸ்மம் | 0 |
| வங்கேசுவரம்செய்யுமுறை | 0 |
| வங்கபஸ்மகுணம் | 23 |
| வங்கேசுவரகுணம் | 0 |
| அபக்குவவங்கபஸ்மதோஷ | 0 |
| வங்கபஸ்ம அனுபானம் | 0 |
| ஜஸதபஸ்மம் | 25 |
| தராபற்பத்தின்குணம் | 0 |
| அபக்குவசத்துப்பற்பதோஷ | 0 |
| சற்றுபற்பஅனுபானம் | 26 |
| லோகபேதங்கள் | 0 |
| காந்தத்தின்பேதங்கள் | 27 |
| காந்தசுத்தி | 0 |
| காந்தபற்பம் | 0 |
| காந்தசிந்தூரம் | 0 |
| காந்ததுரிதி | 0 |
| காந்தபஸ்மத்தின்குணம் | 28 |
| காந்தசிந்தூரகுணம் | 0 |
| அபக்குவகாந்தபற்ப சிந்தூரதோஷங்கள் | 0 |
| லோஹபாகபேதங்கள் | 29 |
| லோஹசுத்தி | 0 |
| லோஹமார்ணம் | 30 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| லோஹஸிந்தூரம் | 31 |
| லோஹதுரிதி | 0 |
| லோஹபற்பகுணம் | 0 |
| அசுத்தலோகதோஷம் | 32 |
| லோஹயோனிலக்ஷமந்திரம் | 0 |
| லோஹமார்த்தனமந்திரம் | 0 |
| பலிதானமந்திரம் | 0 |
| பக்ஷணமந்திரம் | 33 |
| லோஹவிசேஷகுணம் | 0 |
| அயபற்பத்தின்குணம் | 0 |
| அசுத்த அயதோஷம் | 0 |
| லோஹபற்ப அனுபானம் | 0 |
| மண்டூரம் அதாவது சிட்டம் சுத்தி | 34 |
| மண்டூரபற்பம் | 0 |
| மண்டூரகுணம் | 35 |
| லோஹாஷ்டக பற்பவிதி என்றால் சுவர்ணாதிதாதுக்கள் பற்பமாகும்முறை | 0 |
| நவலோஹபற்பபரீக்ஷை | 36 |
| சூதாதிபற்பகுணம் | 0 |
| நவலோஹபற்பங்கள் உட்கொள்வோர் விடவேண்டிய பதார்த்தங்கள் | 0 |
| உபதாதுக்கள் | 37 |
| நிமிளையின்பேதங்கள் | 0 |
| நிமிளைலக்ஷணம் | 0 |
| சுத்தி | 0 |
| பொன்நிமிளைபற்பம் | 38 |
| பொன்நிமிளைபற்பத்தின்கு | 39 |
| அசுத்தநிமிளையால் உண்டாகும் தோஷங்கள் | 0 |
| பற்பஅனுபானங்கள் | 0 |
| மயில்துத்தத்தின்சுத்தி | 40 |
| மயில்துத்தத்தின்சத்து | 0 |
| மற்றொருவித மயில்துத்தத்தின் சுத்தி | 0 |
| மயில்துத்தத்தின் குணமும் தோஷமும் | 41 |
| மயில்துத்த அனுபானங்களும்தீரும்வியாதிக | 0 |
| பால்துத்தத்தில்சுத்தி | 0 |
| கபரிஅல்லது மடல்துத்தத்தின் சுத்தி | 42 |
| கபரியின்குணம் | 0 |
| அசுத்தகபரிதோஷம் அதற்குப் பரிகாரம் | 0 |
| கபரிஅனுபானங்கள் | 0 |
| அஞ்சனங்கள் | 43 |
| அஞ்சனங்கள்சுத்தி | 0 |
| நீலாஞ்சனகுணானுபானங்க | 0 |
| மனோசிலைபேதங்கள் | 44 |
| மனோசிலைசுத்தி | 45 |
| மனோசிலையின்குணம் | 0 |
| மனோசிலை அனுபானங்கள் | 0 |
| அசுத்தமனோசிலையின் தோஷமும்பரிகாரமும் | 46 |
| கௌரீபாஷாணசுத்தி | 0 |
| வெள்ளைபாஷாணத்தின்சுத் | 0 |
| தொட்டிபாஷாணத்தின்சு | 47 |
| அன்னபேதி | 0 |
| அன்னபேதிசுத்தி | 0 |
| அன்னபேதிசத்துவபானம் | 0 |
| அன்னபேதியின்குணம் | 48 |
| காவிக்கல்லின்பேதங்கள் | 0 |
| காவிக்கல்லின் குணம் | 0 |
| சிலாசித்து | 0 |
| சிலாசத்தின்பேதம் | 0 |
| கற்பூரசிலாசத்தின்சுத்தி | 49 |
| சிலாசத்தின்குணம் | 0 |
| அபக்குவசிலாசத்தால் உண்டாகும் வியாதி | 0 |
| சுத்தசிலாசத்தின்பரீக்ஷை | 50 |
| சாதாரண இரசங்கள் | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| கம்பில்லம் | 50 | முத்துபற்பத்தின்குணம் | 56 |
| கம்பில்லபேதங்கள் | 0 | வைரத்தின்பேதங்கள் | 0 |
| கம்பில்லசுத்தி | 0 | வைரத்தின்குணம் | 0 |
| கம்பில்லத்தின்குணம் | 51 | வைரக்கல்லின்ஜாதிபேதங் | 57 |
| போளசுத்தி போளமென்றூல்மூசாம்பரம் | 0 | வைரக்கல்லின்சுத்தி | 0 |
| | | வைரபற்பம் | 58 |
| மஸ்தகாசுத்தி | 0 | வைரபற்பகுணம் | 59 |
| பலகரைசங்கு இவைகள்சுத் | 0 | அசுத்தவைரதோஷம் | 0 |
| சத்தியக்ஷாரசுத்தி | 0 | வைரக்கல்பற்பஅனுபானங் | 0 |
| சத்தியக்ஷாரத்தின்குணம் | 0 | வைகிராந்தம் அல்லது கண்ணாடிமுதலியவைகளை அரக்கும் பிரவையின் உற்பத்தி | 60 |
| யவாக்ஷாரத்தின்சுத்தி | 0 | | |
| யவாக்ஷாரத்தின்குணம் | 52 | | |
| பஞ்சலவணசுத்தி | 0 | | |
| பஞ்சலவணத்தின்குணம் | 0 | வைகிராந்தலக்ஷணம் | 0 |
| திரிகடுகுசுத்தி | 53 | வைகிராந்தத்தின் பேதங்க | 0 |
| ஆனைதிப்பிலி | 0 | வைகிராந்தசுத்தி | 0 |
| அபினிசுத்தி | 0 | வைகிராந்தத்தின்பற்பம் | 61 |
| பெருங்காயம்சுத்தி | 0 | கஸ்தூரிமாத்திரை | 0 |
| சீரகசுத்தி | 0 | இடுப்புவலிமுதலிய வாய்வுகளுக்கு பற்று | 62 |
| ஆமணக்கு வெள்ளைநாகதந்திகளின்சுத்தி | 0 | பித்தஜ்வரத்திற்கு | 0 |
| எட்டிக்கொட்டைசுத்தி | 54 | வெள்ளைக்குஎண்ணெய் | 0 |
| நேர்வாளசுத்தி | 0 | தாகஜ்வரத்திற்கு | 63 |
| சிவதையின்சுத்தி | 0 | நடுக்கல்ஜ்வரத்திற்கு | 0 |
| சேராங்கொட்டைசுத்தி | 0 | மேகம் உக-க்கும் நெய் | 0 |
| நாபியின்சுத்தி | 0 | நாக்குப்பூச்சிவிழ | 0 |
| முதாருசிங்குபேதங்கள் | 0 | சீதபேதிக்குலேகியம் | 64 |
| முதாருசிங்கின்சுத்தி | 55 | ஜன்னிதலைநோய்க்கு | 0 |
| முதாருசிங்கின்குணம் | 0 | வாய்வுக்கு | 65 |
| நவஇரத்தினங்கள் | 0 | கண்ணோய்க்குத்தயிலம் | 0 |
| அசுத்தஇரத்தினகுணங்கள் | 0 | நேத்திர ரோகங்களுக்கும் கபால குஷ்டத்திற்கும் குமரித்தயிலம் | 0 |
| கெம்புக்கல் அல்லது மாணிக்கச்சுத்தி | 0 | | |
| கெம்புபற்பம் | 0 | தலைவலிகபாலவலிசன்னிகண்ணோய்கட்கு தயிலம் | 66 |
| கெம்புபற்பத்தின்குணம் | 56 | | |
| முத்தின்சுத்தி | 0 | நேத்திரசெவிநோய் தலைநோய்கட்கு தயிலம் | 0 |
| முத்துபற்பம் | 0 | | |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| பித்தம் கண்காசம் காதடைப்புக்குத்தயிலம் | 66 |
| நேத்திரநோய் தொண்ணூற்றுக்குந்தயிலம் | 0 |
| பீனிசவகுப்பு | 67 |
| சிருய்ப்பீனிசக்குணம் | 0 |
| நீர்பீனிசத்திற்குத்தயிலம் | 0 |
| பீனிசம்சலம்வடிதல்தலையரிப்புதும்மலுக்கு தயி | 68 |
| பீனிசம் விடாதத் தலைவலிகபாலசூலை நேத்திரவாயுவுக்குத் தயிலம் | 0 |
| மண்டையிடி கபாலசூலை பீனிசம் நாசிபுண்ணுக்குத் தயிலம் | 0 |
| சிரசுநோய் | 69 |
| விடாக்குளிர்சுரத்திற்கு | 0 |
| திரிதோஷசுரத்திற்கு | 70 |
| சன்னிசுரத்திற்கு | 0 |
| சகலசுரத்திற்கு பொதுப்பிரையோகம் | 0 |
| சகலபழஞ்சுரத்திற்கும்நெய் | 0 |
| விடாச்சுரம்வயிற்றெரிவு இருமல் சொரிசிரங்குக்கு நெய் | 71 |
| சகல சுரத்திற்கும் கண்குளிர்ச்சிக்கும்நெய் | 0 |
| மாறற்சுரம் முறைக்காச்சல் கடுங்காச்சல் அதிசாரம் விஷசுரம்அஜீர்ணம்பூதசுரம் முதலான சுரத்திற்கும் எண் | 0 |
| சீதசுரம்குளிர்காச்சலுக்கும் உட்கொள்ளும் எ | 72 |
| சுரத்திற்குத்தயிலம் | 0 |
| சுரத்திற்குநசியம் | 73 |
| சுரமுதலானதற்குஏலாதிமா | 0 |
| சுரத்திற்கு குங்குமக்குளி | 73 |
| சுரத்திற்குகோரோஜனக்கு | 74 |
| சுரத்திற்குசஞ்சீவிமாத்தி | 0 |
| சுரத்திற்குரசகற்பூரமாத்தி | 0 |
| சுரத்திற்குஇரதமாத்திரை | 0 |
| சுரத்திற்குலிங்கமாத்திரை | 75 |
| தாளகமாத்திரை | 0 |
| சுரத்திற்குபச்சைகர்ப்பூரவுண்டை | 0 |
| இரண்டாமுறை மூன்றுமுறை குளிர்சுரமுதல் சகல சுரத்திற்கும் அ | 0 |
| சகலசன்னிக்கும்பொதுப்பிரயோகம் | 76 |
| சன்னி 8-க்கும் தயிலம் | 0 |
| சன்னிவலிப்புதோஷம்பட்சவாதம்நரம்புதிமிர்வாதம்வாயுவுக்கு தயி | 0 |
| சன்னிசுரத்திற்கு மதுராதித்தயிலம் | 77 |
| சன்னிபதிமூன்றுக்கும்புறவீச்சுலிங்கமாத்தி | 0 |
| சன்னிதலைவலிக்குமாத்திரை | 0 |
| சன்னிபதிமூன்றுக்கு காலாந்தவயிரவன் | 78 |
| சன்னிபதிமூன்றுக்குமாத்தி | 0 |
| சகலசன்னிசுரம் தோஷம் வலிப்பு இளைப்புகுலைக்குபூபதிமாத்திரை | 0 |
| மூலமுளைக்கும்மூலகடுப்பு | 79 |
| இரத்தமூலத்திற்கும் மூலமுளைக்கும் எண்ணை | 0 |
| உள்மூலம் இரத்தமூலம் சீதக்கழிச்சலுக்கு | 0 |
| மூலரோகம்ஷ்டி-முளைக்கு | 0 |
| உள்மூலம்பிறமூலத்திற்கு | 80 |
| மூலக்கடுப்புஇரத்தமூலத்தி | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
| --- | --- |
| மூலவாயுமூலஉதரரோகம் வலிகுன்மம் பத்தியவாயு சந்நிவாயு உடம்புவியர்வைபசிமந்தத் | 80 |
| பித்தமூலகிராணிக்குணம் | 0 |
| சகலகிராணிக்கும் | 81 |
| சீதம்விழுவதற்கு | 0 |
| வெள்ளைக்கழிச்சலுக்கு | 0 |
| வயிறுஇரைந்துகழிதலுக் | 82 |
| கழிச்சல்சுரத்திற்குஅபின்மாத்திரை | 0 |
| கழிச்சலுக்கு | 0 |
| கசலகழிச்சலுக்குங் காந்தசெந்தூரம் | 0 |
| வயிற்றுக்கடுப்புகழிச்சலுக் | 0 |
| வயிற்றுக்கடுப்புவாய்வுக்கு | 83 |
| ஆசனக்கடுப்புக்குப்புகை | 0 |
| வயிற்றிரைச்சல்கடுப்புக்கு | 0 |
| சுரத்தின்பேரிற் காணுங் கடுப்புக்கு | 0 |
| சகலகிராணி அதிசாரவயிற்றிரச்சல் கழிச்சல் சீதரத்தம்விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்க | 83 |
| புளித்தேப்பத்திற்கு | 84 |
| ஊஷ்ணவாயுவுக்கு | 0 |
| அசீரணவாயுவுக்கு | 85 |
| மந்தவாயுவுக்கு | 0 |
| பித்தவாயுவுக்கு | 0 |
| வாயுவுச்சூலைக்கு | 0 |
| ஆனந்தவாயுவுக்கு | 86 |
| வாயுவுக்குத்துக்கு | 0 |
| வாயுப்பொருமலின்குணம் | 0 |
| குண்டலவாய்வுக்குணம் | 0 |
| குடகரிவர்யுக்குணம் | 0 |
| அஞைகதவாயுக்குணம் | 87 |
| அத்தருவாய்வுக்குணம் | 0 |
| துடிவாய்வுக்குணம் | 0 |
| சகலவாய்வுக்கு | 0 |
| வாய்வுக்குவிரோசனம் | 88 |

## அவுஷிதங்களின் அகராதி

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

# அநுபோகவயித்திய

## பிரம்மரகசியம்.

### ஏழாவதுகாண்டம்.

### விநாயகர்துதி.

காப்பு.

ஆதியெனும்பராபரமே சின்மயமேபோற்றி
அண்டரண்டம்நிறைந்த நிற்குணமேபோற்றி
சோதிமயமாய்நிறைந்த சுடரொளியேபோற்றி
சூட்சசடாதாரபீடத் துருவேபோற்றி
வேதியெனும்சுழிமுனையின் பொருளேபோற்றி
வேதாந்தமாயிரத்தின் விதிநூல்போற்றி
நீதியெனுமாதிசரு வாணியம்மாள்
நிரஞ்சனமாய்நின்றகண பதியேபோற்றி.

ஆனைப்போல்முகத்தையுடைய ஓ விநாயகரே! உற்பத்தி ஸ்திதி, சங்காரம், என்னும் முத்தொழில்கள் உன்னால் உண்டாகிறது. உலோகோபகாரமாய் தன்வந்திரியாய்அவதரித்து உலோகத்தார்படும் வியாதிகளென்கிற துயரங்களைப்போக்கினாய் உலோகோப காரார்த்தமாய் நன்மைசெய்த வுனக்கு நான் நமஸ்கரிக்கின்றேன்.

### முகவுரை.

நைமிசாரண்ணியத்தில் சநக சநந்தனாதிகள் சூதபௌராணிகரைப்பார்த்து ஓ முனிசிரேஷ்டரே! சொர்ணாதி சப்த தாதுக்களாலும், உபதாதுக்களாலும், ரஸ பாஷாணாதிவர்க்கங்களும், ஔஷதிகளும், முன்ஜென்மத்தில்செய்த தீவினை யிந்தஜென்மத்தில் வியாதிகளாக வுருவங்கொண்டு மனிதர்களை

வேதனை செய்துக்கொண் டிருப்பதைப் போக்கிவிடுமென்று சொன்னீர்கள் அவ்விருத்தாந்தத்தை சாங்கோ பாங்கமாகச் சொல்லவேண்டுமென்றுகேழ்க்க ? சூதபுராணிகர் நைமிசாரண்ணியவாசிகளைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினர்.

ஓ முனிசிரேஷ்டர்களே! நீங்கள் வினவிய வினா உலோகத்திற்கு மிகவும் நன்மைசெய்யத்தக்கது இவ்விஷயங்களைப் பற்றி பூர்வத்தில் சர்வதயாபரமூர்த்தியாய் பஞ்சகிர்த்தியங்களுக்கும்ஆதாரபூதராய் சச்சிதானந்தரூபராய் தேவர்களுக்கெல்லாந்தேவரான மகாதேவர் தமதுபிராட்டியாராகிய பார்வதிதேவியாருக்கு அருளிச்செய்த இந்தஆயுர்வேதத்தை சுகப்பிரம்மரிஷியால் நான் அனுக்கிரகம்பெற்றதை உலோகோபகாரார்த்தமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் சற்றே செவிகொடுத்துக்கேளுங்களென்று சொல்லத்தொடங்கினர்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிர்த்தியங்களுக்கும் ஆதாரபூதரான ஓ பிராணநாதா! சொர்ணநிசப்ததாதுக்கள், உபதாதுக்கள், ரசபாஷாணதிவர்க்கங்கள், மூலிகைகளென்னு மவைகளின் சுத்தி, மாரணம், பஸ்மம், அனுபானம், குணம், தோஷம், தோஷங்களுக்குப்பரிகாரமென்னு மிவைகளை சவிஸ்தாரமாய்ச்சொல்லவேண்டுமென்று பார்வதிதேவியார்கேட்டருள; பரமேஸ்வரர்? தாமரையிதழ்களைப்போல்கண்களும், பூர்ண சந்திரனைப்போலொத்தமுகமும், சொர்னகும்பத்தைப்போலொத்தஸ்தனங்களும், சிங்கத்தைப்பழிக்கும் யிடையும், அன்னத்தைப் போல் நடையினுமுடைய ஓ பூங்கொடியாளே! முன்பு வுனக்கு தாரகரகசியத்தை வுபதேசிக்கும்போது துயில்கொண்டதுபோல் அஜாக்கிறதையாயிராமற்படிக்கு ஜாக்கிறதையாய்க் கேழ்ப்பாயாகவென்று சொல்லத்தொடங்கினர்.

## சப்த தாதுக்கள்.

சொர்னத்தைப்போல சரீரகாந்தியுடைய ஓபெண்களின் நாயகமே பொன், வெள்ளி, தாம்பிரம், நாகம், வங்கம், ஜஸதம், அல்லதுசத்த, லோகம் எனதாதுக்கள் ஏழுவிதங்கள்

ஓ இமயமலை யரசனுடைய புத்திரியே! சத்தும் தாம்பிரமும் சேர்ந்து பித்தளையும், யீயமும் தாம்பிரமுஞ்சேர்ந்து வெண்கலமும் ஆகின்றன.

## சப்த தாதுக்களின் சுத்தி.

பொன், வெள்ளி, செம்பு, லோகம், பித்தளை, வெண்கலம் என்னுமிவைகளை சிறியரேக்குகளாய்த்தட்டிக்கொண்டு நெருப்பில்காய்ச்சி எள்ளெண்ணெய், மோர், கோமூத்திரம், கஞ்சி கொள்ளுவேவித்த தண்ணி யிவைகளில்லெவ்வொன்றிலும் ஏழு தகுதிகாய்ச்சி துவைத்து எடுத்தால் சுத்தியாகிறது. நாகம், யீயம், சத்து, இவைகளைக்காய்ச்சிவுருக்கி மேற்கூறிய ஐந்து தினுசுகளிலும் எவ்வேழு தகுதிபோட்டுஎடுத்துக்கொள்ளவும் அல்லது நாகம், வங்கம் என்னு மிரண்டு தாதுக்களைக் காய்ச்சி வுருக்கி எருக்கன்பாலில் வூத்தவேண்டியது இம்மாதிரியாய் மூன்று தகுதிசெய்தால்சுத்தியாகும். சொர்ணுதி தாதுக்களின் மாரணக்கிரமங்களை சொல்லுகிறேன் சொர்ணுதிதாதுக்களின் பஸ்மங்கள் சகலமான வியாதிகளைப்போக்கடிக்கும்.

## சொர்ணபரிக்ஷை.

பொன்னை நெருப்பில்காய்ச்சினல் அதிசீதளமாயும் சிவப்பாயுமிருந்தால் மேலானதென்றும், வெண்மையாயிருந்தால் தாழ்ந்ததென்றும் அறியவேண்டியது.

## சொர்ணமாரணம்.

சுத்திசெய்தபொன்னை ராவி பொடிசெய்து கல்வத்திலிட்டு அதற்குசமயெடையாய் சுத்திசெய்தரசத்தைச்சேர்த்து அரைத்து உருண்டைசெய்து இவ்விரண்டுக்கும் சமயெடையாய் சுத்திசெய்தகெந்தியை ஷை உருண்டைக்கு கவசஞ்செய்து அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண்செய்து முப்பதுகாட்டுஎரிமுட்டையில் புடம்போடவேண்டியது யிம்மாதிரியாய் (யச) தகுதிசெய்தால் பொன் யாதொரு களங்கமில்லாமல் பஸ்மமாகும்.

## மற்றொரு விதம்.

சுத்திசெய்தபொன்னை மூசையில்வைத்து அதுவுருகும் பொழுது அதற்குவீசம்பாகம் யீயத்தைச்சேர்த்து நன்றாய் வுருகினபிறகு வெளியில்யெடுத்து அனலாத்தி கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் நன்றாயரைத்து உருண்டைசெய்து அவ்வுருண்டைக்கு சமயெடையாய் சுத்திசெய்த கெந்தகத்தை எடுத்து அதிற்பாதியை ஒரு அகலில்போட்டு ஷை உருண்டையைவைத்து மற்றபாதியை அதின்மீதுபோட்டு மேல் அகல்மூடி சீலைமண்செய்து முப்பது காட்டு எரிமுட்டையில் புடம் வைக்கவேண்டியது யிம்மாதிரியாய் ஏழுபுடம் வைத்தால் களங்கபஸ்மமாகும்.

---

## இதுவுமது.

சுத்திசெய்த பொன்னை சிறியரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு கரசிலாங்கண்ணிச் சாற்றால் சவ்வீராஞ்சனத்தை யரைத்து ரேக்குகள்மீது தடவி அகலில்வைத்து மேல் அகல் மூடி சீலைமண்செய்து கெஜபுடம்போட்டால் பஸ்மமாகும்.

---

## இதுவுமது.

சுத்திசெய்தபொன்னை சிறியரேக்குகளாய்த்தட்டிக்கொண்டு ஹேமமாட்சிகத்தை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து ரேக்குகளுக்குத்தடவி வெய்யலில்வைத்து காய்ந்தபிறகு அகலில்வைத்து மேல்அகல்மூடி மூன்று சீலைமண்செய்து மூன்று தகுதி கெஜபுடம்வைத்தால் பஸ்மமாகும்.

---

## சொர்னபஸ்மத்தின் குணம்.

பொன்பஸ்மம்அருந்துவதால் வாதம், பித்தம், பிரமேகங்கள், காசசுவாசங்கள், க்ஷயங்கள், கிராணிகள், அதிசாரங்கள், சுரங்கள், குஷ்டங்கள் என்னும்வியாதிகள்நீங்கும், தேககாந்தியும் வீரியவிர்த்தியும் உண்டாகும், யவ்வனத்தையும் நிறுத்தும்.

---

## அபக்குவ சொர்னபஸ்மத்தால் உண்டாகும் தோஷம்.

அபக்குவமான சொர்னபஸ்மம்சாப்பிடுவதால் வலிவையும் வீரியத்தையும் யிந்திரிய விர்த்தியையும் நாசப்படுத்தி ரோகத்தை அதிகரிக்கச்செய்து அசௌக்கியத்தையும் மரணத்தையும் உண்டுபண்ணும்.

---

## இதற்குப்பரிகாரம்.

கடுக்காத்தூள் சர்க்கரை யிரண்டையும் சமயெடையாய்சேர்த்து மூன்றுநாள் காலை மாலை மூன்றுவிரற்கடைப் பிரமாணம்உட்கொண்டால் அபக்குவமான சொர்னபஸ்மத்தை அருந்துவதால்உண்டான சகலதோஷங்களையும் சந்தேகமில்லாமல் நிவர்த்திசெய்யும்.

---

## சொர்னபஸ்ம அனுபானம்.

சொர்னபஸ்மத்தை யிரண்டுகுன்றியிடை கரசிலாங்கண்ணிச்சாற்றால்உட்கொண்டால் ஸ்திரீபோகத்தில் விசேஷவலிவுஉண்டாகும், பசும்பாலில்உட்கொண்டால் அதிக பலனுண்டாகும், வெள்ளைச்சாரணைச்சாற்றால்உட்கொண்டால் கண்களைப்பற்றிய வியாதிகளெல்லாம் பரந்தோடும், பசும்நெய்யால் உட்கொண்டால் கிழத்தனம் விட்டுவிலகும், வசம்பால் உட்கொண்டால் புத்தி கூர்மையுண்டாகும், கடுகுரோகணியால் உட்கொண்டால் தாபத்தையோட்டும், குங்குமப்பூவால் உட்கொண்டால் சரீரகாந்தியுண்டாகும், அப்பொழுதுகரந்தபாலில்உட்கொண்டால் மிகவும்குரூரமான க்ஷயரோகங்களை நாசப்படுத்தும், இலவங்கம், சுக்கு, மிளகு, யிவைகளால் உட்கொண்டால் உற்பாதரோகங்கள் அபஸ்மாரங்கள் சந்நிபாதங்கள் இவைகளைநாசப்படுத்தும், தேன் நெல்லிவற்றல் யிவைகளால் உட்கொண்டால் குரூரமான கிராணிகள் விஷங்கள் நிவர்த்தியாகும், நிலப்பூசினிக்கிழங்கால்உட்கொண்டால் புத்திரோற்பத்திவுண்டாகும் இச்சாபத்தியம்.

---

## வெள்ளிபரிக்ஷை.

வெள்ளியானது கனிஜம்,வேதஜம்,வங்கஜம்என மூன்று விதங்களாயிருக்கின்றது. இம்மூன்று விதங்களில் வங்கஜம், வேதஜம் என்கிறயிரண்டும் மிருதுவாயும் வெண்மையாயுமிருப்பதால் அவைகளை பஸ்மம்செய்வதில் உபயோகிக்கவேண்டியது, கனிஜம் என்கிறவெள்ளி வெண்மையா யிருந்தாலும், மிருதுவாயில்லாமையால் அதை அவுஷதங்களில் வுபயோகப்படுத்தலாகாது.

## வெள்ளி பஸ்மம்.

சுத்திசெய்தவெள்ளியை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்குசமயெடையாய் சுத்திசெய்த ரசத்தையும் கெந்தியையும் கல்வத்திலிட்டுஅரைத்து ரேக்குகளுக்குத்தடவிஉலர்த்தி சிறிபகுடுவையில்வைத்துமேலோடுமூடி ஒருநாள் காடாக்கினியில்எரித்தால் சுத்தபஸ்மமாகும்.

## மற்றொருவிதம்.

சுத்திசெய்த வெள்ளியை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்கு கால்பாகம் சுத்திசெய்தஅரிதாரத்தைபழச்சாற்றாலரைத்து ரேக்குகளுக்குத்தடவி வுலர்த்தி அகலில் வைத்து மேல்அகல்மூடிசீலைமண்செய்து ௩௰-காட்டுஎரிமுட்டையில் புடம்வைக்கவேண்டியது இம்மாதிரியாய் மூன்றுதகுதிபுடம்வைத்தால் பரிசுத்தமான வெள்ளிபஸ்மமாகும்.

## இதுவுமது.

சுத்திசெய்தவெள்ளியைராவிபொடிசெய்து அதற்குசமயெடையாய் சுத்திசெய்த ரசத்தைக்கலந்து இவ்விரண்டிற்கு சமயெடையாய் சுத்திசெய்த அரிதாரத்தையும் சுத்திசெய்த கெந்தியையும்சேர்த்து பழச்சாற்றால் அரைத்து உருண்டைசெய்துஉலர்த்தி அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண் செய்து முப்பதுகாட்டுஎரிமுட்டையில் புடம்வைக்கவேண்டியது இம்மாதிரியாய் மூன்றுபுடம்வைத்தால் சுத்தமான வெள்ளிபஸ்மமாகும்.

## இதுவுமது.

சுத்திசெய்த வெள்ளியை சிறியரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்குநான்குபாகங்கள் மாதுளம்பழம் சிறியமுள்ளங்கியிலே யிவைகளின் சுரசத்தில் அந்த ரேக்குகளை ஏழு நாள்வூரவைத்து உலர்த்தி அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண்செய்து வராகபுடம் வைக்கவேண்டியது. யிம்மாதிரியாய் மூன்றுபுடங்கள்வைத்தால் வெள்ளிபஸ்மமாகும்.

## வெள்ளிபஸ்மத்தின் குணம்.

வெள்ளிபஸ்மமானது சாதாரணமாய் சகல வியாதிகளையும்போக்கும், முக்கியமாய் பித்தம் வாதம் கபம் குல்மம் பிரமேகம் சுவாசம் காசம் க்ஷயம் மயிர்நறைத்தல் சோபை முதலியவைகளை நாசப்படுத்துவதில் இதற்குசமானமான பஸ்மம் வேரொன்றும்கிடையாது. சரீரகாந்தி தேகபுஷ்டி வயது என்னுமவைகளை விருத்திசெய்யும், பசிதீவினையுண்டாகும்.

## அபக்குவமான வெள்ளிபஸ்மத்தால் உண்டாகுந் தோஷம்.

அபக்குவமான வெள்ளிபற்பம் அருந்துவதால் தேகத்தில் தாபம் மலபந்தம் வீரியநாசம் அலுப்பு பலம் க்ஷீணித்தல் கோரமான வியாதிகள் உற்பத்தி முதலிய கெடுதிகளை உண்டாக்கும்.

## இதற்குபரிகாரம்.

சர்க்கரையும் தேனையும் கலந்து மூன்றுநாள் காலைமாலை ஒருதுலாம்இடை உட்கொண்டால் அபக்குவ வெள்ளிபற்பத்தால் உண்டான சகலவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் விட்டகலும்.

## வெள்ளிபஸ்ம அனுபானம்.

வெள்ளிபஸ்மத்தை இரண்டுகுன்றிஎடைசர்க்கரையால் உட்கொண்டால் சகலதாபங்களும் நாசமாகும், திரிபலசூர

ணத்தால் உட்கொண்டால் வாதரோகங்கள் பித்தரோகங்கள் விட்டகலும், திரிசுகந்தசூரணத்தால் உட்கொண்டால் சகல பிரமேகங்கள் சொஸ்தமாகும், சத்தியக்ஷார சூரணத்தால் உட்கொண்டால் எட்டுவிதகுன்மரோகங்கள் மறைந்துப்போகும், திரிகடுகுசூரணத்துடன் ஆடாதோடையிலை இரசத்தைக்கலந்து வெள்ளிபஸ்மம் உட்கொண்டால் இருமல் கபம் இவைகள்நீங்கும், கண்டுபாரங்கி சுக்கு இவைகளுடன் உட்கொண்டால் இரைப்புபரந்தோடும், சிலாசித்துடன் உட்கொண்டால் சகலக்ஷயங்களும் க்ஷணத்தில் க்ஷீணமாகும், சூப்புடனுகிலும் அல்லது பசும்பாலாலாகிலும் உட்கொண்டால் மாந்தம் அபஸ்மாரம்போம், திப்பிலிச்சூரணத்தால் உட்கொண்டால் சோபைகள்போம், வெள்ளைச்சாரணை இரசத்தால் உட்கொண்டால் பாண்டுரோகங்கள்போம், பசும் நெய்யால் உட்கொண்டால் மயிர்நரைத்தல் வலிகள்சொஸ்தமாகும் பசி தேககாந்தியுண்டாகும்.

---

## தாமிரபரிக்ஷை அல்லது செம்புபரிக்ஷை.

செம்பானது மிலேச்சம் நேபாளஜம் என இரண்டுவிதங்கள், மிலேச்சம் துலக்கினாலும் கறுத்திருக்கும், நேபாளஜத்தை துலக்கினல் சிவப்பாயிருக்கும், ஆகையால் ஔஷதங்களுக்கு இரண்டாவதான நேபாளஜத்தை உபயோகப்படுத்தவேண்டியது.

---

## தாமிரதோஷம்.

தாமிரத்தில், வாந்தி பிரமை பேதி அலுப்பு தாபம் இந்திரியநாசம் தினவு சூலையென எட்டுவிதங்களான தோஷங்கள்உண்டாயிருக்கின்றது.

---

## செம்புசுத்தி.

செம்பை, எள்ளெண்ணெய் பசுவின்மோர் பசுவின் மூத்திரம் இவைகளில் சுத்திசெய்தால்வாந்தியைநிருத்தும் புளித்தகழுநீர் கொள்ளு வேவித்தநீர் இவைகளில் சுத்தி செய்வதால் விடாதவாந்தியைநிருத்தும், கள்ளிப்பால் பசுவின்பால்

இவைகளில்சுத்திசெய்வதால் அலுப்பைப்போக்குகிறது.புளி ஏலுமிச்சம்பழம், இவைகளில்சுத்திசெய்வதால் தாபத்தைப் போக்குகிறது. காட்டுவாழைப்பட்டை, கற்றாழை இவைகளின் இரசத்தால்சுத்திசெய்வதால் சூலைகளைசொஸ்தப்படுத்தும் பசுநெய் பசும்பால் இவைகளில் சுத்திசெய்வதால் தினவைப் போக்கும். திராக்ஷை இரசம் தேன் இவைகளில் சுத்திசெய் வதால் இந்திரியநாசத்தைச் சரிப்படுத்தும். தயிர்மீதுயேடு, காட்டுகரணைக்கிழங்கின் இரசம் இவைகளில் சுத்திசெய்தால் பேதியைநிறுத்தும். ஆகையினால் செம்பை சிறிய ரேக்குகளாய் தட்டிக்கொண்டு மேற்கூறியதினுசுகளில் ஒவ்வொன்றில் பிரத்தியேக பிரத்தியேகமாய் ஏழுதருதிகாய்ச்சி துவைத்து யெடுத்தால் களங்கமற்ற சுத்தியாகும்.

## செம்புபஸ்மம்.

சுத்திசெய்த செம்புரேக்குகளை கல்வத்திலிட்டு அதற்கு பாதிபாகம் சுத்திசெய்தஇரசத்தை ரேக்குகள்மீது வார்த்து செம்புரேக்குகள் வெள்ளையாகிறவரையிலும் பழச்சாற்றால் நன்றாய் அரைக்கவேண்டியது. பிறகு அந்த ரேக்குகளுக்கு இரண்டுபாகங்கள் சுத்திசெய்த கந்தகத்தை கடலைப்புளிப் பாலரைத்து ரேக்குகளுக்குப்பூசி உலர்த்தி அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண்செய்து ஒரு பெரியபானையில் சாம் பல்போட்டு அதின்மத்தியில் ஷை கவசத்தைவைத்து கமலாக்கினியாய் நான்குஜாமங்கள்எரித்தால் செம்பு பஸ்மமாகும். பிறகுஅந்தபஸ்மமும் அதற்கு பாதிபாகம் சுத்திசெய்த கந்தகமும் கல்வத்திலிட்டு காட்டுகருணைக்கிழங்கு ரசத்தால் ஒரு ஜாமம் அரைத்து அகலில்வைத்து சீலைமண் கவசஞ்செய்து கெஜபுடம்வைக்கவேண்டியது. பிறகு அந்தசெம்புபஸ்மமும் அதற்கு கால்பாகம்சுத்திசெய்தகந்தகமும் ஒன்றாய்க்கலந்து பசுவின் பாலாலும், மோராலும், நெய்யாலும், மூத்திரத்தாலும், சாணியாலும், பிரத்தியேக பிரத்தியேகமாய் அரைத்து புடம்வைக்கவேண்டியது. பிறகுசர்க்கரையாலும், தேனாலும் மேற்கூறியபடி புடம்வைக்கவேண்டியது. சுத்தமான செம்பு

பஸ்மம் மயிலின் கண்டத்தின் வர்ணத்தைப்போல் இருக்கும் அந்தபஸ்மத்தை பசும்பாலால் சுத்திசெய்யவேண்டியது.

## மற்றொருவிதம்.

சுத்திசெய்த செம்புரேக்குகளுக்கு சமயெடையாய், சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகந்தகம் இவைகளைக் கலந்து கல்வத்திலிட்டு புளியால்அரைத்து ஷை ரேக்குகளுக்குத் தடவி உலர்த்தி அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண் கவசஞ் செய்து கஜபுடம்இடவேண்டியது. இம்மாதிரியாய் மூன்றுதகுதிசெய்து கஜபுடங்களிடகளங்கமற்றதாம்பிரபஸ்மமாகும்.

## இதுவுமது.

சுத்திசெய்த செம்புரேக்குகளுக்கு கால்பாகம் சுத்திசெய்தபாதரசத்தைப்பூசி பிறகு புளியால் சுத்திசெய்த கந்தகத்தைஅரைத்து ரேக்குகளுக்குத்தளமாய்ப்பூசி உலர்த்தி ஒரு தோண்டியில் புளியைக் கரைத்துவார்த்து அதற்கு நடுவில் இந்தரேக்குகளைவைத்து ஒருஜாமம் எரித்தால் தாமிரபஸ்மமாகும். இந்தபஸ்மம் சகலவியாதிகளையும்தீர்க்கும்.

---

## செம்பு பஸ்மகுணம்.

செம்புபஸ்மத்தைசாப்பிடுவதால் காசம், சுவாசம், கபம், வாதரோகம், உதரரோகம், கிருமிரோகம், குஷ்டங்கள், சூலைகள், சுரங்கள், தினவுகள், வாந்தி, வீக்கம், பாண்டு, காமாலை, மூர்ச்சை, மூலங்கள், அதிசாரங்கள், க்ஷயங்கள், குன்மங்கள், தலைநோவு, விக்கல், பிரமேகங்கள், பிரமை முதலிய வியாதிகளைநாசப்படுத்தி பசிதீவினையுண்டுபண்ணும்.

## அபக்குவமான செம்பு பஸ்மத்தால் உண்டாகும் தோஷம்.

அபக்குவமான செம்புபற்பம் அருந்துவதால் வாந்தி, பேதி, தாபம், பிரமை, மூர்ச்சை, பிரமேகம், பலஹீனம், இந்திரியநாசம், க்ஷயரோகம் முதலிய துற்குணங்கட் உண்டாம்.

### இதற்குப் பரிகாரம்.

கற்கண்டு, கொத்துமல்லி, இவைகளை சமயெடையாய் எடுத்து சலம்விட்டரைத்து மூன்றுநாளைக்கு காலைமாலை உட்கொண்டால் அபக்குவசெம்புபஸ்மத்தால்உண்டான வியாதிகள்விட்டகலும்.

## செம்புபஸ்ம அனுபானம்.

செம்புபஸ்மத்தை இரண்டு அல்லது மூன்று அரிசியெடை திப்பிலிசூரணம் தேன் இவைகளில் கொடுத்தால் சகல ரோகங்களும்விட்டகலும். வைத்தியன் அந்தந்த ரோகக்குறிகளை செவ்வையாய்அறிந்து ரோகத்திற்குத் தகுந்த அனுபானங்களோடு இந்த பஸ்மத்தை உபயோகிக்கவேண்டியது.

## நாகசுத்தி.

### நாகம்என்றால்-காரீயம்.

நாகத்தை நெருப்பில்வைத்து உருக்கி கற்றாழைச் சாற்றிலாகிலும், திரிபலாதிகஷாயத்திலாகிலும், தோய்க்கவேண்டியது. இம்மாதிரியாய் ஏழுதகுதி உருக்கி தோய்த்தால் நாகம் சுத்தியாகும்.

## நாகபஸ்மம்.

ஷை நாகத்தை சட்டியிலிட்டு அக்கினியில்வைக்கஉருதியாயிருக்கும் எருக்கன்வேரால் மூன்றுஜாமங்கிளரிவர பஸ்மமாகும்.

### இதுவுமது.

நாகம் அதற்குச்சமயெடை சுத்திசெய்த மனோசிலைஇவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஆடாதோடை இலைச்சாற்றால் அரைத்து மூன்று *கும்பபுடங்கள்போட்டால் மாசற்றபஸ்மமாகும், இதை அனுபானவிசேஷத்தால் சகலவியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

* கும்பபுடமென்றால், பெரியமண்பாத்திரத்தின்அடியில் ஒருஅங்குல பிரமாணமுள்ள நாற்பது துவாரங்கள் செய்து

அப்பானைக்கு பாதிவரைக்கும் நாட்டுக்கரிபோட்டு அதின் மீது மருந்தைவைத்துப் பானையை ஒருஅகலால்மூடி மண்சீலையால் வாயிற்குகவசஞ்செய்து நிழலிலுலர்த்தி அப்பானைமீதுள்ள அகலில் நெருப்பைவைத்து அடியில் தீயைமூட்டி தீபாக்கினியாய் மூன்றுநாள்எரித்து அனல்ஆறினபிறகு மருந்தை எடுத்துக்கொள்ளவும் இந்தமுறைக்கு கும்ப புடமென்றுபெயர்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்தநாகம் அதற்குஇரண்டுபாகம் சுத்திசெய்த மனோசிலை இவ்விரண்டுதினுசுகளை உருதியாயிருக்கும் பானையில்வைத்து அடுப்பேற்றி காடாக்கினியாஎறித்துஉருதியான முருக்கன்கொம்பால் கிளரிக்கொண்டிருந்தால் பஸ்மமாகும். பிறகு அந்தபஸ்மத்திற்கு கால்பாகம் சுத்திசெய்த மனோசிலையைச்சேர்த்து வெற்றிலைச்சாற்றால்அரைத்து பில்லைதட்டிஉலர்த்தி அகலில்வைத்து மேல்அகல்மூடி சீலைமண்செய்து குக்குடபுடம்இடவேண்டியது. இம்மாதிரி முப்பத்திரண்டுபுடம் வைத்தால் காரீயம் களங்கமற்ற பஸ்மமாகும்.

### இதுவுமது.

சுத்திசெய்தநாகம், அதற்கு கால்பாகம்அபினி, இந்ததினுசுகளை ஒருபானையில்வைத்து அடுப்பேற்றி எலுமிச்சங்கொம்பால் கிளரிக்கொண்டு காடாக்கினியாய் எரித்தால் நாகம் வெண்மையான பஸ்மமாகும். இந்தபஸ்மம் இந்திரியத்தை விருத்திசெய்யும்.

## நாகேஸ்வரஞ் செய்யுமுறை.

ஓ இமயமஇராஜனது தவச்செல்வமே! நாகபஸ்மம்(அ)துலாம், சுத்திசெய்தலிங்கம் (அ)துலாம், சுத்திசெய்தமனோசிலை (கால்பலம்) இவைகளை ஒன்றாய்க்கலந்து இந்த எடைக்கு சுத்திசெய்தகெந்தகத்தைச் சேர்த்து பழச்சாற்றில் (ரு) ஜாமங்கள்அரைத்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி அகலில் வைத்து மேல்அகல்மூடி சீலைமண் கவசஞ்செய்து கெஜபுடம் வைத்தால் பஸ்மமாகும் இதற்கு நாகேஸ்வரம்என்று சொல்லுவார்கள்.

## காரீயபஸ்ம குணம்.

ஓ பெண்கள்நாயகமே! மேற்கூறிய சாத்திரவிதியின்படி செய்தநாகபஸ்மமானது வாதரோகம்,க்ஷயம், குன்மரோகங்கள்,பாண்டு,சூலை,பிரமை,கபம்,அக்கினிமாந்தம், சுக்கிலதோஷம்,காசங்கள்,மூர்ச்சை,கிருணி,கிருமிரோகங்கள்,அபமிருத்தியு முதலியரோகங்களைவிலக்கும் நூர் ஆனைகளுக்கு சமானமானபலத்தையும் ஆயுசுவிர்த்தியும் உண்டுபண்ணும்.

## அபக்குவநாகபஸ்மத்தால் உண்டாகும் தோஷம்.

பக்குவமற்ற நாகபஸ்மம் உட்கொள்ளுவதால் இரத்த தோஷங்கள், கபம், பாண்டு, குஷ்டம், குன்மம், அரோசிகம், க்ஷயம்,சுரம்,மூலவியாதிகள், நீரடைப்பு,சூலைகள், பவித்திரம் முதலிய கெட்டவியாதிகள் உண்டாகும்.

### இதற்கு பரிகாரம்.

வசம்பு கடுக்காய் இவைகளைச்சூரணித்து வெள்ளைசர்க்கரையுடன்கலந்து மூன்றுவிரற்கடைப்பிரமாணம் காலைமாலை மூன்றுநாள்உட்கொண்டால் அபக்குவமான நாகபஸ்மத்தால்உண்டாகும் மேற்கூறியவியாதிகள் இடிவிழுந்தசெடி எப்படிவேருடன்நாசமாகுமோ அப்படி நாசமாகும்.

## நாகபஸ்மஅனுபானம்.

நாகபஸ்மத்தை இரண்டு அரிசியெடைபிரமாணம் சர்க்கரையில்உட்கொண்டால் பித்தம்,வாதம்,தலைநோவு,நேத்திர ரோகங்கள்,சுக்கிலதோஷங்கள்,பிதற்றல்,தாபம் முதலியவைகள்பறந்தோடும், அரோசகத்தைப் போக்கும், வீரிய விருத்தியாம், இம்மாதிரியாய்வயித்தியன் இதர ரோகங்களை அநுசரித்து அந்தந்தரோகங்களுக்கு தக்கின அனுபானங்களால் இந்த பஸ்மத்தைக் கொடுக்கவேண்டியது.

## நாகேஸ்வர அனுபானம்.

சூரியோதயத்திற்குமுன்பாகத்தானே மனிதன்நாகேஸ்வரத்தை இரண்டு அரிசி எடை வெற்றிலையில் மடித்து உட்

கொண்டால் நூறுமாதருடன்புணர்ச்சிசெய்தாலும் தணியாமல் விசேஷமாய் காமவிருத்தியுண்டாகும்.

## வங்கபரீக்ஷை.

வங்கம்என்றால் வெள்ளீயம் அல்லது தகரம்.

ஓ உமா! வெண்மையாயும் உருதியாயும் இருக்கிறவெள்ளீயத்தை ஔஷதங்களுக்கு உபயோகப்படுத்தவேண்டியது, இதரமானதாதுக்களுடன் கலந்த ஈயத்தை யெப்பொழுதும் உபயோகிக்கக்கூடாது.

## வங்கபஸ்மம்.

சுத்திசெய்தவங்கத்தை பாண்டத்திலிட்டு அதற்கு சமயெடையாய் திரிபலசூரணஞ்சேர்த்து அடுப்பின்மீதுவைத்து தேரின வேப்பமரக்கொம்பால் கிளரிவந்தால் பஸ்மமாகும், இந்தபஸ்மத்தை சகலவியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்த வங்கம் அதற்கு கால்பாகம் நாயுருவிரசம் இவைகளைபாண்டத்திலிட்டு அடுப்பேற்றி பெரிய இரும்புகரண்டியால் சிவப்புவர்ணம் ஆகிறவரையிலும் மெள்ளமாய்க்கிளறி அதையெடுத்து அகலில் வைத்து மேல்அகல்மூடி சீலைமண் கவசஞ்செய்து காடாக்கினியாய் கஜபுடம் வைத்தால் மாசற்ற வெண்மையான பஸ்மமாகும்.

## வங்கேசுவரம் செய்யுமுறை.

வங்கபஸ்மம் ௪-துலாம், சங்குபஸ்மம் ௧-துலாம், இரசபஸ்மம் ௧-துலாம், அரிதாரபஸ்மம் ௨-துலாம்,இவைகளை கல்வத்திலிட்டு புளித்தநீரால்அரைத்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி அகலில்வைத்து சீலைமண்கவசஞ்செய்து கெஜபுடம்வைத்தால் பஸ்மமாகும்,இதற்கு வங்கேசுவரமென்றபெயர்.

## வங்கபஸ்ம குணம்.

வங்கபஸ்மம் அருந்துவதால் சுவாசம்,பிரமேகம், வாதம் உதரரோகம்,சூலை,கபம்,பாண்டு, பிரமை, வாந்தி, க்ஷயங்கள் முதலிய சகல ரோகங்களும் நாசமாகி தேகத்திற்கு பலனுண்டாகும்.

## வங்கேசுவர குணம்.

வங்கேசுவரம்அருந்துவதால் பிரமை,திமிர், கபம்,பிரமேகம், காசசுவாசங்கள், வாதம், பித்தம், ரத்ததோஷம்,கிருணிகள், சூலைகள், குஷ்டங்கள், பாண்டு, சுரம் முதலியவைகள் சூரியனைக்கண்ட இருளைப்போல் உடனே மறைந்துவிடும்.

## அபக்குவ வங்கபஸ்ம தோஷம்.

பக்குவமற்ற வங்கபஸ்மத்தை சாப்பிடுவதால் குன்மங்கள்,குஷ்டங்கள்,பிரமேகங்கள்,வாதம்,ரத்ததோஷம், அக்கினிமந்தம்,பாண்டு,துற்பலன் முதலியவியாதிகள் உண்டாகும்.

### இதற்குப் பரிகாரம்.

சர்க்கரை வட்டத்திருப்பிவேர்ப்பட்டை இவைகளை சமனிடையாய் சூரணித்து காலை மாலை மூன்றுநாள் உட்கொண்டால் அபக்குவ வங்கபஸ்மம்அருந்துவதால் உண்டானசகல வியாதிகளும் விட்டகலும்.

## வங்கபஸ்ம அனுபானம்.

வங்கபஸ்மத்தை பச்சைகற்பூரத்தால் உட்கொண்டால் வாயின் துர்நாற்றத்தைப்போக்கும்,பசும்பாலிலாகிலும் ஜாதிக்காய்சூரணத்திலாகிலும் உட்கொண்டால் தேகபுஷ்டி யுண்டாகும், துளசியிலைச்சாற்றால்உட்கொண்டால் பிரமேகங்கள் விட்டகலும், வெங்காரசுன்னத்துடன்உட்கொண்டால்குன்மரோகங்கள் சொஸ்தமாகும், பசும்நெய்யில் உட்கொண்டால் பாண்டுரோகம் விட்டகலும், மஞ்சள் சூரணத்தால் உட்கொண்டால் மேல்மூச்சு; ரத்தபித்தம் இவைகள்நீங்கும் சர்க்கரை

யில்உட்கொண்டால் பித்தரோகங்கள்போம், தேனுடன் உட்கொண்டால் பலம்விருத்தியாகும், கஸ்தூரியிலாகிலும்வெத்திலையிலாகிலும்உட்கொண்டால் வீரியஸ்தம்பனமாகும், திப்பிலிசூரணம் கஸ்தூரி இவைகளில்உட்கொண்டால் அக்கினிமாந்தம் போம், மருதம்பட்டை கஷாயத்தால் உட்கொண்டால் நேத்திரரோகங்கள் சொஸ்தமாகும், நெல்லிவற்றல்சூரணத்தாலாகிலும்கொட்டைப்பாக்குசூரணத்தாலாகிலும்உட்கொண்டால் அசீரணம்போம், வெள்ளுள்ளிஇரசத்தால் உட்கொண்டால் எலும்பைப்பற்றிய சுரங்கள்பரந்தோடும்,நொச்சியிலைசொரசத்தால்உட்கொண்டால் குஷ்டரோகங்கள் விட்டகலும், வங்கபஸ்மம் இலவங்கம் கோரோஜனம் இவைகளை அறைத்து திலதமிட்டால் ஜனவசியமாகும், இலவங்கம் ஆமணக்குவேர் இவைகளைஅறைத்து தேகத்திற்கு பூசிக்கொண்டால் அர்தாவபேதகமென்கிற வாதரோகம் சொஸ்தமாகும், நாயுருவிபட்டை சூரணத்தால் சேவித்தால் கூன் போகும், மேலும் வங்கபஸ்மம் இலவங்கம் சிந்துபலம் இம்மூன்றைவெற்றிலைச்சாற்றால்அறைத்து ஆண்குறிக்கு லேபனம்செய்தால் நீண்டும், அமுக்கிறாகிழங்குசூரணத்தால்உட்கொண்டால்வாதரோகம்ஹரிக்கும், ஆட்டுப்பாலால்உட்கொண்டால் புத்திரசந்தானம்உண்டாகும், கழுதைமோரில்உட்கொண்டால்வாதகுன்மங்கள் சொஸ்தமாகும், முள்வெள்ளரிக்கா இரசத்தில் உட்கொண்டால் நபும்ஸகனுக்கு பும்ஸகத்துவம்வுண்டாகும் நாயுருவியிலைச் சாற்றால் உட்கொண்டால் சிரரோகங்கள்விட்டகலும், ஜாதிக்காய் ஜாபத்திரி இலவங்கம் இவைகள்கலந்த சூரணத்தால்உட்கொண்டால் தாதுதோஷங்கள்போம்,ஜாதிக்கா அமுக்கிறாக்கிழங்கு இவைகளது சூரணத்தால் உட்கொண்டால் இடுப்புவலிபோம், வெள்ளுள்ளி தைலத்துடன் கலந்து நசியம்செய்தால் அபஸ்மாரரோகம்விட்டகலும், ஜாதிக்காய் இலவங்கம் இவைகளைசூரணித்து மேற்படி பஸ்மத்தையும் தேனையும்கலந்து உட்கொண்டால் காசரோகங்கள் பேர்சொல்லாமல்ஓடும், துளசிரசத்தால் உட்கொண்டால் அதிகபலமுண்டாகும்.

## ஜஸதபஸ்மம்.

ஜஸதமென்றால்-சத்து அல்லது-தரா.

சத்தையும் வங்கத்திற்குச்சொன்னமாதிரியாய்சுத்திசெய்து சிறியரேக்குகளாய்த்தட்டிக்கொண்டு அந்த ரேக்குகளுக்கு கால்பாகம்சுத்திசெய்தமனோசிலை கால்பாகம் சுத்திசெய்தகந்தகம் இவைகளைஎருக்கன்பாலால் அரைத்து ரேக்குகளுக்குப்பூசி வெய்யலில் உலர்த்தி அகலில்வைத்து சீலைமண்செய்து கஜபுடம்போடவேண்டியது, இம்மாதிரியாய் ௰௨-புடம் போட்டால் மாசற்ற பஸ்மமாகும்.

## மற்றொருவிதம்.

சுத்திசெய்தசத்தை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக்கொண்டு அதற்குகால்பாகம் சுத்திசெய்தரசம் சுத்திசெய்தகந்தகம் இவைகளைக்கற்றாழைச்சாற்றால்அரைத்து பிரகு பழச்சாற்றாலும்அரைத்து அந்தரேக்குகளுக்குப்பூசி வெய்யலில் உலர்த்தி அகலில்வைத்து சீலைமண்கவசஞ்செய்து ஒரு கெஜபுடம்வைத்தால் களங்கமற்ற பஸ்மமாகும், வங்கபஸ்மத்திற்கு அல்லது நாகபஸ்மத்திற்குச் சொல்லியபிரகாரம் சத்தையும் புடம்வைத்தால் பஸ்மமாகும், இந்த பஸ்மத்தை சகலரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

---

## தராபற்பத்தின்குணம்.

சத்துபற்பத்தைஉட்கொள்வதால் திரிதோஷங்கள், பிரமேகம், அக்கினிமாந்தம், நேத்திரரோகம், அதிசாரம், பித்தசுரம், அசீரணம், காசம், மலபந்தம், சீதபேதி, வாந்தி, சூலை, சீதசுரம், ரத்தாதிசாரங்கள் முதலியவியாதிகள்விட்டகலும்.

---

## அபக்குவ சத்துபற்பதோஷம்.

பக்குவமற்ற சத்துபற்பத்தை உட்கொள்வதால் பிரமேகங்கள், அசீரணம், வாதரோகங்கள், வாந்தி, பிரமை இவைகள் உண்டாகும், ஆகையால் நாகத்திற்குச்சொல்லியிருக்கிற சுத்தியைப்போல் இதையுஞ் சுத்திசெய்து பஸ்மம்செய்து உபயோகிக்கவேண்டியது.

### இதற்குப் பரிகாரம்.

கடுக்காய்பிஞ்சுகளைசூரணித்து சர்க்கரையுடன் மூன்று நாள் காலைமாலை உட்கொண்டால் அபக்குவமான சத்துபற்பத்தால்உண்டாகும்ரோகங்கள் நிவர்த்தியாகும்.

## சத்துப்பற்ப அனுபானம்.

சத்துப்பற்பத்தை இலவங்கப்பட்டை ஏலக்காய் ஜாபத்திரி இவைகள் சூரணத்தால் உட்கொண்டால் வாதாதி திரிதோஷவிகாரங்கள்விட்டகலும், நெல்லிஇரசத்தால் உட்கொண்டால் அக்கினிமாந்தம்போம், பழயபசும்நெய்யைக் கலந்து கண்ணுக்குகலிக்கம்போட்டால் சகலவிதநேத்திரரோகங்கள் விட்டகலும், வெற்றிலைச்சாற்றால்உட்கொண்டால் பிரமேகங்கள்போம், கர்ஜூரம் கழுநீர் இவைகளில்உட்கொண்டால்பித்தசுரம் நீங்கும், ஓமம் இலவங்கம் இவைகளால் உட்கொண்டால் சீதசுரம்போம், சர்க்கரை சீரகம் இவைகளால்உட்கொண்டால் வாந்தி இவைகளைப்போக்கும்; ஓமம் இலவங்கம் சீரகம் சர்க்கரை இவைகளது சூரணத்தால் உட்கொண்டால் சூலை தோஷங்கள் போம், ஓமவெந்நீரில் கலந்து உட்கொண்டால் மலச்சிக்கல்விலகும், ஓமம் இலவங்கம்வெந்நீரில்கலந்து உட்கொண்டால்சீதபேதிநிற்கும், எருமைவெண்ணெயில் உட்கொண்டால் பிரமேகங்கள்போம், தேன் திப்பிலிசூரணமிவைகளால்உட்கொண்டால் காசரோகங்கள்நிவர்த்தியாகும், கோதுமைரொட்டியை நெய்யுடன்கலந்து சாப்பிடுவது பத்தியம்.

## லோகபேதங்கள்.

ஓ பார்வதி! லோகமானது, காந்தம் எழுகு இரும்புஎன மூன்றுவிதங்களாய் இருக்கிறது, இவைகளில் காந்தம் சிரேஷ்டமானது, எஃகுஇரண்டாவது, இரும்பு பலவித தோஷங்களிருக்கிறபடியால் மூன்றுவதாய் எடுக்கப்பட் டிருக்கிறது.

## காந்தத்தின்பேதங்கள்.

காந்தமானது ரோகம், பிராஜிகம், சும்பகம், திராவகம் என நான்குவிதங்களாய் இருக்கின்றது.

## காந்தசுத்தி.

காந்தத்தை, பழச்சாறு காடி புளித்தமோர் இவைகளில் ஒவ்வொன்றிலும் எவ்வேழுதகுதி ஒவ்வொருநாழி உலர்த்தி எடுக்கசுத்தியாகும், பிறகு அதைதிரிபலகஷாயத்திலும்அனேகதகுதிசுத்திசெய்யவேண்டியது. எஃகு இரும்பு இவைகளையும் மேற்கூறியமாதிரி சுத்திசெய்யவேண்டியது.

## காந்தபற்பம்.

சுத்திசெய்தகெந்தகத்தை, அதற்குகால்பாகம் கந்தகஞ் சேர்த்து எருக்கன்பால் கங்கணப்பூண்டுவேர் இரசம், முருக்கன்பட்டைஇரசம், இம்மூன்றினால் வெவ்வேறாய் ஒவ்வொரு ஜாமம்அரைத்து மூன்று கஜபுடம்வைத்தால் காந்தம் பற்பமாகும்.

## காந்தசிந்தூரம்.

காந்தபற்பத்திற்கு பாதிபாகம் லிங்கத்தைச் சேர்த்து சிறுகாஞ்சொரிவேர்இரசத்தால் மூன்றுநாள் அரைத்து சீகப்புமண்ணால்செய்யப்பட்ட மூசையில்வைத்து மூன்று கஜபுடமிட்டால் பாலசூரியனைப்போல் காந்தம் சிந்தூரிக்கும்.

## காந்ததுரிதி.

நரி, ஆடு, ஆமைமுதலியவைகளின் எலும்புகளையும்சிலாசித்தையும்சூரணித்து காந்தசூரணத்தை சட்டியில்போட்டு சிவந்தநிறமாகும்வரையில் காய்ச்சி காந்தம்பாதஇரசத்தைப் போல்நிற்கிறவரையில் மேற்கூரியசூரணத்தை கொஞ்சங்கொஞ்சமாய் தூவிக்கொண் டிருக்கவேண்டியது. அப்படி இடை

விடாது தூவிக்கொண்டு காந்தசூரணத்தை யெறித்தால் தெளிவான பாதஇரசத்தைப்போல் ரூபமாகும்.

## காந்தபஸ்மத்தின் குணம்.

காந்தபற்பம் சரீரகாந்தி யுண்டுபண்ணும்; வாதரோகம், அருசி, கபரோகம், க்ஷயரோகம், விஷங்கள், திரிதோஷம், குஷ்டரோகங்கள், மேகபுத்துக்கள், சூலை, மூலம், குன்மம், பாண்டு முதலியரோகங்களைப்போக்கி வாழ்நாளை அதிகரிக்கச்செய்யும்.

## காந்தசிந்தூர குணம்.

காந்த சிந்தூரத்தால் கபரோகம், வாதரோகம், பித்தத்தால்உண்டாகும் தேகமெலிவு, சுக்கிலதோஷம்,எலும்புரிக்கிநோவு இரத்தபித்தவிகாரங்கள், வாந்தி, மார்புநோவு,அருசி மூர்ச்சை, தலைசுற்றல், பாண்டு, மேகத்தாலுண்டாகும்விகாரங்கள், யோனிரோகம், குல்மம், காசசுவாசம், அக்கினிமாந்தியம்,சூலை,அதிசாரம்,விஷரோகங்கள், நாலுவிதங்களான நேத்திரரோகங்கள், சரீரதாபம், கண்டரோகம், குஷ்டம், உன்மாதம், அபஸ்மாரம், இரணங்கள்,திரிதோஷசுரங்கள், மூலரோகம்,காமாலை, கிராணி முதலியரோகங்கள் நிவர்த்தியாகும்.

## அபக்குவ காந்தபற்ப சிந்தூரதோஷங்கள்.

அபக்குவகாந்தபற்பசிந்தூரங்கள்உட்கொள்வதால்விஷங்கள்,தாபங்கள்,உதரரோகங்கள் முதலியவைகளை யுண்டுபண்ணி சுக்கிலநஷ்டத்தையும் காந்தி ஹீனத்தையும் உண்டாக்கி வாழ்நாட்களை சீக்கிறத்தில் முடியச்செய்யும்.

### இதற்குப் பரிகாரம்.

இந்துப்பு, வெண்சிவதைவேர் சூரணம், இவைகள் இரண்டையும் வெந்நீரில் கலந்து உட்கொண்டால் அபக்குவ பற்பபிரயோகத்தாலுண்டாகும்ரோகங்கள் நிவர்த்தியாகும்.

(கவனிப்பு) இரும்பு எழுகு காந்தம் என்கிற மூன்றுதாதுக்களுக்கும் லோஹம் என்றுபெயர். சரகம், மாதவகல்பம், பைரவகல்பம்,பாஹாட்டம்,சித்தசாரணவம், பேஷஜகல்பம், ஜாதககரணம், ஸுஸ்ருகம், அசுவனீயம், ஆயுர்வேதம், சிந்தூரமணிதற்பணம், பூஜ்யபாதீயம், தேவீசாஸ்திரம், சந்திரகல்பம், பிரம்மகாருடம், நித்தியநாதீயம், ரேவணசித்தகல்பம் முதலியகிரந்தங்களில் காந்தத்தையே சிந்தூரிக்கவும் பற்பிக்கவும் உபயோகப்படுத்தவும் சொல்லியிருக்கிறது. அப்படி காந்தம்அகப்படாதபக்ஷத்தில், தீக்ஷணம் அதாவதுஎழுகை உபயோகப்படுத்தவும், எழுகு அகப்படாத பக்ஷத்தில் இரும்பைஉபயோகப்படுத்தவும், இதுவும்அகப்படாதபக்ஷத்தில் மண்டூரம் உபயோகப்படுத்தவும்.

## லோஹபாக பேதங்கள்.

லோஹமானது, மிருது மத்திமம் கரம்என மூன்றுபாகங்களுடையது, ரசத்துடன்கூடியிருக்கிறது மிருதுபாகமென்றும், காய்ந்து இருக்கிறது மத்தியபாகமென்றும், மணலைப்போல்இருக்கிறது கரபாகமென்றும் அறிந்துக்கொள்ளவும்.

## லோஹசுத்தி.

லோஹத்தை சிறுரேக்குகளாய்த்தட்டிக்கொண்டு எண்ணெயில்வேகவைத்து யெண்ணைபோகும்படி வேலன்பட்டை இரசத்தில் ஒருஜாமம்வேகவைத்துஎடுத்து வெய்யலில்உலரவைத்தால் சுத்தியாகும், லோஹத்தை செம்புக்குசொல்லியிருக்கிறசுத்திபிரகாரஞ் சுத்திசெய்யலாம், ஆனால்திரிபலகஷாயத்தால் அதிகமாய் சுத்திசெய்தல்வேண்டும், சுத்திசெய்யும்பொழுது லோஹமானது பதின்மூன்றுபலத்திற்கு அதிகரிக்காமல் ஐந்துபலத்திற்கு குறைவுபடாமல் எடுத்துக்கொள்ளவேண்டியது.

(கவனிப்பு) லோஹபற்பமுறைகள் விதவிதங்களாகயிருக்கிறபடியால் வாசிப்பவர்கள் கவனமாய் வாசித்து செய்து உபயோகப்படுத்தவும்.

## லோஹமாரணம்.

லோஹத்தை சிறியரேக்குகளாய்த்தட்டிக்கொண்டு சுத்திசெய்தகெந்தியை தண்ணீரால் அரைத்து ரேக்குகள்மேல் பூசி நெருப்பில்காய்த்து பொன்னுங்காணிஇலைரசத்தில் தோய்க்கவும் அந்தரேக்குகள் தூள் ஆகிறவரையிலும் நெருப்பில் காய்த்து பொன்னுங்காணி இரசத்தில்தோய்த்துக்கொண்டிருக்கவேண்டியது, பிறகு அந்த ரேக்குகளுக்குச் சமயெடை சுத்திசெய்த பாதரசம் சுத்திசெய்த கெந்தி இவைகளைச்சேர்த்து பொன்னுங்காணிஇலைச்சாறு, ஆடாதோடைஇலைச்சாறு, நொச்சியிலைச்சாறு, இந்தச்சாறுகளில் பிரத்தியேக பிரத்தியேகமாக கல்வத்திலிட்டு அரைத்துக் கஜபுடம் போட்டால் லோஹபற்பமாகும்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்த லோஹசூரணத்தை திரிபல கஷாயத்தால் அறைத்து உருண்டைசெய்துஉலர்த்தி அகலில்வைத்து சீலைமண்செய்து காற்றில்லாதயிடத்தில் பதினாறுஅங்குலஆழமானபள்ளத்தைவெட்டி அதில் புடம்போடவேண்டியது. இம்மாதிரியாக அறுபத்திநாலுபுடம்போட்டால் பத்மராகத்தைப்போன்ற துல்லிதமானலோஹபற்பமாகும். இம்முறையாய் முடித்தலோஹபற்பம் சகலவியாதிகளையுந்நிவர்த்திசெய்யும்.

### மற்றொருவிதம்.

ஓ பெண்களின்நாயகமே! சுத்திசெய்தஇரசம் பாகம்-க, சுத்திசெய்த கெந்தி பாகம் - உ, லோஹசூரணம் பாகம் - ங, இவைகளை கல்வத்திலிட்டு கற்றாழை இரசத்தால் இரண்டுஜாமமறைத்து அதை செம்புபாத்திரத்தில்வைத்து அந்தபாத்திரத்தின்வாயை ஆமணக்குஇலையால்மூடி இரண்டுஜாமம்சூரியபுடம்வைத்து மேல் பாத்திரத்திற்கு நன்றாய் சூடுதாங்கினவுடனே அதையெடுத்து தானியராசியில்மூன்றுநாள்வரையிலும்புதைத்துவைக்கவேண்டியது, பிறகுஅம்மருந்தையெடுத்து கல்வத்திலிட்டுஅரைக்க பற்பமாகும்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்த ஹயப்பொடியை கல்வத்திலிட்டு மைபோலரைத்து நாவல்பட்டைசாற்றில்இரண்டுஜாமம்வேகவைத்து

மறுபடியும் கல்வத்திலிட்டு அரைக்கவும் இம்மாதிரியாக நெல்லிசாற்றிலும் புளியிலேச்சாற்றிலும் முருங்கப்பட்டைச் சாற்றிலும் கோமூத்திரத்திலும் வேகவைத்து கல்வத்திலிட்டு அரைத்து மூசையில்வைத்து சீலைமண்செய்துகெஜபுடம்போட பற்பமாகும். இந்தலோஹபற்பத்தை இரசயோகங்களில் பிரயோகப்படுத்தலாம்.

## லோஹ சிந்தூரம்.

லோஹபற்பத்தை, திரிபலஇரசம் ஆலன்பால்எருக்கன்பால் இவைகளால் ஏழுநாள் அரைத்து கஜபுடம்போடவும். இம்மாதிரி ஏழு கஜபுடமிடவும் அல்லது கருமான் உலையில் வைத்து காய்ச்சினுல் லோஹம் சிந்தூரமாகும்.

## லோஹ துரிதி.

கெந்தி சிகப்புஉப்பு இவைகள் சமயெடையாய் சூரணித்து எழுகுபொடியை சட்டியில்போட்டு தீயில்வைத்து ஷ சூரணத்தை தூவிக்கொண்டிருந்தால் எழுகு நீர்த்து பாதரசம்போல்ஆகும், மேலும் சகல தாதுப்பொருள்களும்இந்தச் சூரணத்தால்நீர்க்கும்என்றுஅறிக.

## லோஹபற்ப குணம்.

(ரஸரத்திஞகரம்) லோஹபற்ப பிரயோகத்தால் கஷ்டமானவியாதிகள் நிவர்த்தியாகும், லோஹபற்பத்தை சதாகாலம் உட்கொள்ளுவதால் சரீரகாந்தியும் வலிவும் உண்டுபண்ணி நறையைநீக்கும.

(நித்தியநாதீயம்) லோஹபற்பம் வாழ்நாட்களை நீடிக்கச்செய்து வீரியத்தைவிர்த்திசெய்து பாண்டு மேகம் குஷ்டம் வாதம் நறைமுதலிய வியாதிகளைப் போக்கி பசிதீவினை யுண்டாக்கும.

(ஆயுர்வேதம்) லோஹபற்பம் விஷக்கடிகள்,காமாலை, எலும்புரிக்கிநோவு, பித்தரோகம், மூலம்,கிராணி,கபம், சோகை,

பிரமேகங்கள், குன்மம், குஷ்டம், அக்கினிமாந்தியம்முதலிய வைகளைப் போக்கி தேகத்திற்கு காந்தியையும் வலிவையும் கொடுக்கும்.

## அசுத்தலோஹ தோஷம்.

அசுத்தலோஹபற்ப பிரயோகத்தால் குட்டம், சூலை, மேகம், க்ஷயம், காமாலை, மார்வலி, வீரியநாசம், தாபம் முதலியரோகங்களையுண்டாக்கும்.

### இதற்குப் பரிகாரம்.

வெள்ளறுகுஇரசத்தில்,தேனுகிலும் அல்லது சர்க்கரையாகிலும்போட்டு உட்கொண்டால் ஷை பற்பத்தா லுண்டாகும்வியாதிகள் நிவர்த்தியாகும்.

### மற்ருெருவிதம்.

கற்கண்டு தேன் இவைகளில் ஏலக்காய்சூரணித்துக்கலந்து மூன்றுநாள்உட்கொண்டால் மேற்படிபற்பதோஷத்தால் வுண்டாகும்வியாதிகள் சகலமும் சூரியனைக்கண்டபனிபோல் பறந்தோடும்.

## லோஹயோனிரக்ஷமந்திரம்.

லோஹமென்ருல் காந்தம், எழுகு, இரும்பு, இம்மூன்றை அடியில்கண்டிருக்கும் மந்திரத்தைச் சபித்துக்கொண்டு புடமெரிக்கவும். ஓம் அம்ருதோத்பவாயபட்.

## லோஹமர்த்தன மந்திரம்.

ஓம் அம்ருதோத்பவாயசிவாஹஎன்று ஜபித்துக்கொண்டு லோஹத்தை கல்வத்திலிட்டு அரைக்கவும்.

## பலிதான மந்திரம்.

ஓம் நமச்சண்ட வஜ்ரபாணியே மஹாயக்ஷ சேனுதிபதயே குருகுரு மஹாவித்யாவிலாய சுவாஹ என்று ஜபித்துக் கொண்டு பலிகொடுக்கவும்.

## பக்ஷணமந்திரம்.

ஓம் அம்ருதம் பக்ஷயாமிசுவாஹ இந்தமந்திரத்தை ஜபி த்துக்கொண்டு லோகபற்பத்தை உட்கொள்ளவேண்டியது.

## லோஹ விசேஷகுணம்.

ஆயுர்வேதம் மண்டூரம் அதாவது சிட்டத்தைவிட இரு ம்பு பதின்மடங்கு குணமுடையது, இரும்பைவிட யெழுகு நூறுமடங்கு குணமுடையது, எழுகைவிட காந்தம் லக்ஷ மடங்கு மேலானதும் வீரியவிருத்திஉண்டுபண்ணுதலுமாய் இருக்கிறது. ஆகையால் எப்பொழுதும் காந்தத்தைஉட்கொ ண்டால் நிறைமரணம் முதலியவைகளைப்போக்கும்.

(கவனிப்பு) லோஹம் அதாவது எழுகைப்போல் இரும் பையும் சுத்தித்து பற்பங்கள் செய்யவேண்டியது.

இரும்புக்குமுண்டம், அயஸ்ஸாரம், கிருஷ்ணலோஹம், அயம் என பெயர்களாம்.

## அயபற்பத்தின் குணம்.

அயமானது நேத்திரவியாதிகளையும், தேகமெலிதல்முத லிய வியாதிகளையும், கபம், வாதம், சூலை, மூலம், பிரமேகம், காமாலை, பாண்டு, குன்மம், ஆமவாதம், சோபை, மார்வலி முதலிய வியாதிகளை நிவர்த்திசெய்யும்.

## அசுத்த அயதோஷம்.

அசுத்த அயதோஷத்தால் அசுத்தலோஹ பற்பத்தால் உண்டாகும் வியாதிகள் சகலமும்காந்தபற்பம் எழுகுபற்பத் திற்குசொல்லியிருக்கும் பரிகாரம்செய்தால்நிவர்த்தியாகும்.

## லோஹபற்ப அநுபானம்.

லோஹபற்பத்தை சுத்திசெய்தஇரசத்தால் உட்கொண் டால் சகலவியாதிகளும்போம். சிறுதேக்கு, திரிகடுகு, தேன்

இவைகளுடன் உட்கொண்டால்தாதுவிகாரங்கள்போம். சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகெந்தி, தேன் இவைகளுடன் உட்கொண்டால் கபரோகங்கள்போம். லவுங்கப்பூ, இலைபத்திரி, ஏலக்கா, சிறுநாவல்பூ, இவைகளின்சூரணம், சர்க்கரை இவைகளுடன் உட்கொண்டால் பித்தரோகம்போம். வெள்ளைச்சாரணை சூரணம், பசும்பால் இவைகளுடன் உட்கொண்டால் விசேஷவலியும், வெள்ளிச்சாரணைகியாழத்தால் பிரயோகித்தால் பாண்டுரோகமும், மஞ்சள்சூரணம், தேன் அல்லது திப்பிலி சூரணம், தேன் இதுகளில் சாப்பிட்டால் அனேகவிதமான பிரமேகங்களும், சிலாசித்து கலந்து உட்கொண்டால் மூத்திர அடைப்பும், ஆடாதோடை, லோஹபற்பம், திப்பிலி, சூரணம், திராக்ஷை, தேன் இவைகளில் கொடுத்தால் ஐந்துவிதமான காசங்கள்போம். வெற்றிலைஇரசத்தால்உட்கொண்டால் தாதுபுஷ்டி, சரீரகாந்தி, பசிதீவனமுண்டாகும். லோஹபற்பத்தை முறைதவராது அனுபானங்களுடன் உட்கொண்டால் தேகம் இரும்பைப்போல் ஆகும்.

## மண்டூரம் அதாவது சிட்டம் சுத்தி.

சிட்டத்தை கருமான் உலையில்வைத்து தாணிக்கா விரகு கரியால் சிவக்கக்காய்ச்சி பனமரத்தொட்டியில்கோமூத்திரம் விட்டு அதில்ஏழுதருதி தொவைத்தால் சுத்தியாகும், அதை மறுபடியும் உலையில்வைத்து ஊதி கோமூத்திரத்தில் தோய்த்தால் சுத்தியாகும் இப்படிசுத்திசெய்தமண்டூரத்தை மருந்துகளுக்கு உபயோகப்படுத்தவேண்டும்.

## மண்டூரபற்பம்.

சுத்திசெய்தமண்டூரத்தைகோமூத்திரத்தில் மூன்றுதடவைவேகவைத்து மூத்திரம் சுண்டினபிறகு திரிபல கஷாயத்தில் மூன்றுநாள்கஷாயம் சுண்டுகிறவரையிலும்வேகவைத்து பிறகு அதையெடுத்து கல்வத்திலிட்டு கோமூத்திரம் விட்டு அரைத்து பில்லைதட்டி உலர்த்தி சிலைமண்கொடுத்து கஜபுடமிடவும் இம்மாதிரியாய் ஐம்பது புடமிடவும் பிறகு திரிபல

கஷாயத்தாலும் ஐம்பதுகஜபுடமிடவும் அப்பொழுது சுத்தமான மண்டூரபஸ்மமாகும், அதை சகலவியாதிகளுக்கும் அனுபானத்துடன் உட்கொண்டால் மிகவும் நன்மையாம்.

## மண்டூரகுணம்.

சுத்திசெய்தமண்டூரபற்பமானது காரமாயும் வெப்பமாயும் இருக்கிறதுமல்லாமல் புழுக்கள், காலஞ்சென்றசுரங்கள், பாண்டுவீக்கங்கள், க்ஷயங்கள் முதலிய வியாதிகளையும்நிவர்த்திசெய்யும். லோஹபற்பத்தைப்போல் இதையும்சகலமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

(கவனிப்பு) மண்டூரம் லோஹத்தின் உட்பிரிவு ஆகையால் அபக்குவ லோஹபற்பசேவையா லுண்டாகும் வியாதிகளைப்போல் அசுத்தமண்டூரம் சாப்பிடுவதா லுண்டாகும் ஆகையால் லோகபற்பத்திற்கு சொல்லியபரிகாரம் இதற்கும் செய்தால் அசுத்த மண்டூரத்தா லுண்டான வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குமென்றறிக.

## லோஹாஷ்டக பற்பவிதி என்றால் சுவர்ணாதி தாதுக்கள் பற்பமாகும் முறை.

வங்கமானது முருக்கன்இரசத்தாலும், தாளகத்தாலும், பற்பமாகும். நாகம், எருக்கன்பால், மனோசிலை, இவைகளால் பற்பமாகும். தாம்பரம், ஆட்டின்பால், கெந்தி, இவைகளால் பற்பமாகும். எழுகு, நாகம், இவைரெண்டும் எருக்கன்பால், லிங்கம், இவைகளாலும், வெள்ளியானது, சதிர்க்கள்ளிப்பால், நிமிளை, இவைகளாலும், பொன், மனோசிலை, நாகபற்பம், இவைகளாலும் பற்பமாகும்.

தாளகத்தால் வங்கமும், லிங்கத்தால்லோஹமும், ஈயத்தால்பொன்னும், மனோசிலையால் ஈயமும், கெந்தியால் தாம்பிரமும், நிமிளையால் வெள்ளியும், உயிர் நீங்கும்.

## நவலோஹ பற்பபரீக்ஷை.

சுவர்ணபற்பமானது புருவின்கழுத்தின்நிறமாயும், தாம்பிரபற்பம், வாந்தியும், பிராந்தியும், இல்லாமலும்,லோஹபற்பம் தண்ணீரின்மீது மிதக்கும்படியாகவும் இருந்தால் சுத்தமானதென்று அறிக.

சகலலோகபற்பங்களும், மித்திரபஞ்சத்தைச் சேர்த்து நெருப்பில்வைத்து ஊதினல் மறுபடியும் உயிராகாமல் சலத்தின்மீதுபோட்டால் மிதந்துக்கொண்டிருந்தால் பரிசுத்தமானதென்று அறியவும்.

மித்திரபஞ்சகமென்றால், வெல்லம், குங்கிலியம், குண்டுமணி, நெய், தேன், வெங்காரம், இவைகளுடன் கலந்து ஊதினல் மறுபடியும் ஜனிக்குமென்று வைத்திய சாஸ்திரங்கள் முறையிடுகிறது.

தேன், வெல்லம், நெய், குண்டுமணி, வெங்காரம், இவ்வைந்தும் மித்திரபஞ்சகமென்றுபேர்.

மறுபடியும் சனித்தபற்பத்தையும், கெந்தியையும், சமவெடையா யெடுத்துக்கொண்டு கற்றாழை இரசத்தால் ஒரு நாளறைத்து மடக்கில்வைத்து சீலமண்செய்து கஜபுடமிட்டால் சகலலோகங்களும் மறுபடியும் பிரவாம லிருக்குமென்று அறிந்துக்கொள்க.

## சூதாதிபற்பகுணம்.

இரசத்தைவிட வச்சிரத்திற்கு கோடிகுணம் அதிகம், அப்பிரேகத்தில்ஆயிரம்குணம், பொன்னில் நூறுகுணம்,லோகத்தில் எண்பதுகுணம், காந்தத்தில்நாற்பதுகுணம்,வெள்ளியில் அறுபத்திநான்கு குணம், ஈயத்தில் முப்பத்திரெண்டு குணம், அதிகமென்று சொல்லியிருக்கிறது.

## நவலோக பற்பங்கள் உட்கோள்வோர் விடவேண்டிய பதார்த்தங்கள்.

லோகபற்பத்தை உட்கொள்ளுவோர், கடுகு, எள்ளெண்ணெய்,உளுந்தம்பருப்பால்செய்த பண்டங்கள், புளிப்பு,கீரை

வகைகள், கல்யாணபூசினிக்காய், வாழைத்தண்டு, பாவக்காய் இவைகளை விடவேண்டியது.

## உபதாதுக்கள்.

நிமளை, மயில்துத்தம், தாளகம், நீலாஞ்சனம், அப்பிரகம், மனோசிலை, பால்துத்தம் என உபதாதுக்கள் ஏழாம்.

## நிமளையின்பேதங்கள்.

நிமளையானது ஹேமமாக்ஷிகம், ரௌப்பிய மாக்ஷிகம், காம்ஸ்யமாக்ஷிகம், தம்ரமாக்ஷிகம் என நான்குவகையாம், அதாவது பொன்நிமளை, வெள்ளி நிமளை, வெண்கலநிமளை, செம்பு நிமளை, என்பவைகளாம், இவைகளில் சுவர்ணமாக்ஷிகம் அதாவது பொன்நிமளை, ரௌப்பியமாக்ஷிகம், அதாவது வெள்ளி நிமளை யென இரண்டு ஔஷதங்களுக்கு உபயோகப் படுத்த வேண்டும்.

## நிமளைலக்ஷணம்.

சுவர்ணமாக்ஷிகம், அதாவதுபொன்மாக்ஷிகம், கன்னிய குமரிதேசத்தில் அகப்படும் அதுபத்துமாற்றுப் பொன்னைப் போல் பிரகாசித்துக்கொண்டு மூலைவாட்டமில்லாமல் இருக்கும், ரௌப்பியமாக்ஷிகம் அல்லது தாரமாக்ஷிகம் அதாவது வெள்ளி நிமளை, குன்மமாயும், கோணலாயும், தட்டமாயும், வேறுதேசங்களின் அகப்படும்படியானதாயும், ஐந்துமாற்றுப் பொன்னைப்போல் பிரகாசமாயும், பாஷாண முடையதாயும், சுவல்பகுணத்தைக் கொடுக்கும்படியானதாயு மிருக்கும்.

## சுத்தி.

நிமளையை ஆடாதோடை, வெள்ளைச்சாரணை, நொச்சிலி என்பவைகளின் இலைச்சாற்றுகளில் எதினலாகிலும் டோலாயந்திரத்தில் ஒருநாள் வேகவைத்தால் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

நிமிளையை யுடைத்து மல்லுதுணியில் மூட்டை கட்டி ஆட்டுமூத்திரத்தில் நான்குஜாமமும் புளித்தகாடிநீரால் நாலு ஜாமமும் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

நிமிளையைசூரணித்து துணியில்மூட்டைகட்டி ஆமணக் கெண்ணெய், கொடி மாதளைப்பழச்சாறு, வாழைத்தண்டின் சாறு, இவைகளால் ஒவ்வொன்றில் இரண்டுநாழிடோலாயந் திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம், அல்லது நிமிளையை நெ ருப்பில் காய்ச்சி திரிபலகஷாயத்தில் பத்துதடவை தோய்த் தால் சுத்தியாம்.

ஒருபலம்நிமிளையைத் தேன்விட்டு அரைத்து உருண்டை செய்து மல்துணியில் மூட்டைக்கட்டி கொள்ளுச்சாறு, கோ மூத்திரம், காடிநீர் இவைகளால் பிரத்தியேகபிரத்தியேகமாய் ஒருஜாமம் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

நிமிளை 3-பாகம், இந்துப்பு 1-பாகம், இவைஇரண்டை யும் பழச்சாறு மாதுளம்பழச்சாறு இந்தச்சாறுகளால்அரை த்து இரும்புபானையில் போட்டு அடுப்பின்மீதுவைத்துஅந்த இரும்புபானை சிகப்பு ஆகிறவரையினும் இரும்புகரண்டியால் மெள்ள ஆட்டிக்கொண்டிருக்கவும், பிறகுஅதை அடுப்பிலிரு ந்து யெரக்கி சுடுகைஆரினபிறகு அதை யெடுத்து ஔஷதங் களுக்கு உபயோகப் படுத்திக்கொள்ளவும்.

## பொன்நிமிளை பற்பம்.

சுத்திசெய்த பொன்நிமிளையை கொள்ளுரசத்தாலாவது ஆட்டுமூத்திரத்திலாவது, எள்ளெண்ணெயிலாவது, மோரிலா வது கல்வத்திலிட்டு அரைத்து உருண்டைசெய்து ஓட்டில் வைத்து சிலைமண்செய்து ஒருதடவை கஜபுடமிட்டால் அது சிகப்புவர்ணமுடைய பற்பமாகும்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்தகெந்தி 1 - பாகம், சுத்திசெய்த நிமளை - 4- பாகம், இவைகளை கல்வத்திலிட்டு ஆமணக்கு எண்ணெயால் அரைத்து உருண்டைசெய்து ஒட்டில் வைத்து சீலைமண்செய்து ஒருகஜபுடம்போட்டால் சிந்தூரவர்ணமாய் பற்பமாகும்.

## பொன்நிமளை பற்பத்தின் குணம்.

பொன்நிமளைபற்பத்தால், சுக்கிலத்தைவிருத்திசெய்யும், கண்டஓசையைசுத்திசெய்யும்,கண்ணோய்களைபோக்கடிக்கும் ஸ்திரீசம்போகத்தில் விசேஷவலிவு கொடுக்கும்,மேலும்வாயுகுமாரன் அக்ஷயகுமாரனை சங்கரித்ததுபோல் அடிவயற்றின் வலி, வீக்கம், மூலரோகம், பிரமேகங்கள், குஷ்டரோகங்கள், வயற்றுநோய்கள், க்ஷயங்கள்,பாண்டுவிஷங்கள்,பித்தரோகங்கள், காமாலை, வாதரோகங்கள்முதலியவைகளை பேர்காட்டாமல் பரக்கடிக்கும்.

## அசுத்த நிமளையால் உண்டாக்கும் தோஷங்கள்.

அசுத்தநிமளை பற்பம் உபயோகித்தால் அநேகவிதரோகங்கள் உண்டாகிறது.

### அதற்குச்சாந்தி.

கொள்ளுகஷாயத்தை குடித்தாலும் அல்லது மாதளம் பழத்தோலை தின்றாலும் அசுத்தநிமளையின்தோஷம்நீங்கும்.

## பற்பஅநுபானங்கள்.

தேன் திப்பிலி சூரணம் இவைகளால் பொன்நிமளை சூரணத்தை உபயோகித்தால் கொடியரோகங்கள்,காசம்,பிரமை முதலிய நோய்கள்போம்.

வெள்ளிநிமளையையும் பொன்நிமளைக்குச் சொல்லியிருக்கிறதுபோல், சுத்தியும், பற்பமும், அநுபானமும், செய்துக் கொள்ளவேண்டும்.

## மயில்துத்தத்தின் சுத்தி.

மயில்துத்தம் புருமலம் இவைஇரண்டும் சமயிடை இத ற்கு பத்துபாகம்வெங்காரம் இவைகளை யொன்றாய்க் கலந்து கல்வத்திலிட்டு அரைத்து யுருண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஓட்டில்வைத்து சீலைமண் செய்து நெருப்பின்மீது இரண்டு மூன்று நிமிஷம்வைத்து பாகஞ்செய்து எடுத்து அனல்ஆறின பிறகு அதைபெடுத்து தயிராலரைத்து மேற்கூறிய பிரகாரம் புடம்போடவேண்டியது மறுபடியும் அதையெடுத்து அனல் ஆற்றி தேனால் அரைத்து புடமிடவேண்டியது, இம்மாதிரி யாய் செய்தால் மயில்துத்தம் சுத்தமாகும்.

மற்றொருவிதம்.

மயில்துத்தத்தை தயிரால்அரைத்து பில்லைசெய்து ஓட் டின்மீதுவைத்து அனல்கொடுத்தால் சுத்தியாம்.

## மயில்துத்தத்தின் சத்து.

மயில்துத்தம் நாலுபங்கு வெங்காரம் ஒருபங்கு இவை இரண்டையும் சூரணித்துஅரைத்து தேனும்நெய்யும் கலந்து கோஷ்டயந்திரத்தில் வைத்து காடாக்கினியாய் யெரித்தால் அது நீர்த்து அதில் சத்திரங்கும், அந்தசத்தானது கிளிமூக் கைப்போல் சிகப்புவர்னமுடையதா யிருக்கும்.

(கவனிப்பு) கோஷ்டயந்திர மென்றால் ஒருமொழம் பிர மாணமான கொட்டத்தை செய்துக்கொண்டு அதை யெட்டு அங்குலம் வாட்டமாய் பூமியில் புதைத்து கீழ்பக்கத்தில் வா யினிடத்தில்ஒருபள்ளம்செய்து அதைசெவ்வையாய்மெழுகி அதில் பிடிக்கிற அளவு கரிபோட்டு கொட்டத்தின் மேல்வா யில் துரித்தியை வைத்து ஊதவும் இதற்கு கோஷ்ட யந்திர மென்றபேர்.

## மற்றொருவித மயில்துத்தத்தின் சுத்தி.

மயில்துத்தம் இதற்குசமஎடை பூனையின் மலம் இவை இரண்டிற்குமூன்றிலொருபாகம் தேன், வ-பாகம் வெங்காரம்

இவைகளை யொன்றாய்ச்சேர்த்து கல்வத்திலிட்டு அறைத்து பில்லைசெய்து ஓட்டில்வைத்து சீலைமண்செய்து மூன்றுபுடமெரித்தால் வாந்தி, பிரமை முதலிய தோஷங்க ளில்லாமல் சுத்தியாம்.

## மயில் துத்தத்தின் குணமும் தோஷமும்.

சுத்திசெய்த மயில்துத்தத்தால் கபம், சொறி, குஷ்டம், விஷம், கிரிமிரோகங்கள்போம். கண்களுக்கு சுகஞ்செய்யும், திரிதோஷங்களை ஓட்டிவிடும், மலத்தை செவ்வையாய்த் தள்ளும், அசுத்தமான துத்தத்தால் திரிதோஷங்கள்விருத்தியாம்.

### இதற்குப் பரிகாரம்.

பழச்சாறுவது, பொரியையூரவைத்த ஜலத்தையாவது, வெட்டிவேரூரின ஜலத்தையாவது, மூன்றுநாள்உட்கொண்டால் அசுத்தமயில்துத்தத்தா லுண்டான நோய்கள் தீரும்.

## மயில்துத்த அனுபானங்களும் தீரும் வியாதிகளும்.

மயில்துத்த பற்பத்தை வெண்ணெய் கலந்து சாப்பிட்டால் சொறி, விஷம், குஷ்டம், இவைகள் நீங்கும். வாய்விளங்கசூரணத்தால் உட்கொண்டால் கிருமிரோகம்போம். வெற்றிலைச்சாற்றால் உட்கொண்டால் கபரோகம்போம். மேலும் மயில்துத்த பற்பத்தையும், நிம்ளையையும், தேனில்கலந்து கண்ணுக்கு கலிக்கமிட்டால், தீராதநேத்திரநோய்கள் தீரும். ஆமணக்கு யெண்ணெயில்கலந்து உட்கொண்டால், சுகமான பேதிகளாம்.

## பால்துத்தத்தின் சுத்தி.

ஒருபலம் பால்துத்தத்தை அறைத்து சூரணித்துதுணியில்மூட்டைகட்டி கொஞ்சம் நீர்ப்பானையில் வைத்து எறித்தால் சுத்தியாம்.

## கபரிஅல்லது மடல்துத்தத்தின் சுத்தி.

ஒருபலம் கபரியை எடுத்து அறைத்து சூரணித்துதுணியில் மூட்டைகட்டி சிறுநீரில் ஏழுஜாமமும், கோமூத்திரத்தில் ஏழுஜாமமும், டோலாயந்திரத்தில் எரித்தால்சுத்தியாம் அல்லது அந்தசூரணத்தை பசுநெய்யில் கலந்து நெய் சுண்டு கிறவரையிலும் எறித்தாலும் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

கபரியை சிறுநீரிலாகிலும், கோமூத்திரத்திலாகிலும், டோலாயந்திரத்தில் ஏழுநாள் எறித்தால் சுத்தியாம்.

## கபரியின் குணம்.

சுத்திசெய்தகபரி, இரக்ததோஷம், குதரரோகம், ஜீரணசுரம், அதிசாரமுதலிய ரோகங்களை பரக்கச்செய்யும்.

## அசுத்தகபரிதோஷம்

### அதற்குப்பரிகாரம்.

அசுத்தகபரியால் அநேகரோகங்கள்உண்டாகும் கோமூத்திரத்தை நாலுநாட்களாய்உட்கொண்டால் அசுத்தகபரியாலுண்டாகும் ரோகங்கள் நீங்கும்.

## கபரி அநுபானங்கள்.

மிளகுசூரணம் 1-பாகம், சுத்திசெய்த கபரி 2 - பாகம், இவைஇரண்டிற்கும் எட்டில் ஒருபாகம் பசும் வெண்ணெய் இவைகளை ஒன்ருய்ச்சேர்த்து செவ்வையாய் அறைக்கவும், பிறகு நெய்யின்கசடுபோகும்படிக்கு பழச்சாற்ருல்அரைத்து நெய்யின் கசடுபோனபிறகு மூன்று குண்டுமணியெடை மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி அதில் ஒரு மாத்திரையை திப்பிலிசூரணம் தேன் இவைகளுடன் கலந்துக்கொடுத்தால் விஷசுரங்கள், தாது, கபசுரங்கள், மூலம், ஜீரணசுரம்,

நேத்திரரோகம், பித்தரோகம், இரக்தவிகாரம், இரக்தாதிசாரங்கள் முதலியவியாதிகள்நீங்கும். இதற்குபசும்பாலும் சோறும் சாப்பிடும்படி வைக்கவும்.

## அஞ்சனங்கள்.

அஞ்சனங்கள் ஐந்துவிதங்கள் அவையாவன.

புஷ்பாஞ்சனம், வெண்மையாயும், சுத்தமாயும், சீதளமுடையதாயும், சகல நேத்திர வியாதிகளை போக்கடிப்பதாயும் இருக்கின்றது.

நீலாஞ்சனம், கருநிறமாயும், நேத்திரதோஷங்கள், க்ஷயங்கள் இவைகளைப் போக்கடிக்கும்.

இரசாஞ்சனம், பச்சையாயும், விஷதோஷங்களையும், நேத்திரரோகங்களையு மோட்டிவிடும்.

ஸ்ரோதோஞ்சனம், கபிலவர்ணமாயும், நேத்திரரோகங்களையும், சகலரோகங்களையும் போக்கடிக்கும்.

சௌவீராஞ்சனம், சிகப்பாயும், கண்நமையையும், விஷதோஷங்களையும் போக்கடிக்கும்.

(கவனிப்பு) வெங்காரம், சங்கு, பலகாரை, ஐந்துவித அஞ்சனகற்கள், காவிக்கல், அன்னபேதி, பூநாகம்இவைகளை பழச்சாற்றில் ஒருநாள் சூரியபுடமிட்டால் சுத்தியாம், பிறகு இவைகளை அவுஷதங்களில் உபயோகப்படுத்தலாம்.

## அஞ்சனங்கள் சுத்தி.

அஞ்சனங்கள் ஐவகைகளையும் கரசனுங்கணியிலே இரசத்தால் ஒருநாள்முழுதும் ஊரவைத்தால் சுத்தியாம்.

மற்றொருவிதம்.

அஞ்சனங்களை சூரணித்து அதை பழச்சாற்றால் அறைத்து ஒருநாள்முழுதும் சூரியபுடமிட்டால் சுத்தியாம்.

## நீலாஞ்சன குணானுபானங்கள்.

சௌவீராஞ்சனம்சீதளமாயும், மலத்தைபந்திக்கும்படியானதாயும், கண்களுக்கு நன்மை செய்யும்படியானதாயும்,

மதுரமாயும், க்ஷயம், பித்தம், இரத்தம், கபம், இந்தவியாதிகளை தலைகாட்டாமல் போக்கடிக்கும். சிறுநாவல்பூ, அபினி, இவைகளுடன் நீலாஞ்சனத்தைக் கொடுத்தால் அதிசாரம், கிருணி, இவைகள்போம். சுத்திசெய்த இரசம், ஈயம், இவைகளிரண்டும் சமயிடை இந்தஇரண்டுஇடைகளுக்குசமயிடையாய் சௌவீராஞ்சனம் இரசத்திற்குஐந்தில் ஒருபாகம்சுத்திசெய்த கற்பூரம் இவைகளைக் கல்வத்திலிட்டு செவ்வையாயரைத்து கண்களுக்குபோட்டுக்கொண்டால் சகலமான நேத்திரரோகங்கள் போகிறதுமல்லால் முகத்திற்கு நல்லகாந்தியுண்டாகும், நீலாஞ்சனம்,இந்துப்பு,குஷ்டம், தகரவிரைகள், வாயுவிளங்கம்,கடுகு இவைகளைக் கஞ்சியிலரைத்து தடவினால் நலம். மண்டை, குஷ்டம் முதலியநமைகள் அதிசீக்கிரத்தில் பறக்கும். சர்க்கரை, நெய் இவைகளுடன் நீலாஞ்சனத்தை சேவித்தால் பித்தரோகம்நிவர்த்தியாம். சுக்கு, கடுக்காய்,வெல்லம் இவைகளுடன்உட்கொண்டால் கபரோகம்போம். நீலாஞ்சனம், சுத்திசெய்த பொன்பற்பம் இவையிரண்டையும்சமயிடையாய்ச்சேர்த்து வெண்ணெய், சர்க்கரை, தேன் இவைகளுடன் குன்றியிடை சாப்பிட்டால் க்ஷயரோகம் நிவர்த்தியாகி சரீரத்தில் விசேஷவலிவும் காந்தியுமுண்டாகும்.

(கவனிப்பு) அஞ்சனங்கள் ஐவகைகளுக்கும் ஒரேவிதமானகுணங்கள் இருக்கிறதுபோல் தெரியவருகின்றது இதைக்குறித்து மேற்சொல்லிய நீலாஞ்சனம் சௌவீராஞ்சனங்களைக்குறித்து தேவிசாஸ்திரத்தில் அநுபானங்களுடன் அவைகளின் பிரயோகங்களை சொல்லியிருக்கின்றது ஆயுர்வேதத்தில் ஐவகையும் ஒன்றுயெடுக்கலாமென்று சொல்லி யிருக்கிறது. ஆகையால் பண்டிதர்களை நீலாஞ்சனத்தையும் சௌவீராஞ்சனத்தையுமே உபயோகப்படுத்த வேண்டிய தென்று அறிந்துக்கொள்ள,வேண்டியது.

## மனோசிலை பேதங்கள்.

மனோசிலை மூன்றுவிதங்களாக யிருக்கின்றன அவையாவன ஸ்யாமாங்கியானது லிங்கம்போல் சிகப்பாயும்கொஞ்சம் பச்சைநிறமாயும் பிரகாசமற்று இருக்கும்.

கரவீரமென்பது, சிகப்பாயும்,சூரணமாயும்,பளுவாயும் இருக்கும்.

திவிகண்டமென்பது, கொஞ்சம்சிகப்பும், பச்சைநிறமாயும், பளுவாயுமிருக்கும்.

இவைமூன்றில் இரண்டாவதாகிய கரவீரமனோசிலையை அவிடதங்களில் உபயோகிக்கவேண்டியது.

## மனோசிலை சுத்தி.

மனோசிலையை மெல்லிய துணியில் மூட்டைகட்டி ஆட்டு மூத்திரத்தாலும் டோலா யந்திரத்தாலும் மூன்றுநாள் எரித்தால் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

மனோசிலையை அகத்தி, இஞ்சி, கரசனுங்கணி இவைகள் இரசத்தில் பிரத்தியேக பிரத்தியேகமாய் ஏழுமுறை வேகவைத்து ஏழுமுறை அரைத்தால் சுத்தியாம்.

### மற்றொருவிதம்.

மனோசிலையை சுத்தமான கல்வத்திலிட்டு பசுமோரால் ஒருஜாமம் அரைத்தால் மனோசிலை சுத்தியாம்.

## மனோசிலையின்குணம்.

சுத்திசெய்தமனோசிலையால் சுரம்,நேத்திரரோகம், இரைப்பு, இருமல், பூதபீடை, கபரோகம், மூத்திர அடைப்பு, விஷம், குஷ்டரோகம் முதலியவைநீங்கும்.

## மனோசிலை அனுபானங்கள்.

சுத்திசெய்தமனோசிலை 1-பாகம், சங்குபற்பம் 2-பாகம், மனோசிலை யெடைக்கு பாதிபாகம் மிளகுசூரணம் மிளகு சூரணத்திற்கு பாதிபாகம் இந்துப்பு இவைகளை யொன்றாய்க்கலந்து மைபோல்சூரணித்து அதில் தேன்கலந்து கண்ணுக்கு கலிக்கமிட்டால் சுக்கிலரோகம், திமிர் ரோகம், கண் ஊளை இவைகள்போம். தயிரின்மேல்சலத்தால் மேற்சொல்லிய சூர

ணத்தை கண்ணுக்கு கலிக்கமிட்டால் கண்சிவப்பு நீர்வடிதல் முதலிய ரோகங்கள் போம். திப்பிலி, மிளகு, சுத்திசெய்த மனோசிலை, இவைமூன்றையும் சமயிடை எடுத்து சூரணித்து தண்ணீரால் அரைத்து கண்ணுக்கு கலிக்கமிட்டால் பூதபீடை, ஜன்னி, பாதசுரம், நிவர்த்தியாகும். சிறுதேக்கு, சுக்கு, இவைகள் சூரணத்தால் உட்கொண்டால் இரைப்பு நீங்கும். பொன் பற்பத்துடன் கொடுத்தால் விஷபீடைபோம். ஆடாதோடைச்சாறு, திரிகடுகுசூரணம், இவைகளுடன் கலந்து கொடுத்தால் கபநோய், இருமல்முதலிய வியாதிகள் போம். மனோசிலை, ஏலக்காய், மருதம்பட்டை, அன்னபேதி, ஓட்டரை,கோரைக்கிழங்கு, வேங்கைப்பட்டை,லோத்திரம்பட்டை கோரோசனம், இவைகளைச் சூரணித்து கடுகு எண்ணெயில் கலந்து தேகத்தில் பூசிக்கொண்டால் விஷக்கடி நமையுடன் கூடியரணம், குஷ்டம், சொறி, பவித்திரம், மூலம், தலையில் மயிர்கள் உதிரும்படியான வியாதிமுதலியவைபோம்.

## அசுத்த மனோசிலையின் தோஷமும் பரிகாரமும்.

அசுத்தமனோசிலையால், வாந்தி பிரமைமுதலிய அனேக வியாதிகள் உண்டுபண்ணும்.

பசும்பால், தேன் இவைகளைக்கலந்து மூன்றுநாள் உட்கொண்டால் அசுத்தமனோசிலையினு லுண்டாகும் வியாதிகள் பறந்தோடும்.

---

## கௌரீபாஷாண சுத்தி.

இரண்டு பலம் கௌரீபாஷாணத்தை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து துணியில் மூட்டைகட்டி சுண்ணம்பு நீரில் டோலாயந்திரத்தில் இரண்டு ஜாமம் எறித்தால் சுத்தியாம்.

---

## வெள்ளைபாஷாணத்தின் சுத்தி.

வெள்ளைபாஷாணத்தை சூரணித்து துணியில் மூட்டைகட்டி டோலாயந்திரத்தில் சுண்ணம்புநீரில் ஒருநாள் எறித்தால் சுத்தியாம்.

## மற்றொருவிதம்.

வெள்ளை பாஷாணத்தை தேனில் கலந்து ஒருஜாமமம்மந் தாக்கினியில் வேகவைத்தால் சுத்தியாகும்.

## தொட்டிபாஷாணசுத்தி.

தொட்டிபாஷாணத்தை சூரணித்து துணியில்மூட்டை கட்டி கோமூத்திரத்தில் டோலாயந்திரத்தில் மூன்று நாள் எறித்தால் சுத்தியாம்.

## அன்னபேதி.

அன்னபேதி இரண்டுவிதங்களாயிருக்கின்றன; அவை யாவன.

வாலுகாசிசம், கருநிறமுடையது.

புஷ்பகாசிசம், கபிலவர்னமுடையது.

இவைகளில், வாலுகாசீசம், மேன்மையானது.

## அன்னபேதிசுத்தி.

அன்னபேதியை கரசனுங்கண்ணி இரசத்தில் வேகவைத்தால் சுத்தியாம். அல்லது பழச்சாற்றில் ஒருநாள்முழுதும் ஊரவைத்து தண்ணீர் வற்றுகிறவரையிலும் வைத்தால்சுத்தியாம்.

## அன்னபேதி சத்துவபானம்.

சிகப்பு, மஞ்சள், வெண்மை, கருப்புயென்கிற நிறத்தால் அன்னபேதி நான்கு விதங்களென்று கூரப்பட்டிருக்கின்றது. அவைகளை மனிதன், குதிரை, மயில், பசு, மீன் இவைகளின் பிச்சுகளால் பிரத்தியேக பிரத்தியேகமாய் அறைத்து பிறகு பேய்பீர்க்கன் இலைச்சாறு, பேயாவரை இலைச்சாறு, தேன், நெய், வெங்காரம், குண்டுமணிபருப்பு, வெல்லம் என்பவைகளுடன் அறைத்து பில்லைசெய்து யஷ்டிகா யந்திரத்தில் வைத்துஊதினுல் அதில்சத்து இரங்கும் அந்தசத்தைசூரணித்து புடமிட்டால் சிந்தூரிக்கும்.

## அன்னபேதியின் குணம்.

அன்னபேதியானது புளிப்பாயும், கண்களுக்கு நன்மை செய்யும்படியானதாயும், ரோமங்களை நாசம்பண்ணும்படியானதாயும், விஷதோஷம், வாததோஷம், சிலேஷ்மதோஷம், ரணதோஷங்கள் போக்கடிக்கும்.

## காவிக்கல்லின் பேதங்கள்.

காவிக்கல், இரக்தகைரிகம், பூரணகைரிகம், பாஷாண கைரிகம் என மூன்றுவகையாம், அவைகளில் இரக்த கைரிகத்தையே கையாடவேண்டியது.

### மேற்படி சுத்தி.

காவிக்கல்லை பசும்பாலில் அரைத்தால் சுத்தியாம்.

## காவிக்கல்லின்குணம்.

காவிக்கல் மதுரமாயும், கண்களுக்கு திவ்விய அவிடதமாயும், பசிதீவினை யுண்டுபண்ணும்படியானதாயும், ரத்தபித்தத்தை ஹரிக்கும்படியானதாயும், வாந்தி, சுரம், விஷதோஷங்களை போக்கடிக்கும்படியானதாயும், பலத்தை யுண்டுபண்ணும்படியானதாயும் இருக்கின்றன.

## சிலாசத்து.

சூரியவெப்பம் அதிகமாய் மலைகளின்மீது வீசுவதினால் அதின் தாதுசாரம்கரைந்து மெழுகுப்போல்ஆகும் அதை சிலாசத்து என்பார்கள்.

## சிலாசத்தின்பேதம்.

{ கோமூத்திர சிலாசித்து கற்பூரசிலாசித்து என இரண்டுவகையாம். }

சிலாசித்தை சத்திரக்ஷாரம், யவாக்ஷாரம், டங்கணக்ஷாரம், பழச்சாறு, குங்கிலியச்சூரணம் இவைகளால் ஒவ்வொன்றில் ஒவ்வொருநாள் வெய்யிலில்வைத்து அரைத்து ஒருநாழிகைவைத்தால் சுத்தியாம்.

கோமூத்திர சிலாசத்தானது கோமூத்திரத்தைப்போல் இருக்கும், கற்பூரசிலாசித்துசிகப்பாயாகிலும் அல்லதுவெள்ளையாயாகிலும்இருக்கும், அதில்வெண்மையேமேலானது.

## கற்பூரசிலாசித்தின் சுத்தி.

கற்பூரசிலாசித்தை தாமரைக்கிழங்கின் இரசத்திலாவது அல்லிக்கிழங்கின் இரசத்திலாவது ஒருஜாமம் அரைத்தால் சுத்தியாம்.

கற்பூரசிலாசித்தை பசும்பால் திரிபலகஷாயம் கரசனுங் கணிபிலைச்சாறு இவைகளால் ஒருநாள் இரும்பு கல்வத்தில் அறைத்து வெய்யலில்உலர்த்தினல் சுத்தியாம்.

ஒருபலம் சிலாசித்தை அல்லிக்கிழங்கு இரசத்தில் ஏழுநாழிகைஅரைத்து உலர்த்தினல் சுத்தியாம்.

சிலாசித்து 1-பாகம், திராக்ஷை வீசபாகம், அதிமதுரம் வீசபாகம், சந்தணத்தூள் வீசபாகம், இவைகளைக் கலந்து இளநீர்ஜலத்தில் டோலாயந்திரத்தில் மூன்றுஜாமம்வேகவைத்து அதையெடுத்து உலர்த்தி அனுபான விசேஷங்களால் உட்கொண்டால் சகலரோகங்களையும் போக்கி சரீரத்திற்கு காந்தியையும் புஷ்டியையும் பலத்தையும் உண்டுபண்ணும்.

## சிலாசித்தின்குணம்.

சுத்திசெய்த சிலாசித்தால், பாண்டு பிரமேகம் சுரம் சிலேத்துமரோகம் வாதரோகம் அக்கினிமாந்தியம் குஷ்டரோகம் சோவை க்ஷயம் உள்மாந்தம் சோபை மூத்திரஅடைப்பு மார்வலி மூலம் காமாலை நீர்சுருக்கு மேகம் பித்தரோகம் கட்டிகள் கொருக்கு சொரிசிரங்கு இவைகள்போம்.

## அபக்குவ சிலாசித்தாலுண்டாகும் வியாதி.

அசுத்தசிலாசித்தினல் தாகம் மூர்ச்சை பிரமை இரத்தபித்தம் அக்கினிமாந்தியம் மலபந்தம் இவைகளுண்டாம்.

## சுத்தசிலாசித்தின் பரீக்ஷை.

அக்கினிமேல் போட்டால் புகையெழும்பாம லிருக்கும் பாகமாகும்காலத்தில் லிங்காகாரம் அடைதல், ஒருகொம்பினூல் அதில் கொஞ்சம் யெடுத்து சலத்தில்போட்டால் தந்திபோல் அது கீழுக்குஇரங்குதல், கோமூத்திரத்தைப்போல் வாசனையுண்டாகுதல் முதலிய லட்சணங்களிருந்தால் சுத்தமான சிலாசித்தென்று அறிந்துகொள்ளவேண்டியது. இந்த சிலாசித்தை சாதாரண இரசவர்க்கமென்று சிலவயித்தியகிரந்தங்கள் முறையிடுகின்றன.

## சாதாரண இரசங்கள்.

கம்பில்லம், கடல்உப்பு,கௌரிபாஷாணம், நவாச்சாரம், லிங்கம்,வஹனி, ஜாரம், கிரிசிந்தூரம், முதாருசிங்கி என்கிற கூட்டும் சாதாரண இரசங்கள்யென்றுபேர்.

## கம்பில்லம்.

இதற்கு கிரிமருத்தென்றும் மலைமண், கைரிகதாது, க்ரதாஸ்மா, ரக்தசாந்தியென வடமொழியில்பெயராம்.

(கவனிப்பு) இதற்கு தகுதியானபெயர் தமிழில் அகப்படாமையால் வடமொழிபெயரே எழுதலாயிற்று.

## கம்பில்லபேதங்கள்.

சௌராஷ்டரதேசத்தின் கணிகளில் உற்பத்தியாகிறது, இது செங்கல்தூளைப்போலிருக்கும், இது விரோசனத்திற்கு கொடுப்பதில் மிகவும் பிரயோசனகாரியமாயிருக்கும்.

## கம்பில்லசுத்தி.

கம்பில்லசூரணத்தை மூட்டைகட்டி கடுக்காய் இரசத்தால் அல்லது காடிநீரால் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாகும்.

## கம்பில்லத்தின் குணம்.

கம்பில்லமானது விரோசனமாகும்படியானதாயும் கொஞ்சம் கடுகு ஊஷ்ணமுள்ளதாயும், இரணங்கள், இருமல் இரைப்பு, புழுக்கள் இவைகளை நாசப்படுத்தும்படியானதாயுமிருக்கும்.

## பௌசுத்தி போளமென்றால் மூசாம்பரம்.

ஒருபலம் கருப்பு போளத்தையாகிலும், செம்போளத்தையாகிலும், காடிநீரால் அரைத்து ஒருஜாமம் வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம்.

## மஸ்தகா சுத்தி.

மஸ்தகாயை, பழச்சாற்றிலாவது, அல்லது சிறு நீரிலாவது ஒருஜாமமரைத்து வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம்.

## பலகரை சங்கு இவைகள்சுத்தி.

பலகரை, சங்கு, இவைகளை கோமூத்திரம் பூசினிக்காய் ரசம் பழரசம் காடிநீர் என்பவைகளால்டோலாயந்திரத்தால் வேகவைத்தால் சுத்தியாம்.

## சத்தியக்ஷாரசுத்தி.

சத்தியக்ஷாரத்தை இரண்டுநாழிகை காடிநீராலாகிலும் அல்லது கோமூத்திரத்தினாலாகிலும் அரைத்தால்சுத்தியாம்.

## சத்தியக்ஷாரத்தின் குணம்.

சத்தியக்ஷாரம், அக்கினிமாந்தியம்,குன்மம், சூலை,இவைகளைப்போக்கும்.

## யவாக்ஷாரத்தின் சுத்தி.

யவாக்ஷாரத்தை, கழுநீரால் ஒருநாழிகை அரைத்து உலர்த்தினால் சுத்தியாம்.

## யவாக்ஷாரத்தின் குணம்.

யவாக்ஷாரத்தினால் பசித்தீவினை யுண்டாகும், கபநோய், வாதநோய்போம்.

## பஞ்சலவண சுத்தி.

### அதாவது ஐந்துவித உப்பின் சுத்தி.

(ஆயுர்வேதம்) இந்துப்பை இரண்டுநாழிகை காடிநீராலரைத்து வெய்யலில்உலர்த்தினாலும் அல்லது ஆட்டுமூத்திரத்தால் வேகவைத்தாலும் சுத்தியாம்.

சவ்வர்ச்சலவணத்தை எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்து உலாவைத்தால் சுத்தியாம். பிடாலவணத்தை காடிநீராலரைத்து வெய்யலில்உலர்த்தினால் சுத்தியாம். கறுப்புஉப்பைபுளியிலைச்சாற்றால்அரைத்து வெய்யலில்உலர்த்தினால் சுத்தியாம். கடல்உப்பை வோட்டில் போட்டு மூன்று ஜாமம் வறுத்தால் சுத்தியாம்.

## பஞ்சலவணத்தின்குணம்.

இந்துப்பு சன்னமாயும், கனமாயும், மிகவும் வெண்மையாயும், சிகப்புங்கலந்த வர்ணமுடையதாயும் இருக்கும்இது கபநோய் வாதநோய் வயிற்றுவலிபோக்கடிக்கும், சவ்வர்ச்சலவணம் கறுப்பும் சிகப்பும் கலந்தவர்ணமுடையதாய் குன்மநோய் சூலை இவைகளைப்போக்கும்.

பிடாலவணம் பாண்டுவர்ணமுடையதாய் கொஞ்சம்பித்தமுடையதா யிருக்கும் இது வயிற்றுவலி சரீரத்தின் பீடையைப்போக்கும்.

கறுப்புஉப்பு, வயிற்றுவலியைப்போக்கும்.

கடல் உப்பு, வயிற்றுவலியையும் சகல ரோகங்களையும் போக்கும்.

## திரிகடுகு சுத்தி.

திரிகடுகுயென்றால் சுக்கு, மிளகு, திப்பிலி.

சுக்கை, மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி ஒருஜாமம் வெய்யலில்உலர்த்தினால் சுத்தியாகும். திப்பிலியை, சித்திரமூல இரசத்தில் இரண்டுநாழிஊரவைத்து உலர்த்தினால் சுத்தியாகும். மிளகை, புளித்தமோரில் மூன்றுநாழிகை ஊரவைத்து வோட்டில்போட்டு வருத்தால் சுத்தியாகும்.

## ஆனைத்திப்பிலி சுத்தி.

ஆனைத்திப்பிலியை காடிநீரிலாகிலும், அல்லது ஆட்டு மூத்திரத்திலாகிலும் ஒருஜாமம்ஊரவைத்து வெய்யலில்உலர்த்தினால் சுத்தியாகும்.

## அபினி சுத்தி.

அபினியை, பிரமராகாசி இலையில்வைத்து மூட்டைகட்டி பசுவின்பாலில் டோலாயந்திரத்தில் ஒருஜாமம் வேகவைத்தால் சுத்தியாகும்.

## பெருங்காயம் சுத்தி.

பெருங்காயத்தை, தாமரை யிலைச்சாற்றில் ஒருஜாமம் வெய்யலில்உலரவைத்தால் சுத்தியாம்.

## சீரக சுத்தி.

சீரகம், கருஞ்சீரகம், இவையிரண்டையும் புளித்த கழிநீரில் நனைத்து இரண்டுஜாமம் வெய்யலில்உலரவைத்து பிறகு கொஞ்சம்வருத்தால் சுத்தியாம்.

## ஆமணக்கு வெள்ளைநாகதந்திகளின் சுத்தி.

ஆமணக்கு விதை, வெள்ளைநாகதந்தி விதை, இவை யிரண்டையும் மேல்தோலையெடுத்துவிட்டு எளநீரில் ஒரு ஜாமம் வைத்தால் சுத்தியாம்.

## எட்டிக்கொட்டைசுத்தி.

எட்டிக்கொட்டையை துண்டுகளாக்கி சிறுகீரைவேரின் இரசத்தால் மூன்றுநாழிகை வேகவைத்தால்சுத்தியாம்.

## நேர்வாள சுத்தி.

நேர்வாளத்தின்மேல்தோலைப்போக்கி அதின் மொளைகளையெடுத்துவிட்டு கற்றாழையிரசம், பானகம், பசும்பால்,பசும்நெய் இவைகளில் பிரத்தியேக பிரத்தியேகமாய் வேகவைத்தால் சுத்தியாம்.

## சிவதையின் சுத்தி.

வெள்ளைச்சிவதையை பசும்பாலில் முழுகும்படிசெய்து அந்தபால் சுண்டுகிறவரையிலும் வேகவைத்தால் சுத்தியாம்.

## சேராங்கொட்டை சுத்தி.

சேராங்கொட்டையை கோமயத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

## நாபியின்சுத்தி.

நாபியை துண்டுகளாய்கத்தரித்து துணியில் மூட்டைகட்டி ஒருபானையில்போட்டு அந்தமூட்டைமுழுகிறவரையில் கோமூத்திரம்வார்த்து மூன்றுநாள் வெய்யலில் வைக்கவேண்டியது. மேலும் பிரதிதினம் பானையிலிருக்கும் கோமூத்திரத்தையெடுத்துவிட்டு புதிய கோமூத்திரத்தை வார்க்கவேண்டியது. இம்மாதிரியாய்மூன்றுநாள்செய்து நாலாவதுநாள்நாபியைவெளியில்யெடுத்து செவ்வையாய் உலர்த்தவேண்டியது. இப்படி செய்தபிறகு சுத்தியாகும். இதை அவுடதங்களில் சேர்க்கும்பொழுது தூளாக்கி சேர்க்கவேண்டியது.

## முதாருசிங்கு பேதங்கள்.

முதாருசிங்கு இரண்டுவிதங்கள்.

காளீகம்-பச்சைநிறமாயிருக்கும்.

ரேணுகம்-நீலவர்ணமாயிருக்கும்.

## முதாருசிங்கின் சுத்தி.

முதாருசிங்கை சுக்குயிரசத்தால் மூன்றுவிசை ஊரவைத்தால் சுத்தியாம்.

## முதாருசிங்கின்குணம்.

முதாருசிங்கு, இரணங்கள் சூலை குன்மம் இரசதோஷங்கள் முதலியவைகளைப் போக்கும்.

## நவஇரத்தினங்கள்.

(குருவிந்தம் அதாவது கெம்புக்கல்) முத்து, வைரவம், வைடூரியம், நீலம், புட்பராகம், மரகதம், கோமேதகம், பவளமென இரத்தினங்கள் ஒன்பதாம்.

## அசுத்த இரத்தினகுணங்கள்.

அசுத்தஇரத்தினங்களின் பிரயோகத்தினால் கிரந்திகள் தாபம் பிரமை இந்திரியநஷ்டி தேகபீடை முதலியவை யுண்டுபண்ணும், ஆகையினால் அவைகளை சுத்திசெய்து சேர்க்க வேண்டியது.

## கெம்புக்கல் அல்லது மாணிக்கம் சுத்தி.

கெம்பை குதிரையின்மூத்திரத்தில் மூன்றுநாள் வெப்பமான சூரியகாந்தியில்ஊரவைத்து பிறகு வென்னீரால்கழுவினால் சுத்தியாம்.

## கெம்புபற்பம்.

சுத்திசெய்தகெம்பை மூன்றுநாள் எருக்கன்பாலி லரைத்து ஓட்டில்வைத்து சீலைமண்செய்து காட்டு விரட்டியால் மூன்றுகஜபுடமிட்டால் கெம்புபற்பமாகும்.

## கெம்புபற்பத்தின்குணம்.

கெம்புபற்பம் சீதளமாயும் மதுரமாயும் பசிதீவினை யுண்டுபண்ணும்படியானதாயும் தேககாந்தியை யுண்டுபண்ணும்படியானதாயும் கிரகதோஷங்களை தீர்க்கும்படியானதாயும் இருக்கும்.

## முத்தின்சுத்தி.

முத்துகளை புளியைக்கரைத்தாகிலும் அல்லது பொன்னுங்காய் யிரசத்திலாகிலும் மூன்றுதடவை ஊரவைத்தால் சுத்தியாம்.

## முத்துபற்பம்.

சுத்திசெய்த முத்தை வெள்ளை முள்ளிக்கத்திரி பழத்தின்யிரசத்தால் அரைத்து ஒட்டில் வைத்து சீலைமண்செய்து பூபுடமெரித்தால் பற்பமாகும்.

## முத்துபற்பத்தின்குணம்.

முத்துபற்பத்தினல், ஊஷ்ணரோகங்கள், சூலைகள், கிரஹதோஷங்களைப் போக்கடித்து பசிதீவினையை யுண்டுபண்ணும்.

## வைரத்தின்பேதங்கள்.

வைரமானது ஸ்வேதம் அதாவது, வெண்மைநிறமுடையது பிராணசாதி ரக்தம் அதாவது சிகப்புநிற முடையது, க்ஷத்திரியஜாதி பீதம் மஞ்சள்நிறமுடையது, வைசியஜாதி கிருஷ்ணம் கருப்புநிறமுடையது சூத்திரஜாதியென நான்கு வகையாம்.

## வைரத்தின்குணம்.

வெண்மை நிறமுடைய முதல்ஜாதி யென்கிற வைரக்கல்லை ரசாயனங்களில் உபயோகித்தால் அஷ்டசித்துக்கள் உண்டாகும்.

சிகப்புநிறமுடைய க்ஷத்திரியசாதி வைரக்கல், மரணம், நிறை, வியாதிகள் முதலியவைபோக்கும்.

மஞ்சள்நிறமுடைய வைசியசாதி வைரக்கல் சம்பத்தை கொடுக்கிறதுமல்லாமல் சரீரத்தால் வியாதிகளை யுண்டுபண்ணும்.

கருப்புநிறமுடைய சூத்திரசாதிவைரக்கல் வியாதிகளை பறக்கடித்து வயதை விருத்திபண்ணும்.

## வைரக்கல்லின் ஜாதிபேதங்கள்.

வைரமானது ஆண் பெண் அகலிகையென மூன்றுவகையாம், அவைகளைக்கண்டுபிடிக்கும்வகை வட்டமாயும், காந்தியாயும், பெரியதாயும், பட்டைகள் உடையதாயும், கத்திரிக்காயின்மேல்பாகத்தில் இருக்கிறதுபோல் ரேகைகள் உடையனவாய் சதரமாயும், புள்ளிகள் இல்லாமலிருக்கிறது ஆண்யென்றும், ரேகைகள் புள்ளிகள் உடையனவாய் ஆறுகோணமுடையது பெண்என்றும், மூன்றுகோணங்களுடையது நிகளமானது அகலிகையென்றும், பெரியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதில் ஆண்சாதிவைரம் மிகவும்மேன்மையானது, பெண்சாதிவைரக்கல் தேகத்திற்கு காந்தி யுண்டுபண்ணும்படியானதும், வீரியபுஷ்டியுள்ளது. அகலிகை வைரக்கல் பிரயோஜனமற்றது.

புருஷர்களுக்கு ஆண் வைரக்கல்லையும், பெண்களுக்கு பெண்வைரக்கல்லையும், பேடிகளுக்கு அகலிகை வைரக்கல்லையும், உபயோகப்படுத்தவேண்டியது. ஆண்வைரக்கல் மிகவும் மேன்மையானபடியினால் ஆண்வைரக்கல்லையே சகலருக்கும் உபயோகப்படுத்தவேண்டியது.

## வைரக்கல்லின் சுத்தி.

சிவதைவேரை சுரசம்செய்து வைரக்கல்லை அதில் இரண்டுநாள் ஊரவைத்து பிரகு கொள்ளு வரகு இவைகளின்கியாழத்தால் மூன்றுநாள் டோலாயந்திரத்தில்வேகவைத்தால் சுத்தியாகும்.

### மற்றொருவிதம்.

வைரக்கல்லை கண்டங்கத்திரிவேரில்வைத்து எருமைசாணியில்தொய்து பழயஎரு பொட்டு என்பவையுடன் இராத்திரியில் நான்குஜாமம் புடமெரித்து காலையில் குதிரையின் மூத்திரத்தில்நனைத்து அதையெடுத்து முன்போல் கண்டங்கத்திரிவேரில்வைத்து இராத்திரி நாலுஜாமம் முன்சொன்னதுபோல் புடமிடவும், இம்மாதிரி ஏழுநாள்யெரித்தால்வைரக்கல்சுத்தியாகும்.

### மற்றொருவிதம்.

வைரக்கல்லை கண்டங்கத்திரி வேரில்வைத்து கொள்ளு, வரகு, என்பவைகளின்கஷாயத்தில் ஏழுநாள் டோலாயந்திரத்தில்யெரித்தால் சுத்தியாகும்.

### மற்றொருவிதம்.

வைரக்கல்லை எலுமிச்சம்பழத்தில் வைத்து சிறுகீரை, வன்னியிலை, சிவதை, கடுக்காப்பூ, மறுகாளான், வரகு, கொள்ளு, வஞ்சி, எலிக்காதுஇலை, அவத்தி, தலைச்சுருளைவேர், நொச்சிலி, என்பவைகளின் கஷாயத்தால் டோலாயந்திரத்தில்மூன்றுநாள்வேகவைத்தால் வைரக்கல் சுத்தியாகும்.

---

## வைரபற்பம்.

சுத்திசெய்தவைரக்கல்லை மூன்றுவருஷத்துவயதுடைய பருத்திச்செடிவேரைஇடித்து அந்த இரசத்திலாகிலும் அல்லது வெற்றிலைவேரைஇடித்து அந்த இரசத்திலாகிலும் ஊரவைத்து பிறகு ஷை மூன்றுவருஷத்துபருத்திவேர் மூன்றுவருஷத்து வெற்றிலைவேரை அரைத்து பில்லைதட்டி அதின் நடுவில் வைரக்கல்லைவைத்து அந்த முத்தையை மூசையில்வைத்து சீலைமண்செய்து ஏழுகஜபுடமிட்டால் வைரக்கல் பற்பமாகும்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்த வைரக்கல்லை மூட்டுப்பூச்சி இரத்தத்தால் ஏழுதருதிஊரவைத்து இலந்தயிலையில் கவசஞ்செய்து மேல் சீலைமண்கொடுத்து மூசையில்வைத்து மறுபடியும் சீலைமண் செய்து ஏழுகஜபுடமெரித்தால் பற்பமாகும்.

### மற்றொருவிதம்.

சுத்திசெய்த வைரத்தை பிரண்டைச்சாற்றில் ஒருநாள் ஊரவைத்து காசிகுப்பியில்வைத்து சீலமண்செய்து காட்டு விரட்டியால் ஏழுகஜபுடமெரித்தால் வைரக்கல்பற்பமாகும்.

## வைரபற்பகுணம்.

வைரக்கல் பற்பத்தினால் ஆயுசு விருத்தி, சுகம், வலிவு, சௌந்தரியம் இவைகளையுண்டுபண்ணும், ரோகங்கள் அபமிருத்துயுவு இவைகளை யோட்டிவிடும்.

## அசுத்தவைர தோஷம்.

அசுத்த வைரக்கல்லினால் தாபம், பாண்டு, பற்சுவசூலை முதலிய அனேகரோகங்கள்வுண்டாம்.

### அதற்குப்பரிகாரம்.

தேன், பசுநெய், சர்க்கரை இவைகளை பசும்பாலில் கலந்து ஏழுநாள்உட்கொண்டால் அசுத்தவைரக்கல்லினால்உண்டாகும்வியாதிகள் சகலமும் நிவர்த்தியாகும்.

## வைரக்கல்பற்ப அனுபானங்கள்.

வைரபற்பத்தை கருங்காலி கியாழத்தில் கொடுத்தால் குட்டரோகம்போம். தேன், இஞ்சிரசம், இவைகளால் கொடுத்தால் வாதரோகங்கள் போம். திப்பிலி, மிளகு, இவைகள் சூரணம், ஆடாதோடைசாறு இவைகளுடன் கொடுத்தால் இருமல், இரைப்பு, கபம் முதலியவை சந்தேகமற பரந்தோடும். தேன், பசுநெய் இவைகளுடன்கொடுத்தால் சரீரபுஷ்டியுண்டாகும். கோமூத்திரத்தில் கொடுத்தால் பெரும்பாடு சூதகரோகங்கள்தீரும். சர்க்கரையில்கொடுத்தால் வியர்வை நீங்கும்.

## வைகிராந்தம் அல்லது கண்ணுடி முதலியவைகளை அரக்கும் இரவையின் உற்பத்தி.

மகிஷாசுரன்என்கிற அரக்கனை சாமுண்டீஸ்வரி சங்காரம்பண்ண அவனது இரத்தம்விழுந்த யிடங்களி லெல்லாம் வைரத்தைப்போல் இந்தஇரவைக்கல்லும்உண்டாயின இந்த இரவைகற்கள் விந்தியா பர்வதத்திற்கு தெற்கிலும் வடக்கிலுமிருக்கின்றன இவை லோஹங்களையும் துண்டுகளாக்கும்படியான வலிமையுடையதானதினுல் வைகிராந்தமெனப் பேர் பெற்றது.

## வைகிராந்தலக்ஷணம்.

வைகிராந்தமானது எட்டுபேதங்களுடையதும், எட்டு பலகைகள்வுடையதும், ஆறுகோணங்களுடையதும், அமிருதகுணமுடையதும், சுத்தமானநிறமுடையதும், பளுவுடையதும், கலந்துநிறமுடையதுமாயிருக்கும்.

வைகிராந்தமானது வெண்மை, சிகப்பு, மஞ்சள், நீலம், கருப்பு, மேகவரணம், புராவரணம், கற்பூர வரணம், என எட்டுவிதங்கள்.

## வைகிராந்தசுத்தி.

மூன்றுவித க்ஷாரங்கள், ஐந்துவித உப்புகள், வசம்பு, ஏழுவிதமூத்திரங்கள், மீன்தைலம், நெய், எண்ணெய், ஆமணக்கெண்ணெய், புளிநீர், இவைகளை டோலா யந்திரத்தில் சேர்த்து கண்டங்கத்திரிவேரை தொளைத்து அதில்ரவையை வைத்து வேகவைத்தால் சுத்தியாம்.

சிகப்பு, வெண்மை, கறுப்புநிறமுள்ள வைகிராந்தத்தை வைரங்களைப்போல் சுத்திசெய்யவேண்டியது, மேலும் வைகிராந்தத்தை இருபத்தொருதகுதி செவுக்க நெருப்பில்வைத்து இருபத்தொருதகுதி குதிரையின்மூத்திரத்தில் தொவைத்தால் சுத்தியாகும்.

## வைகிராந்தத்தின் பற்பம்.

சுத்திசெய்த வைகிராந்தத்தை உத்தாமணியை வேறுடன்பிடுங்கிவந்து எலே காய் கொடி முதலியவற்றை யெல்லாம் யொன்றுயரைத்து முத்தைசெய்து அதில்வைத்துமூடி அந்த முத்தை ஒருசின்னமூசையில்வைத்து அதின்மேல் மற்றொரு மூசையைமூடி சீலேமண்கொடுத்து கஜபுட மிடவேண்டியது. பிறகுஅதையெடுத்து உத்தாமணி கோடிவேர் முதலியவைகளைஅறைத்து முத்தைசெய்து அதில்வைத்து மூசையில் வைத்து மற்றொருமூசைமூடி சீலேமண்செய்து கஜபுடமெரிக்க வேண்டியது. இம்மாதிரி ஏழுகஜபுடமெரித்தால் வைகிராந்தம்பற்பமாகும்.

### மற்றொருவிதம்.

வைகிராந்தத்தை வைரத்தைப்போல் உலேயில் வைத்து ஊதி குதிரைமூத்திரத்தில் தோய்த்தெடுத்தால் சுத்தியாகும். இம்மாதிரிசுத்திசெய்த வைகிராந்தத்தை வைரத்தை பற்பிக்கும்விதமாக பற்பமாக்கி வைரபற்பத்தின்பதிலாக இதையும் பிரயோகப்படுத்தலாம்.

---

## கஸ்தூரிமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஸ்தூரி | விராகநிடை | - வ | குங்குமப்பூ | விராகநிடை | - க |
| கோரோஜனம் | ,, | க | சுக்கு | ,, | க |
| ரசசிந்தூரம் | ,, | க | மிளகு | ,, | க |
| கடுக்காய்த்தோல் | ,, | க | திப்பிலி | ,, | க |
| தான்றிக்காய் | ,, | க | ஏலம் | ,, | க |
| நெல்லிவற்றல் | ,, | க | கிராம்பு | ,, | க |

இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு கருநொச்சிலியிலேச்சாற்றில் இரண்டுஜாமம் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு காலேயில் ஒருமாத்திரையும் மாலேயில் ஒருமாத்திரையுமாகத் துளசிச்சாற்றிலிழைத்துத் தேன்கலந்து சாப்பிடவேண்டியது. இவ்வாறு மூன்றுநாள் சாப்பிடவேண்டியது.

புளிகூடாது, உப்புவறுத்துச்சேர்த்துக்கொள்ளவும்.

இதனால் சுரங்கள்முதலானவைகளும் திரிதோஷங்களும் சூரியனைக்கண்டபனிபோலாகும் கைகண்டது.

## இடுப்புவலிமுதலிய வாய்வுகளுக்கு பற்று.

| | | |
|---|---|---|
| மைலாலக்கடி | பலம் | க |
| மைசாக்ஷி | ,, | க |
| மூசாம்பரம் | ,, | க |

இவைகளை நன்றாய்ப் பொடிசெய்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் எலுமிச்சம்பழரசம் ஆழாக்குவிட்டு கொதிக்கவைத்து நோயிருக்குமிடத்தில் இரண்டுமூன்று பற்றுபோட நிவர்த்தியாகும்.

## பித்த ஜ்வரத்திற்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடுக்காய்த்தோல் | பலம் | உ | சுக்கு | பலம் | உ |
| சீந்திற்கொடி | ,, | உ | வசம்பு | ,, | உ |
| தூதுளைவேர் | ,, | உ | ஆடாதோடையிலை | ,, | உ |
| கண்டங்கத்திரிவேர் | ,, | உ | சிறுபயறு | ,, | உ |
| முசுமுசுக்கைவேர் | ,, | உ | கோரைக்கிழங்கு | ,, | உ |

இவைகளை மைபோலிடித்து 5 - பங்காக்கி ஒருபங்கை அரைபடிஜலம்விட்டு ஆழாக்குஜலம் இருக்கக்காய்ச்சிக் காலையில் அரையாழாக்கும் மாலையில் அரையாழாக்குமாக சாப்பிடவேண்டியது. இவ்வாறு மற்றபங்கையும் அப்படியே செய்யவேண்டியது, இச்சாபத்தியம்.

## வெள்ளைக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய் பலம்-8, கஸ்தூரிமஞ்சள் துலாம்-உ, கருஞ்சீரகம் துலாம்-உ, கண்டங்கத்திரியிலை துலாம்-உ, வெங்காயம் துலாம் - உ, இவைகளை மைபோலிடித்து ஷை எண்ணெயில்போட்டு பதத்தில்காய்ச்சி வடிகட்டிக்கொண்டுகாலைமாலை துட்டெடையாக மூன்றுநாள் சாப்பிடவேண்டியது, இச்சாபத்தியம்.

## தாகஜ்வரங்களுக்கு.

| | | |
|---|---|---|
| ஆடாதோடை | பலம் | உ |
| பேய்புடல் | ,, | உ |
| சீந்திற்கொடி | ,, | உ |
| தூதுளைவேர் | ,, | உ |
| கண்டங்கத்திரிவேர் | ,, | உ |

இவைகளை நையயிடித்து ஒருமண்பாத்திரத்தில்போட்டு அரைபடிஜலம்விட்டு ஆழாக்குஜலமிருக்கக்காய்ச்சிக் காலையில் அரையாழாக்கும் மாலையில்அரையாழாக்குமாகத் தேன் கலந்து சாப்பிடவேண்டியது. இவ்வண்ணமாக மூன்றுநாள் சாப்பிட தாகஜ்வரம் நின்றுவிடும்.

## நடுக்கல்ஜ்வரத்திற்கு.

தும்பைப்பூ பலம்-உ, மிளகு பலம்-உ, இவைகளை ஒன்றுபடஅரைத்து நடுக்கல் ஜ்வரம்வருகிறபோது காலை மாலைகளிலும் சுண்டைக்காயளவு மூன்றுநாளைக்குச் சாப்பிடவேண்டியது, இச்சாபத்தியம்.

## மேகம் 21-க்கும் நெய்.

பிரமியிலைச்சாறு படி-உ, பசுவின்நெய் படி-உ, ஒரு மண்பாத்திரத்தில்விட்டு அதில் மிளகு பலம்-உ, மஞ்சள் பலம்-உ, திப்பிலி பலம்-உ, பொடித்துப்போட்டு பதமாகக்காய்ச்சிவடிகட்டிக்கொண்டு 21-நாளைக்கு காலையில் கால்பலமும் மாலையில்கால்பலமுமாகச்சாப்பிடவேண்டியது, இச்சாபத்தியம்.

## நாக்குப்பூச்சி விழ.

| | |
|---|---|
| குராசானிஓமம் | சூரியகாந்திபூவிரை |
| பூவரசன்விரை | நொச்சிக்கொழுந்து |

| | |
|---|---|
| வால்மிளகு | கடுக்காய்த்தோல் |
| மாசிக்காய் | கறுப்புஉப்பு |
| தான்றிக்காய் | மூசாம்பரம் |

இவைகள் வகைக்குப்பலம்-உ, இவைகளை முசுமுசுக்கைச்சாற்றால் மைபோல்அரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில்உலர்த்தி காலைமாலை ஒவ்வொரு மாத்திரைவெந்நீரிலிழைத்துக்கொடுக்கவும், உப்புபுளிஆகாது.

## சீதபேதிக்குலேகியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜாதிக்காய் | பலம் | வ | மாதளங்காய்த்தோல் | பலம் | வ |
| மாசிக்காய் | ,, | வ | களிப்பாக்கு | ,, | வ |
| புளியங்கொட்டைதோல் | | வ | கசகசா | ,, | வ |
| உலர்ந்தமாம்பருப்பு | ,, | வ | | | |

இவைகளைப் பசுவின்பாலில் ஒருநாள்முழுதும் ஊரவைத்து மறுநாள்உலர்த்தி சூரணித்து வஸ்திரகாயஞ்செய்யவேண்டியது. சீனைகற்கண்டு பலம்-உ0, பொடிசெய்து பசும்பால் அரையாழாக்கில் பாகுசெய்து ஷை சூரணத்தை அதில்போட்டுகிண்டி ஒருபலம் பசும்நெய்யும்விட்டுக் கிளரி யெடுத்துக்கொண்டு காலைமாலை சுண்டைக்காய்ப்பிரமாணம் கொடுக்க சீதபேதிநிவர்த்தியாகும், இச்சாபத்தியம்.

## சன்னி தலைநோய்க்கு
## தலைக்குக் கட்டு.

| | |
|---|---|
| முத்தவேளைவேர் | பளிங்குசாம்ராணி |
| கருஞ்சீரகம் | கருஞ்செம்பையிலை |
| கஸ்தூரிமஞ்சள் | சந்தனத்தூள் |
| நொச்சிக்கொழுந்து | |

இவைகள் வகைக்கு பலம் - உ, எடுத்து நன்றாயிடித்து இரண்டுமூன்றுவேளை தலைக்குக்கட்ட ஜன்னி தலைவலிநிவர்த்தியாகும், இச்சாபத்தியம்.

## வ ா ய் வு க் கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெருங்காயம் | துலாம் | உ | சீரகம் | துலாம் | ௩ |
| கருஞ்சீரகம் | ,, | ௩ | திப்பிலி | ,, | ச |
| மிளகு | ,, | உ௰ | ஓமம் | ,, | உ௰ |
| சுக்கு | ,, | உ௰ | | | |

இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொண்ட சூரணத்தில் நன்றாய் மைபோல் பொடிசெய்திருக்கிற இந்துப்பு துலாம்-உ௰, கலந்து காலைமாலை ஒருதுட்டெடை சாப்பிட சகலவாய்வுகளும் நிவர்த்தியாகும்.

இதற்குப் புளி புகையிலை ஆகாது.

## கண்ணோய்க்குத்தைலம்.

நெல்லிக்காய் கையாந்தகரை இவைகளின்சாறு பசுவின் பால் வகைக்குப்படி-௩, நல்லெண்ணெய் படி-ச, அதிமதுரம் கோஷ்டம் ஏலம் இலவங்கம் சண்பகப்பூ சந்தனம் வெட்டிவேர் லாமிச்சம்வேர் வகைக்குப்பலம்-க, அரைத்துப்போட்டுக் காய்ச்சிமுழுகிவர கண்காசம், படலம், புகைச்சல், பித்தம் தீரும்.

### இ து வு ம து.

நெல்லிக்காய் கையாந்தகரை வகைக்குச்சாறுபடி-உ, நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி-க, இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் அதிமதுரம் பலம்-க, அரைத்துப்போட்டுக் காய்ச்சிமுழுக கண்படலம், காசம், கண்ணெரிவு, கபாலவரக்ஷி தீரும்.

## நேத்திரரோகங்களுக்கும் கபாலகுஷ்டத்திற்கும் குமரித்தைலம்.

எட்டுபடிகுமரிச்சாற்றை ஒருபாண்டத்திலூற்றி ஒருபடியாய்வற்றவைத்து அதில்நல்லெண்ணெய்படி-க, சிறுநாகப்பூ செங்கழுநீர்க்கிழங்கு அதிமதுரம்லாமிச்சம்வேர் நன்னாரிவேர் அஞ்சனக்கல் சந்தனம் வகைக்குக் கழஞ்சு-௩, ஆவின்பால்விட்டரைத்துப்போட்டுக் காய்ச்சிமுழுகிவரத் தீரும்.

## தலைவலி கபாலஜன்னி கண்ணோய்க்குத் தைலம்.

தேங்காய்ப்பால் பசுவின்பால் வகைக்குப்படி-௨, எலுமிச்சம்பழச்சாறு முலைப்பால் வகைக்குப்படி-௩, ஒன்றாய்க்கலந்ததில் ஏலம் லவங்கம் நற்சீரகம் சுக்கு கோஷ்டம் சண்பகப்பூ வகைக்குக்கழஞ்சு-க,அரத்தை மிளகு மதுரம் சதகுப்பை மயிரோசனை குருந்து ஈசுரமூலி முப்புரமெரித்தான் பெருங்குரும்பை வகைக்குக்கழஞ்சு-௨, இவைகளை யரைத்துப்போட்டு உமிக்காந்தலில் மூன்றுநாள்வைத்திருந்து காய்ச்சி முழுகிவரத்தீரும்.

## நேத்திரசெவிநோய் தலைநோய்கட்குத் தைலம்.

கையாந்தகரை கற்றாழை நெல்லக்காய் இவைகளின்சாறு முலைப்பால் வகைக்குப்படி-க, நல்லெண்ணெய் படி-க-க்கு நன்னாரிவேர், வெட்டிவேர், லாமிச்சம்வேர், கோஷ்டம், மதுரம், சந்தனம் வகைக்குப்பலம்-உ, இவைகளையரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

## பித்தம் கண்காசம்
## காதடைப்புக்குத்தைலம்.

கையாந்தகரை, நெல்லிக்காய், நொச்சி, ஆதண்டை, இவைகளின் சாறு நல்லெண்ணெய் பசுவின்பால் வகைக்குப்படி-கஉ, அதிமதுரம் கழஞ்சு-௨, அரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவரத்தீரும்.

## நேத்திரநோய் தொண்ணூற்றாறுக்குந் தைலம்.

பொன்னாங்காணி, சிறுகீரை, ஆவரைமொட்டு, கொழுந்து இவைகளை ஆவின்பால்விட்டுஇடித்து பிழிந்தசாறு சிற்றாமணக்கெண்ணெய் ஆவிநெய் நல்லெண்ணெய் வகைக்குப்படி க, ஆவின்பால் படி-கூ, ஒன்றாய்க்கலந்து அதில் ஏலம்,கிராம்பு,அதிமதுரம், கோஷ்டம், சண்பகப்பூ, சாதிக்காய், மிளகு, வால்மிளகு, மிளாக்காய்ச் சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்

சள், அரத்தை, தேவதாரம், சாத்திரவேதி, வெட்டிவேர் வகைக்குப்பலம்-௵, பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒன்றைவிட் டொருநாள் தலைக்குத் தேய்த்துச் சீய்க்காய் சீக்கிருந்தூள் அரப்பிட்டு ஸ்நானஞ்செய்துவர சகல கண்ரோகங்களுந்தீரும்.

## பீனிச வகுப்பு.

வாதபீனிசம், பித்தபீனிசம், சிலேத்மபீனிசம், நீர்ப்பீனிசம், இரத்தப்பீனிசம், சீப்பீனிசம், சிருய்ப்பீனிசம், மூலப்பீனிசம், கண்டப்பீனிசம், ஆகப்பீனிசங்கள் எட்டு.

## சிருய்ப்பீனிசக்குணம்.

நாசிவழி சிருய்போறும் ஈருள்ளிக்கூடுபோறும் சீழ் திரண்டுவிழும் பிணம்போல் நாறும் மணந் தெரியாது விடாமற் றலைவலிக்கும்.

### இதுவுமது.

சருகெள்ளெண்ணெய் படி - க, குரட்டைப்பழம் வெற்றிலை ஆதண்டை உசிலம்பட்டை இவைகளின்சாறு வகைக்கு படி-வ, ஒன்ருய்க்கலந்து அதில் மிளகு, வால்மிளகு, சீரகம், சண்பகப்பூ வகைக்குப் பலம் - க, இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

### இதுவுமது.

குப்பைமேனி, ஆடுதீண்டாப்பாளை, அளிஞ்சிவேர், முள்ளி இவைகளின் சாறு வகைக்குப் படி - ௨, நல்லெண்ணெய் படி-உ, இவைகளை யொன்ருய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

## நீர்ப்பீனிசத்திற்குத்தைலம்.

விஷபித்தமும் வெட்டையுமதிகரித்துச் சிரசிலேறி நாசிவழிநீர்வடிந்துக்கொண்டிருக்கும் பனிவாடை மழையிற்றோய்ந்தால் நீர்மிகுந்து பிடரியும் முகமும் பரபரத்தூஊறும்நாசியரிக்கும் அடிக்கடி தும்மல்விழும் தலைகனத்துவலிக்கும்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெய்வெள்ளாட்டுப்பால்வகைக்குப்படி-க, செவியம், திரிகடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அரத்தை, கஸ்தூரிமஞ்சள், திப்பிலிமூலம், நொச்சிப்பட்

டை வகைக்குப் பலம் - க, இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துமுழுகிவரத்தீரும்.

இதுவுமது.

நொச்சி,கரிசாலை,வெற்றிலை,ஆதண்டை,பச்சைமஞ்சள், யிவைகளின்சாறு வகைக்குப் படி-வ, ஈருள்ளிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி-க, மிளகு படி-வ, உடைத்துப்போட்டுப் பதமாய்க்காச்சிவடித்து முழுகிவரத்திரும்.

## பீனிசம் சலம்வடிதல் தலையரிப்பு தும்மலுக்குத்தைலம்.

ஆயிற்பட்டை பலம்-40, சங்கம்வேர், அரத்தை, மிளகு வகைக்குப்பலம்-10, மஞ்சள் பலம்-5, இவைகளை யிடித்துப் பதக்குநீரிற்போட்டு நாலிலொன்ருய் வற்றவைத்திறுத்து அதில் நல்லெண்ணெய்படி-4, நொச்சி மொசிமுசுக்கைஆயில்கரிசாலை இவைகளின்சாறு வகைக்குப்படி-உ, ஆவின்பால்படி-1, கூடவிட்டு அதிமதுரம் சதகுப்பை அரத்தை கோஷ்டம் கடுக்காய் சீரகம் வேலிப்பருத்திவேர் வகைக்குப்பலம்-வ, இவைகளையரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவரத்தீரும்.

## பீனிசம் விடாத்தலைவலி கபாலசூலை நேத்திரவாய்வுக்குத்தைலம்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி-1, ஒன்ருய்க்கலந்து அதில் ஈருள்ளி இரண்டுசிரங்கை தட்டிப்போட்டுக்காய்ச்சிமுழுகிவரத் தீரும்.

## மண்டையிடி கபாலசூலை பீனிசம் நாசிபுண்ணுக்குத்தைலம்.

எலுமிச்சம்பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்கு படி-1, நத்தைச்சூரிவேர் பலம்-$1\frac{1}{2}$, ஆவின்பாலி லரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவரத்திரும்.

## சிரசுநோய் சிரசில் நீரேறு மண்டையிடிக்கு

அரத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்குவிராகனிடை 3, அரைத்து ½-படிநொச்சிச்சாற்றில்கலக்கிமுரித்து வடிகட்டிக்கொடுத்து அரத்தையைப்பொடித்து நாசியில் நசியமிட்டு ஒருரூபாயிடை சாம்பிராணி, ½-ரூபாயிடை கடுகு, புழுங்கல் அரிசி வகைக்குக் கால்ரூபாயிடை இவைகளைமுலைப்பால்விட்டு மைபோலரைத்து நெற்றியிற் பத்துபோடத்திரும்.

## மேற்படி வியாதிக்கு ஆவி.

வேப்பீர்க்கு, நொச்சி, உத்தாமணி, பேய்ப்பீர்க்கு, தும்பை இவைகளின்யிலை, எருக்கலம்பழுப்பு, சிறுகீரைவேர், இவைகளை ஓர்நிரையாயிடித்துத் தண்ணீரிற்போட்டு வேகவைத்திறக்கி தலையில்முக்காடிற்று ஆவிபிடித்துஆவியடங்கினதின்பின் ஒருசெங்கல்லைப்பழுக்கக்காய்ச்சி அதிற்போட்டு மறுபடியும் முன்போல ஆவி பிடித்தால் தேகம் வியர்த்து தலைப்பாரம் வாங்கும்.

## மேற்படிவியாதிக்கு ஒத்தணம்.

மாவிலிங்கம்பட்டை பலம்-5, ஆயிற்பட்டைபலம்-4, பெருமரத்துப்பட்டைபலம்-3, உகாய்ப்பட்டைபலம்-4½, இவைகளையிடித்து மூன்றுபங்குசெய்து நாளொன்றுக்கு மூன்றுதபாவறுத்து சிரசிலும்பிடரியிலும் ஒத்தணஞ்செய்ய மாறும்.

## விடாக்குளிர் சுரத்திற்கு.

கரிப்பான் ஒருபிடி, வேப்பீர்க்குஒருபிடி, ஒன்றாய் நறுக்கிக் காய்ந்தசட்டியிற்போட்டுப் பொன்னிறமாகவெதுப்பி அதில் ஒருபிடி மிளகுபோட்டு வறுத்து வெள்ளுள்ளி ஒருபூடு கிள்ளிப்போட்டு கரிப்பானிலை நொச்சியிலை வகைக்கொருகொட்டைப்பாக்களவு அரைத்துப்போட்டு நாழி தண்ணீர் விட்டுக்காய்ச்சி காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் இருபோதுகொடுக்கத்தீரும்.

## திரிதோஷ சுரத்திற்கு.

சந்தனம்,அதிமதுரம்,லவங்கம்,வெட்டிவேர், லாமிச்சைவேர்,மல்லி,சுக்கு,நிலவேம்பு,பற்பாடகம்,சீந்திற்றண்டு, செவியம், இவைகளை ஓர்நிரையாயிடித்து வேளை ஒன்றுக்கு ஒருபலத்தூளை இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக் காற்படியாய்வற்றவைத்து 6-வேளைகொடுக்கத்தீரும்.

## சன்னிசுரத்திற்கு.

நைதவேளைச்சாறு இஞ்சிச்சாறு வகைக்குப் படி-வ, தனித்தனியேமுரித்து ஒன்ருய்க்கலந்து அதில் திரிகடி ஒருதுட்டிடை தேன்கூட்டிக்கொடுக்கத்திரும்.

## சகலசுரத்திற்கும் பொதுப் பிரையோகம்.

முத்தெருக்கஞ்செவி, திரிபலை, கோரைக்கிழங்கு, சுக்கு, கடுகுரோகணி, நிலவேம்பு, சித்திரமூலம், செவியம், மூக்குரண்டி, சீந்தி, விஷ்ணுகாந்தி வகைக்குப்பலம்-1, இவைகளை யிடித்து 4-படிதண்ணீரிறபோட்டு காற்படியாய் வற்றவைத்து கொடுக்கவும் இந்தப்படி 6-போதுகொடுக்கத்தீரும்.

### இதுவுமது.

சித்திரமூலம் முத்தக்காசு அக்கிராகாரம் அதிமதுரம் கோஷ்டம் ஏலம் லவங்கம் திரிகடுகு திரிபலை வெப்பாலையரிசி பொரித்தசீரகம் மிளகுபற்பம் வகைக்கு விராகனிடை-3, இவைகளைச்சிதைத்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அறைக்காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி ஆறுபோது கொடுக்கத்தீரும்.

## சகலபழஞ்சுரத்திற்கும்நெய்.

வெள்வேல்வேர் கழற்சிவேர் நாயுருவிவேர்சிறுபூளைவேர் விஷ்ணுகாந்திவேர் வசம்பு பூடு வகைக்குக் கழஞ்சு-1, இவைகளையரைத்து ஒருபடி ஆவினெய்யிற்போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு கழஞ்சுவீதங்கொள்ளத்திரும்.

## விடாச்சுரம் வயிற்றெரிவு இருமல் சொரிசிரங்குக்கு நெய்.

ஆவிநெய் சுத்தசலம் வகைக்குப் படி-1, ஒன்ருய்க்கலந்து அதில்முந்திரிப்பழம் வெப்பாலையரிசி அத்தித்திப்பிலி கெந்தகம் அதிவிடயம் நெல்லி நிலவேம்பு லாமிச்சம்வேர் வில்வவேர் வகைக்குக்கழஞ்சு-1, இவைகளைத் தண்ணீரி லரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து நேரமொன்றுக்கு முக்கழஞ்சுவீதம்உண்டுவரத் தீரும்.

## சகலசுரத்திற்கும் கண்குளிர்ச்சிக்கும்நெய்.

சீராசெங்கழுநீர்ச்சாறு படி-4, நெய்படி-1, ஒன்ருய்க்கலந்து அதில்மஞ்சிட்டி தாமரைக்கிழங்கு ஏலம் இலவங்கம் கடுகுரோகணி கோஷ்டம் நன்னாரிவேர் மதுரம் சந்தனம் வகைக்குவிராகனிடை-1, இவைகளையரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குச்சாப்பிட்டு மேலிலும்பூச சகல சுரமுந்தீரும் கண்ணுங் குளிரும்.

## மாறற்சுரம் முறைக்காய்ச்சல் கடுங்காய்ச்சல் அதிசாரம் விஷசுரம் அஜீர்ணம் பூதசுரமுதலான சுரத்திற்கு எண்ணெய்.

வெருகங்கிழங்கு சிற்ருமுட்டி சிறுகாஞ்சொரி அவிரி சீராசெங்கழுநீர் துளசி நொச்சி பெருங்கரந்தை வகைக்குப்பலம்-10, தூட்செய்து 6 - மரக்கால் தண்ணீரிற்போட்டு எட்டொன்ருய் வற்றவைத்து வடித்ததில் கொம்பரக்கு பலம்-1, ஒருபடிநீரிற்போட்டு அரைபடியாய்வற்றவைத்து வடித்துவிட்டு நல்லெண்ணெய்படி-2, மோர் பதக்குக் கூடவிட்டு அரத்தை அதிமதுரம் முத்தக்காசு வெப்பாலையரிசி கோஷ்டம் வாய்விளங்கம் மஞ்சிட்டி திரிகடுகு கொடுவேலி ஓமம் மரமஞ்சள் கருவேப்பீர்க்கு கடுகுரோகணி சந்தனம் வால்மிளகு மஞ்சள் கஸ்தூரிமஞ்சள் லவங்கப்பட்டை சதகுப்பை செவியம் தக்கோலம் வெள்ளுள்ளி திப்பிலிமூலம் புகையூரல் சிறுதேக்கு வகைக்குப்பலம்-வ, இவைகளை மைபோலரைத்துப் போட்டு நாலுநாள் சிறுதீயாயெரித்து 5-ம் நாள் பதமாய்க் காச்சிவடி

த்து ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குக்கொடுத்து உடம்பிற் பூசி நசியமிடத்தீரும்.

---

## சீதசுரம் குளிர்காய்ச்சலுக்கும் உட்கொள்ளும் எண்ணெய்.

வெருகினிலை தண்டு கிழங்கு வில்வவேர் சாரணைவேர் சிற்றாமுட்டி பேராமுட்டி அமுக்குரா விஷ்ணுகாந்தி வகைக்குப்பலம்-1, இடித்துப் பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்ததில் நல்லெண்ணெய் படி ஒன்றுவிட்டு ஆவின்பால் மோர் வகைக்குப்படி-2, மரமஞ்சள் அதிமதுரம்மஞ்சிட்டி லாமிச்சம்வேர் நன்னாரிவேர் அரத்தை சந்தனம்வில்வப்பழச்சதை கோஷ்டம் திரிகடுகு திரிபலை தேவதாரம் அகிற்சந்தனம் வகைக்குக் கழஞ்சி-1, இவைகளை யரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலினும்பூசி நசியமிடத்தீரும்.

---

## சுரத்திற்குத்தைலம்.

வெருகங்கிழங்கு சமூலம் வகைக்குப் பலம்-10, குருந்தட்டி அமுக்குரா சீந்தி சத்திசாரணை இவைகளின்வேர் வகைக்குப்பலம்-3, இவைகளையிடித்து 4-மரக்கால்தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய்வற்றவைத்து அதில் ஆவின்பால் வெள்ளாட்டுப்பால் நல்லெண்ணெய் வகைக்குப் படி-2, கூடவிட்டு நன்னாரி சீந்தி சிறுகீரை சிற்றாமுட்டி வில்வவேர் அமுக்குரா இவைகளின்வேர் சுக்கு லவங்கம் இந்துப்பு குக்கில் சாரணைவேர் அதிமதுரம் கோஷ்டம் வசம்பு முத்தக்காசு சிற்றரத்தை தேவதாரம் மஞ்சள் திப்பிலி சந்தனம் லாமிச்சம்வேர் மிளகு லவங்கப்பத்திரி வகைக்கு கழஞ்சு - 1, வெள்ளாட்டுப்பாலிலரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து ஒன்றைவிட்டொருநாள் ஸ்நானஞ் செய்துவர விடாச்சுரம் வாதசுரம் பித்தசுரம் விஷசுரம் மூன்றுமாரல் இரண்டாமாரல் ஒன்றைவிட்டமாரற்சுரமுந் தீரும்.

## சுரத்திற்கு நசியம்.

குளிர்சுரம் அடிக்கும்போது சிறுதும்பையிலையையும் மிளகையும் ஒன்றாய்ச்சிதைத்து நாசியில்நசியம்பண்ணத்தீரும்.

## இதுவுமது.

திப்பிலியையும் வேலிப்பருத்தி யிலையையும் ஒன்றாய்ச் சிதைத்து நாசியில்நசியமிட்டாலும் அல்லது இந்துப்பூஉள்ளி கொம்பன் பாகயிலை இவைகளை ஒன்றாய்ச்சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் சுரதோஷந்தீரும்.

---

## சுரமுதலானதற்கு ஏலாதிமாத்திரை.

ஏலம் கிராம்பு சுக்கு திப்பிலி முந்திரிப்பழம் பேரீச்சம் பழம் தாளிசப்பத்திரி அதிமதுரம் கோஷ்டம் லாமிச்சம்வேர் மிலாக்காய்சந்தனம் லவங்கப்பத்திரி சாதிக்காய் சாதிப்பத்திரி கோரோஜனை இலுப்பைப்பூ சண்பகப்பூஷரிலைத்தாமரை வேர் வகைக்கு விராகனிடை-1, இவைகட்குநிகர் கடுரோகணிகூட்டி செவ்விளநீரால் இரண்டுசாமமரைத்துப் பரித்திவிரைப்பிரமாணம் உண்டைசெய்து உட்சுரம் அதிசாரசுரம் ஆமசுரம் வெப்பசுரம் இவைகட்கு முலைப்பாலிலும், தோஷசுரத்திற்கு குதிரவாலிக்கஷாயத்திலும் கொடுக்கத்தீரும். காசம் சுவாசகாசம் இரத்தகாசத்திற்கு தேனில்கொடுக்கத்தீரும்.

---

## சுரத்திற்கு குங்குமக் குளிகை.

குங்குமப்பூ பலம்-1, திரிகடுகு திரிபலை சாதிக்காய் கிராம்பு ஏலம் சந்தனம் தேவதாரம் கடுகுரோகணி வகைக்குப் பலம்-½, இவைகளை ஆறுஜாமம் எலுமிச்சம்பழச் சாற்றிலும், நாலுஜாமம் இஞ்சிச்சாற்றிலும், இரண்டுஜாமம் கண்டங்கத்திரிப்பழச்சாற்றிலும் ஆட்டிச் சிறுபயாளவு வுண்டை செய்துக்கொண்டு அனுபானங்களிலிட குளிர்சுரமுதலான சன்னி சுரந்தீரும்.

---

## சுரத்திற்குக் கோரோஜனக் குளிகை.

கோரோஜனை குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம்ரசசெந்தூரம் ரசகர்ப்பூரம் ஏலம் அப்பிரகசெந்தூரம் கிராம்பு கோஷ்டம் சாதிக்காய் அக்கிராகாரம் வகைக்குக்கழஞ்சு-3, சந்தனக்கஷாயத்தில் 4-ஜாமமும் சண்பகப்பூகஷாயத்தில் 2-ஜாமமும் குங்குமப்பூக் கஷாயத்தில் 2-ஜாமமும் அரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து நிழலிலுலாத்தி முலைப்பாலிலிட தொண்டைக்கட்டுசிலேத்மம் 96-ம், ஜன்னி 13-ம், மண்டைச்சூலை நீர்த்தோஷம் மயக்கம் சிலேத்மசுரம் வலிப்பிசிவு தீரும்.

---

## சுரத்திற்குச்சஞ்சீவிமாத்திரை.

இரசச்செந்தூரம் லிங்கம் தாரம் பூரம் கெந்தி ரஸபஸ்மம் நாவிக்கிழங்கு கிராம்பு பத்திரி ஏலம் திரிகடுகு திரிபலை வாளம் வகைக்குப்பலம்-½, நிம்பக்காய்ச்சாற்றில் ஒருஜாமம் முலைப்பாலில் இரண்டு ஜாமம் குமரிச்சாற்றில் நாலுஜாமம் கொன்றைப்பூச்சாற்றில் நாலுஜாமம் ஆட்டிக் குன்றிப்பிரமாணம்உண்டைசெய்து முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்க ஜன்னிதோஷசுரங்கள் தீரும்.

---

## சுரத்திற்கு ரசகர்ப்பூரமாத்திரை.

சுத்திசெய்தரசகர்ப்பூரம் பலம்-வ, வாளம்பலம்-1, அளிஞ்சிவேர்பட்டை கொடுவேலிவேர்பட்டை வகைக்குப் பலம் வ, கையாந்தகரைச்சாற்றிலும் முலைப்பாலிலும் வகைக்கு 2-ஜாமம்ஆட்டித் துவரைப்பிரமாணம் மாத்திரைசெய்துக்கொண்டு தேனிற்கொடுக்க சகலசுரமுந்தீரும்.

---

## சுரத்திற்கு இரதமாத்திரை.

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகுரோகணி, இரசபஸ்பம் வகைக்குக் கழஞ்சு-1, வாளம் கழஞ்சு-7, இவைகளை யெலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து மிளகுப்பிர

மாணம்உண்டைசெய்து ஒருண்டையை அனுபானத்தி லிட விரேசனமாகிக் குளிர்சுரந்தீரும், பேதியதிகமானல் குளிர்ந் ததண்ணீர்கொள்ளவும் மீறினல் பாலும் அன்னமுங் கொள் ளவும்.

## சுரத்திற்கு லிங்கமாத்திரை.

லிங்கம் கழஞ்சு-4, திப்பிலி கழஞ்சு-2, ஆவின்பாலால்அ ரைத்துப் பயர்ளவு உண்டைசெய்துக்கொண்டு சுக்குகஷாய த்திலிட சகலசுரமுந்தீரும்.

## தாளகமாத்திரை.

தாளகத்தைச் சிறுதுண்டுகளாய் வெட்டி சுண்ணும்புக் குட் பத்துதபாவைத்து தேசிநீர்விட்டு நீற்றியபின் துணியில் முடிந்து சுண்ணும்புத்தண்ணீருக்குள் தொங்கவைத்து இர ண்டுசாமமெரித்துச் சுத்திசெய்த தாளகம் விராகனிடை-6, புகையூரல் நீற்றுதகற்சுண்ணம் வகைக்குவிராகனிடை-3, இ வைகளை முலைப்பாலி லிரண்டுசாம மரைத்துக் குன்றிபோலு ண்டைசெய்து வேளையொன்றுக்கு ஓருண்டையாக இரண்டு வேளை வெல்லத்திற்கொடுத்து 6 - நாள் உப்பு புளித்தள்ளிப் பத்தியமாயிருந்து எட்டாம்நாள் தலைக்குத் தண்ணீர் வார்த் து உப்பு வறுத்துக்கூட்டவும் சுரம் 64-ம் தீரும்.

## சுரத்திற்குப் பச்சைகர்ப்பூரவுண்டை.

ரசபற்பம் கெந்தகம் பச்சை கர்ப்பூரம் லவங்கம் ஜாதிக் காய் சேர்வாளம் இவைகளை யோர்நிரையாய்க் கற்றாழம்பால் வார்த்தரைத்து உளுந்துப்பிரமாணம் உண்டை செய்து ஒரு ண்டையைச் சர்க்கரைக்கலந்து சாப்பிடச் சகலசுரமும் உட னேதீரும்.

## இரண்டாமுறை மூன்றுமுறைக் குளிர்சுரமுதலான சகலசுரத்திற்கு அஞ்சனம்.

இரண்டுகழஞ்சி சீந்திற்பூவை எலுமிச்சம்பழச் சாற்றால் மைப்போலரைத்து மண்வெட்டிப் பின்புறத்தில் அப்பிவை

த்து விளக்கில் நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி மைப்பற்றவைத்து அதை வெங்கலவட்டித்தூரிவிட்டுக் கொஞ்சம்நல்லெண்ணெவிட்டு இருப்புக்குழவியாற் களிம்புபோலரைத்து கொம்புச் சிமிளிலடைத்துக் கொண்டு பனிவிடை கண்ணிற்றிட்டத்தீரும்.

---

## சகலஜன்னிக்கும் பொதுப்பிரையோகம்.

எருக்கு சிறுகிரை குப்பைமேனி பிராய் இவைகளின் வேர் முருங்கைப்பட்டை வெள்ளைப்பூடு இவைகளை யோர்நிறையாய் முலைப்பாலிலரைத்துக் குழப்பி வெயிலில் வைத்து சீலையிலூட்டிப்பிழிந்து உள்ளுக்குக்கொடுத்து நாசியில்நசியமிடத்தீரும்.

---

## ஜன்னி 18-க்குந் தயிலம்.

வேப்பெண்ணெய் படி-1, விளக்கெண்ணெய் படி-½, நல்லெண்ணெய் படி-௮, ஒன்றாய்க்கலந்து அதில் வெப்பூலா துளசி சன்னிநாயகம் வேலிப்பரித்தி அமுக்குரு நாய்க்கடுகு தைவேளை எருக்கு சிவதைநாரத்து ஆதண்டைகுப்பைமேனி ஈசுரமூலி பிரண்டை நொச்சி கொடிவேலி இவைகளின்வேர்ப் பட்டையை அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரிதாரம் வெங்காரம் திப்பிலி கருஞ்சீரகம் ஓமம் கொத்துமல்லி கடுகு மிளகு வெள்ளுள்ளி கிராம்பு ஜாதிக்காய் வசம்பு வெளிச்சிப்பிசின் பெருங்காயம் துருசு நேர்வாளம் அக்கிராகாரம் நீர்வெடிமுத்து பூநாகம் வகைக்குக்கழஞ்சு-1, இவைகளை யரைத்துப்போட்டு காய்ச்சிவடித்து உடம்பெங்கும் பூசத்தீரும்

## ஜன்னி வலிப்பு தோஷம் பட்சவாதம் நரம்புத் திமிர்வாதம் வாயுவுக்கு விஷமுஷ்டித் தயிலம்.

எட்டிப்பழச்சாறு படி-8, முருங்கைவேர் வேலிப்பரித்தி எலுமிச்சம்பழம் சிற்றாமணக்கிலை வெதுப்படக்கி புளியிலை உகாயிலைஇஞ்சி மருதோன்றி சங்கங்குப்பிவாதமடக்கிமுடக்

கொத்தான் இவைகளின்சாறு வகைக்குப்படி 4, மதுரம்கோஷ்டம் வெள்ளுள்ளி தேவதாரம் வசம்பு இந்துப்பு கொடுவேலிவேர் சதகுப்பை ஓமம் திரிகடுகு கடுக்காய்வகைக்குப்பலம் ½, இவைகளை ஷெ சாற்றிலரைத்துப்போட்டுஆவின்பால்படி 4, நெய்படி-2, சிற்றாமணக்செண்ணெய்படி-4, நல்லெண்ணெய்படி-8, ஒன்றாய்விட்டுக்கலந்து எரித்துப் பதத்தில் வடித்து மேலிற்பூசத்தீரும்.

## ஜன்னிசுரத்திற்கு மதுராதித் தயிலம்.

அதிமதுரம் வேப்பம்பட்டை விராலித்தோல் வேப்பம்பிசின் திராய்வேர் ஊமத்தின்வேர் குன்றிவேர் மேனிவேர் இந்துப்பு வகைக்குவிராகனிடை-1, ஆடாதோடைச்சாற்றிலரைத்து ஒருபடிநல்லெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து உள்ளுக்குங்கொடுத்து மேலினும்பூசத்தீரும்.

## ஜன்னிபதிமூன்றுக்கும் புறவீச்சு உள்வீச்சுக்கும் லிங்கமாத்திரை.

துருசு பொரிகாரம் துத்தம் வகைக்கு விராகனிடை-3, இவைகளை யெருக்கம்பால்விட்டரைத்து எட்டுவிராகனிடை லிங்கத்தை கவசஞ்செய்து அதின்மேல் கரியுப்பை ஷெபாலிலரைத்து கவசஞ்செய்து உலர்த்தி இரண்டுபடி மணலுக்கு மத்தியில்வைத்து எட்டெருவில் புடம்போடவும் இந்தபடி மூன்றுதபா புடம்போட்டுக் கவசம்நீக்கி லிங்கத்தைக் கோசலத்தில்கழுவி அதினுடனே சுத்திசெய்த பொரித்த வெங்காரம் விராகனிடை-3, கூடக்கூட்டி முலைப்பாலிலரைத்து ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்துக்கொண்டு இஞ்சிச்சாற்றில் ஒருண்டைவீதம் 6-போது கொடுக்கத்தீரும்.

## ஜன்னி தலைவலிக்கு மாத்திரை.

நற்சீரகம் கருஞ்சீரகம் அசமதாகம் திப்பிலிகிராம்புவசவாசி அதிவிடையம மஞ்சில் பெருங்காயம் அதிமதுரம்வாய்விளங்கம் வேர்க்கொம்பு இவைகளை ஓர்நிறையாய்க் கழற்சி

யிலைச்சாற்றில் மைபோலரைத்துக் குன்றிபோ லுண்டைசெய்து ஒஷி சாற்றில் ஓருண்டைகொடுக்க ஜன்னிதீரும், நொச்சிச்சாற்றிலிட தலைவலிதீரும்.

## ஜன்னி பதிமூன்றுக்குக் காலாந்தவயிரவன்.

இரதபற்பம் சொர்னபற்பம் வகைக்குக் கழஞ்சு-1, சங்குகெந்தகம் முத்து வகைக்குக்கழஞ்சு-2, வெங்காரம்கழஞ்சு ½, கொடிவேலிவேர்க்கஷாயத்தில் இரண்டுநாள் விடாமலரைத்து உண்டைசெய்து நிழலி லுலர்த்தி யொரு பாண்டத்திற் குறுணிஉப்பிட்டு அதின்மத்தியில்வைத்து வேலும் குறுணிஉப்புப்போட்டு நாலுஜாமமெரித்து நன்றுய்ஆறினபின் எடுத்து நாலுகுன்றியிடை பற்பமும் பத்து மிளகையும் பத்து திப்பிலியையும் வெதுப்பிப்பொடித்ததூளும் அரைக்காற்படி இஞ்சிச்சுரசத்தில் மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

## ஜன்னி பதிமூன்றுக்கும் மாத்திரை.

காந்தம் சூதம் கெந்தி மனோசிலை செம்பு பற்பம் லிங்கம் வகைக்குப்பலம்-10, பெருங்காயம்பலம்-10, வெள்ளுள்ளிபலம்-1, இவைகளைக்குமரிச்சாற்றால் மூன்றுநாளாட்டிக் குப்பியிலடைத்து வாயை மரந்கல்லால்மூடி வலுவாய்ச் சீலைமண்செய்து மணல்மேல்வைத்து முத்தீயும் மூன்றுநாளெரித்து ஆறவிட்டெடுக்கச் செந்தூரமா யிருக்கும் அதில் திப்பிலிமூலம் சாதிப்பத்திரி கடுகுரோகணி வகைக்குப்பலம்-வ, வீதங்கூட்டி வெண்கருவாலாட்டிக் குன்றிபோற் குளிகைசெய்து முள்ளிச்சாற்றிற்கொடுக்க ஜன்னி பதிமூன்றுந்தீரும்.

## சகலஜன்னி சுரம் தோஷம் வலிப்பு இளைப்பு சூலைக்கு பூபதிமாத்திரை.

லோகம் காந்தம் தாம்பிரம் அப்பிரகம் வெள்ளி சொர்னம் லவங்கம் வெண்கலம் பித்தளை இவைகளின் பற்பங்களை ஓர்நிறையாகக் குமரிச்சாற்றில் நாலுஜாம மாட்டி நிழலி லுல

ர்த்தி முன்போற் குப்பிக்கேற்றி 12 - ஜாமமெரித்து தீயாற்றி யெடுத்துவைத்துக்கொண்டு திரிகடுகுப்பொடியும் தேனுங்கூட்டிமத்தித்து அதில்பணவிடை வைத்துக்கொடுக்கத் தீரும், கரும்பு இளநீர் சர்க்கரை பால் தயிர் மோர்கூட்டிப்பத்தியங் கொள்ளலாம் உப்புப்புளி தள்ளவும்.

## மூலமுளைக்கும் மூலக்கடுப்புக்கும்.

மருதம்பட்டை பலம்-வ, அரைத்து அரைக்கால்படி ஆவின்பாலிற்கலக்கி மூன்றுநாட்கொடுக்க மூலமுளை கரையும், கடுப்புத்தீரும்.

## இரத்தமூலத்திற்கும் மூலமுளைக்கும் எண்ணெய்.

பூநாகம்பலம்-4. நாராகரந்தையிலை வில்வக்காய்ப்பிரமாணம் இவைகளை அரைத்து அரைப்படிநல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து ஐந்துநாள் இருபோது ஒரு கரண்டி வீதங்கொள்ளத்தீரும்.

## உள்மூலம் இரத்தமூலம் சீதக்கழிச்சலுக்கும்.

ஒருபிடி மூவிலைமின்னியை குருவை நெல்லரிசியுடன் கூட்டிஅரைத்து அடைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

## இதுவுமது.

மரட்கிழங்கை குருவை நெல்லரிசியுடன் சேர்த்திடித்து சுக்கு மிளகு திப்பிலி பூடு ஓமம் வகைக்குப்பலம்.அரைக்கால் பொடித்துப் போட்டுப் பிசைந்து களிக்கிண்டியாவது ஆவினெய்யில் அடைசுட்டாவது மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

## மூலரோகம் ஷை. முளைக்கு.

காட்டுக்கரணைக்கிழங்கு கழஞ்சு - 16, சுக்கு கழஞ்சு-4, கொடுவேலிவேர் மிளகு வகைக்குக் கழஞ்சு - 2, இவைகளைச்

சூரணஞ்செய்து கழற்சிக்காய்ப் பிரமாணம் நல்லெண்ணெயிற்குழைத்து இருபோது ஏழுநாட்கொள்ளத்தீரும், புளி தள்ளவும்.

## உள்மூலம் பிரமூலத்திற்கு.

மூக்குரட்டையிலையை பெனுமிச்சங்காய்ப்பிரமாணம்அரைத்துக் கருங்குருவை மாவில்பிசைந்து அடைதட்டி நெய்யில்வேகவைத்து 5-நாள்கொடுக்கத்தீரும்.

## மூலக்கடுப்பு இரத்தமூலத்திற்கு.

அரைக்காற்படி ஓமத்தை ஏழுதடவை வருத்துத்தேய்த்துஉமிப்போக்கி அதினுடன் இரண்டுவிராகனிடைவசம்பைச் சுட்டசாம்பலையுங்கூட்டி தேனில்மத்தித்து வேளையொன்றிற்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் கொள்ளத்தீரும்.

## மூலவாயு மூலம் உதரரோகம் வலிகுன்மம் பயித்தியவாயு ஜன்னிவாயு உடம்பு வியர்வை பசிமந்தத்திற்கு.

திப்பிலி பலம்-6, சுக்கு மிளகு திப்பிலி மூலம் செவியம் சித்திரமூலம் கடுகு வாய்விளங்கம் கருஞ்சீரகம் அசமதாகம் இந்துப்பு வெடியுப்பு சவுக்காரம் கொத்தமல்லி சதகுப்பை அதிமதுரம் வெப்பாலைபரிசி சாதிப்பத்திரி கிராம்பு தாளிசப்பத்திரி லவப்பத்திரி வகைக்குப்பலம்-3, இவைகளை வெதுப்பிச்சூரணித்து அதற்குப்பாதி சீனிகூட்டி திரிகடிப்பிரமாணம் தேனிற்குழைத்து 10-நாட்கொள்ளத்தீரும்.

## பித்தமூல கிராணிக்குணம், மலஞ்சிறுத்துக்கழியும் பலவிதமாய்நாறும், சிலேத்மமூலகிராணிக்குணம், உதிரமாயும் வெண்மலமாயுங்கழியும் காற்றுபரியும், இவைகட்கு நிவர்த்தி.

திப்பிலி, சுக்கு, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, இந்துப்பு ஏலம், சீரகம், பெருங்காயம், வெள்ளாம்பிசின், மாம்பிசின், இல

வம்பிசின், முத்தக்காசு, புளியவிரைத்தோல், மாதுளந்தோல் அபின், வகைக்குவிராகனிடை -க, பொடித்து இதற்கு நிகர் சுத்திசெய்த கெஞ்சாத்தூள் கூட்டி வேளையொன்றுக்கு ஒரு விராகனிடைவீதம் தேனிற்கொள்ள மூலகிராணி தீரும்.

## சகல கிராணிக்கும்.

இந்துப்பு — திப்பிலி
காயம் — ஓமம்
வளையலுப்பு — மிளகு
வெள்ளுள்ளி — சவுட்டுப்பு
சுக்கு — சித்திரமூலம்

இவைகளைப் பிரமிச்சாற்றிலாவது, எலுமிச்சம் பழச்சாற்றிலாவது, அரைத்துக்கொண்டு ஒருஉடும்பை தலை கால் குடல் தோல்நீக்கி அதின்வயிற்றுக்குள் வைத்துத் தைத்து மட்க்கிக்கட்டிப் பிட்டுபோலரைத்துக் காயவைத்து இடித்துச் சூரணம்பண்ணி திரிகடிப் பிரமாணம் ஒருமண்டலங் கொள்ளத்தீரும்.

## இதுவுமது.

கோவைத்தண்டை இடித்து மேற்றொலியைத்தள்ளி நீரில்லாமல்வருத்துத் தூட்செய்து ஓமத்தைவருத்துத்தேப்த்து சூரணித்து இருவகையும் ஓர் நிரையாய்க் கலந்து நல்லெண்ணெயிற் கொட்டைப்பாக்குப்பிரமாணம் கொள்ளத்தீரும்.

பத்தியம் பாலுஞ்சோறுங் கொள்ளவும்.

## சீதம்விழுவதற்கு.

அமுக்குருவேரும் இந்துப்பும் சமமாய்ப் பொடித்துத் தேனில்மத்தித்துக் கொடுக்கத்தீரும்.

## வெள்ளைக்கழிச்சலுக்கு.

வெண்குன்றிப்பருப்பும் புளியவிரைத்தோலும்வகைக்கு விராகனிடை-க, வீதம் மைபோற பொடித்து எருமைவெண்ணெயிற்குழைத்துண்ணவும், இந்தப்படி 6-போது கொள்ளத்தீரும்.

## வயிறு இரைந்து கழிதலுக்கு.

திரிகடி வெந்தயத்தை நல்லெண்ணெய்விட்டு வருத்துச் சிவந்துவருகிறபருவத்தில் ஆவரையிலையொருபிடி கூடப்போட்டு வருத்துக் கருகிவருகிறபதத்தில் எருமைமோர் ஒருபடி விட்டுக்காய்ச்சி யிறுத்துக்கொடுக்கத்தீரும்.

## கழிச்சல்சுரத்திற்கு அபின்மாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அபின் | விராகனிடை | 6 | சீரகம் | விராகனிடை | 9 |
| சுக்கு | ,, | 7 | மிளகு | ,, | 10 |
| திப்பிலி | ,, | 8 | | | |

இவைகளை விஷ்ணுமூலிக்கஷாயத்தால் நாலுஜாமமரைத்துக் குன்றிபோ லுண்டைசெய்துக்கொண்டு வில்வம் விஷ்ணுமூலி சீரகம் வெற்றிலைக்காம்பு இவைகளை ஓர் நிரையாய்க் கியாழஞ்செய்து அதில் ஒருகுளிகைவீதம் 6-வேளைகொடுக்க சுரம் கழிச்சல் தாபசுரம்நீங்கும், புளிதள்ளவும் இதைச்சிறியோருக்கும் பெரியோருக்கும் உபயோகப்படுத்தலாம்.

## கழிச்சலுக்கு.

விளாம்பிசினைப் பொடித்து எருமைத்தயிரில் மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

## சகலகழிச்சலுக்கும் காந்தசெந்தூரம்.

காந்தம் பலம்-4, ஆவுரைவேர்ப்பட்டை பலம்-4, இவைகளைப்பொடித்துக் கற்றாழைமடல் தண்ணீர்வார்த் தரைத்து பில்லைதட்டிக் காயவைத்துச் சட்டியிலிட்டு சீலைமண்செய்து நாலுஜாமம் தீயெரித்து ஆற்றியெடுக்கச் செந்தூரமாகும் அதில்பணவிடைவீதம் அனுபானங்களிற்கொடுக்கத்தீரும்.

பத்தியம் எருமைப்பால் மோர்கூட்டிக்கொள்ளலாம்.

## வயிற்றுக்கடுப்பு கழிச்சலுக்கு.

ஓமம் மிளகு வகைக்குப்பலம்-1, ஓர்நிரையாய் வெதுப்பிப்பொடித்து வெல்லம்பலம்-1, கூட்டியரைத்துத் திரிகடிப் பிரமாணம் 10-நாட்கொடுக்கத்தீரும்.

## வயிற்றுக்கடுப்பு வாய்வுக்கு.

சுக்கு திப்பிலி மிளகு ஓமம் உப்பு கருவேப்பிலை பெருங்காயம் சுண்டைவற்றல் இவைகளை யோர்நிரையாய் வெதுப்பி பொடித்துச் சுடுசோற்றில் திரிகடிப்பிரமாணம்தூவி நெய்வார்த் துண்ணத்தீரும்.

## ஆசனக்கடுப்புக்குப் புகை.

ஆமையோட்டைப்பொடித்து தணலிற்றூவி அபானவாயிற்புகைபிடிக்க கடுப்புஉடனேதீரும்.

## வயிற்றிரைச்சல் கடுப்புக்கு.

இரண்டுவிராகனிடைசுக்கை மோர்விட்டு மைபோலரைத்து அரசிலையில்வைத்துத்தைத்து மோரில் 7-தபா வேகவைத்து வடிகட்டினதயிரிற்குழைத்துண்ணத் தீரும்.

## சுரத்தின்பேரிற் காணும் கடுப்புக்கு.

நெற்பொரிமா ஆவின்வெண்ணெய் கற்கண்டு நற்சீரகத்தூள் இவைகளை யோர்நிரையாய் ஒன்றாய்ப்பிசைந்து விளாங்காய்ப்பிரமாணம் 6-வேளை சாப்பிடத்தீரும்.

## சகலகிராணி அதிசாரம் வயிற்றிரைச்சல் கழிச்சல் சீதம் இரத்தம்விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்புக்கு.

| | |
|---|---|
| சுண்டைவற்றல் | மாதுளம்பழத்தோல் |
| கருவேப்பிலை | நெல்லிமுள்ளி |
| மாம்பருப்பு | வெந்தயம் |
| ஓமம் | |

இவைகளைச் சமமாய்வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப் பிரமாணம் தயிரிற்கொள்ளத்தீரும்.

### இதுவுமது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரிகடுகு | விராகனிடை- | க | அதிவிடையம் | விராகனிடை- | க |
| ஓமம் | ,, | க | கிராம்பு | ,, | க |
| ஜாதிக்காய் | ,, | க | அக்கிராகாரம் | ,, | க |
| ஜாபத்திரி | ,, | க | அபின் | ,, | ௪ |

இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டை செய்து எருமைத்தயிரி விடத் தீரும்.

இதுவுமது.

| | |
|---|---|
| மாதுளம்பழத்தோல் | வில்வப்பிஞ்சு |
| விளாம்பிஞ்சு | காட்டாத்திப்பூ |
| கடுகு | பொன்முசுட்டைவேர் |
| முத்தக்காசு | புளியவிரைத்தோல் |
| லவங்கம் | இலவம்பிசின் |
| ஓமம் | குராசானிஓமம் |
| திரிகடுகு | வெப்பாலையரிசி |
| ஆனைத்திப்பிலி | நாவற்பட்டை |
| பெருமரத்துப்பட்டை | லவங்கப்பட்டை |
| மாம்பருப்பு | கழற்பருப்பு |
| கருங்காலி | வயிரம் |
| வெள்ளிலோத்திரம் | நீர்முள்ளிவிரை |
| அதிவிடையம் | கருஞ்சீரகம் |
| நற்சீரகம் | காசுக்கட்டி |

இவைகளை ஓர்நிரையாய்ப்பொடித்து நெல்லிக்காய்ச்சாற்றாலாட்டிக் கழற்சிக்காய்ப் பிரமாணம் உண்டை செய்துக்கொண்டு தயிரிற்கொள்ளத்தீரும்.

## புளித்தேப்பத்திற்கு.

வசம்புசுட்டசாம்பல், வறுத்தகரியுப்பு, பெருங்காயம், இவைகளையோர்நிரையாய்ப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் மோரிலாவது வெந்நீரிலாவது கொள்ளத்தீரும்.

## ஊஷ்ண வாயுவுக்கு.

பிரண்டை ஓமம் கருவேப்பிர்க்கு கரியுப்பு வகைக்குப் பலம்-1, வறுத்து மூன்றுபடி எருமைமோர்விட்டு ஒருகொதிவந்தபிறகு இறக்கிவைத்துக்கொண்டு சாப்பிட்டுவரத் தீரும்.

## அஜீரணவாயுவுக்கு.

சுக்கு
திப்பிலி
மிளகு
அசமதாகம்
இந்துப்பு
நற்சீரகம்
பெருங்காயம்

இவைகளை யோர்நிறையாய்ச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் அசனத்திற் பிசைந்து ஆவினெய்விட்டு உண்ணத் தீரும்.

## மந்தவாயுவுக்கு.

சீரகம் ஏலம் பச்சைக்கர்ப்பூரம் இவைகளை யோர்நிறையாய்ச்சூரணித்து அதற்கு நிகர் சீனிகூட்டித் திரிகடி அந்திசந்திகொள்ளத்தீரும்.

## பித்தவாயுவுக்கு.

லவங்கம்
திரிகடுகு
முத்தக்காசு
சிறுநாகப்பூ
திரிபலை

இவைகளை ஓர்நிரையாய்ச்சூரணித்து அதற்குநாலிலொன்று ஆவின்பாலிற்சுத்திசெய்த சிவதைசூரணங்கூட்டிவேளையொன்றுக்கு முக்கழஞ்சு தேனிற்கொள்ளத்தீரும்.

## இதுவுமது.

கடுக்காய்
திப்பிலி
சுக்கு
சீரகம்
ஓமம்
இந்துப்பு
நறுக்குமூலம்

வகைக்குப்பலம் - 1, இவைகளைப் பொடித்து ஒருபலக் கருப்புக் கட்டியைப் பாகுசெய்து அதிற்றாவிக் கிண்டி நேரமொன்றிற் கொருகழற்சிக்காய்ப்பிரமாணங் கொள்ளத்தீரும்.

## வாயுவச்சூலைக்கு.

திரிகடுகு இந்துப்பு ஓமம் இவைகளைவெதுப்பிப் பொடித்துத் திரிகடிப்பிரமாணந் தேனிற்கொள்ளத்தீரும்.

## ஆனந்தவாயுவுக்கு.

தும்பையிலையை எலுமிச்சங்காயளவு அரைத்துப் பழச் சாற்றில்கலக்கிக் கொடுக்கத்தீரும்.

## இதுவுமது.

ஒருஎலுமிச்சங்காயளவு இலுப்பைப்பிண்ணாக்கைஆழாக்கு ஈருள்ளிச்சாற்றில் ஊறப்போட்டு வெதுப்பிக்கொடுக்கத் தீரும்.

## வாயுவுக்குத்துக்கு.

| | |
|---|---|
| கொடுவேலிப்பட்டை | சுக்கு |
| பரங்கிப்பட்டை | பிரப்பங்கிழங்கு |

இவைகளை வகைக்குவிராகனிடை-3, வீதஞ் சிதைத்து நாலுபடிசலத்திற்போட்டு எட்டொன்ருய்க் கியாழஞ்செய்து நாளொன்றிற்கு மூன்றுநேரங்கொடுக்கத்தீரும்.

## வாயுப்பொருமலின்குணம்.

வாயுப்பொருமி அக்கினிமந்தித்து உண்ட அசனத்தை வாந்திக்கும் புளித்தேப்பமிடும் காற்றுப்பரியும்.

## நிவர்த்தி.

பத்துவிராகனிடைசுக்கை வேலிப்பருத்திச்சாற்ருல்மைப்போலரைத்து பில்லைதட்டி ஒரு சட்டியில் இரண்டு விரற்கனம் உப்பைப்பரப்பி அதின்மேல் பில்லையை வைத்து அதின்மேலும் முன்போல் உப்பைப்பரப்பி ஓடுமூடிச் சீலைமண்செய்து நாலுபெருவில் புடம்போட்டுப் பொடித்துத் தேனிற்கொள்ளத்தீரும்.

---

## குண்டலவாயுவுக்குணம்.

வாயுமிகுத்துக் கூப்பிட்டோடித்திரிந்து வயிற்றில்வந்து கற்போற்றிரளும் மறுபடியும் சிதறி உடம்பெங்கும் பரந்து பின்வந்துஅடங்கும் தீபனத்தை மிகவடுக்கும்.

## குடகரி வாயுவுக்குணம்.

வாயுஅதிகரித்து குடல் முதுகு நெஞ்சு விலா முதலான இடங்களிலோடிப் புடைத்துப் புரண்டு அழன்று வலிக்கும் உடலபரும் மலங்கருகும்.

## அஜுகதவாயுவுக்குணம்.

மென்மேலும் உண்பதினாலும் நொந்தஅன்னம்ஊசக்கறி புசித்தாலும் மலங்கட்டினாலும் வாயுஅதிகரித்து வயிறுபொருமி வாந்தி பிராந்தியாகும்.

## அத்தருவாயுவுக்குணம்.

அக்கினிமந்தித்து சீரணமாகாமல் உண்டவண்ணமாய்ப் பிரவர்த்திக்கும் புளித்தேப்பம் வாந்தி தாகம் காணும் வாயு தரிக்காமற்பரிந்துகொண்டிருக்கும்.

## துடிவாய்வுக்குணம்.

வாயு அடிக்கடி உடலிற்பரந்தோடித் துடித்தூச்சிலநேர மடங்கியிருக்கும் நாடோறுமதிகரித்து இப்படியே சேட்டை மிக்ச்செய்யும் குடல்வாய்வு புரண்டு வலித்துக்குமுறி யிரையும் அலைபோறகலக்கும் மந்திக்கும்.

## சகலவாய்வுக்கு.

வேப்பீர்க்கு மூக்கரைச் சாரணைவேர் கருவேப் பீர்க்கு முருங்கையீர்க்கு வகைக்கொருபிடி, சுக்கு, மிளகு, மஞ்சள் வகைக்குவிராகனிடை-3, இவைகளைச்சிதைத்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துபோசனத்தின்பேரில் சாப்பிட்டுவரத்தீரும்.

## இதுவுமது.

| | |
|---|---|
| சீரகம் | இந்துப்பு |
| ஓமம் | திரிகடுகு |
| கருஞ்சீரகம் | பெருங்காயம் |

இவைகளை யோர்நிறையாய்வெதுப்பிச்சூரணித்துத்திரிகடிப்பிரமாணம் தேனிலாவது நெய்யிலாவதுஉண்ணத்தீரும்.

## இதுவுமது.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வெள்ளுள்ளி |
| ஓமம் | வாலுளுவையரிசி |

இவைகளை யோர்நிறையாய் வெதுப்பி பனைவெல்லங்கூட்டி மெழுகுபோல் அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

## இதுவுமது.

| | |
|---|---|
| நற்சீரகம் | கருஞ்சீரகம் |
| திரிகடுகு | ஓமம் |
| பெருங்காயம் | |

இவைகள் வகைக்குப் பலம்-வ, வெதுப்பிச் சூரணித்து கரியுப்பை எருக்கம்பழுப்பிலைச்சாற்றாலரைத்து 4-அல்லது, 6-புடம்போட்டு பஸ்மம்பண்ணி யதை ஷை சூரணத்துக்கு நிகர்கூட்டித் திரிகடிப்பிரமாணம் 7-நாட்கொள்ளத்தீரும்.

## இதுவுமது.

| | |
|---|---|
| செவியம் | கொடுவேலிவேர் |
| திப்பிலி | கண்டத்திப்பிலி |
| சுக்கு | |

இவைகளை வகைக்குவிராகனிடை-3, சிதைத்துஇரண்டு படி தண்ணீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்து அதில் ஜாதிலிங்கத்தைஉரைத்துக்கொள்ளத்தீரும்.

## இதுவுமது.

| | |
|---|---|
| மிளகு | ஓமம் |
| வெந்தயம் | சீரகம் |
| தைவேளைவேர் | |

இவைகளை வெதுப்பிப் பொடித்துத் தேனிற்கொள்ளத் தீரும்.

## வாய்வுக்கு விரோசனம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிளகு | கழஞ்சு | 1 | கடுக்காய் | கழஞ்சு | -15 |
| இந்துப்பு | ,, | 1 | சத்திசாரணைவேர்சூரணம் | | -10 |
| நற்சீரகம் | ,, | 2 | சுக்கு | விராகனிடை | -5 |
| ஓமம் | ,, | 3 | அரிசிவதை | ,, | 5 |
| திப்பிலி | ,, | 4 | | | |

இவைகளை நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணங்கொள்ள விரோசனமாகி வாய்வுதீரும்.

# ஏழாம்பாகம்.

## முற்றிற்று.

இனி எட்டாம்பாகம்.